
# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

ஏப்ரல் – ஜூலை 2019

57



POOSHANAM
K. S. SIVAGNANARAJAH
VICE PRINCIPAL
ROAD

விலை : 150/

# செயல்

பிறருடைய குழந்தைகளுக்காக
அக்கறைப்படுவோரின் பெயரால்
(தாயன்பாயும் அவமானங்களாயும்
அவர்களின் உழைப்பாற்றலை விற்றலும்)

இன்னொருவருடைய வீட்டில் சீவிப்பது
என்பதன் பெயரால்
(அது அன்பான வயிறுமல்ல மாறாக
ஒரு கல்லறை அல்லது சிறைச்சாலை)

இன்னொருவருடைய உணவுத் துணிக்கைகளை
உண்பதன் பெயரால்
(திருட்டு உணர்வுடன் மென்றவாறு)

பிறருடைய நிலத்தில் வாழ்வதன் பெயரால்
(வீடுகள், தொழிற்சாலைகள், கடைகள், வீதிகள்,
நகரங்கள், ஆறுகள், குளங்கள், எரிமலைகள், மலைகள்
எல்லாம் எப்போதும் பிறர்க்கே உரியன. அதனாலேயே
பொலீசாரும் காவலாளிகளும் அவர்களை
எங்களிடமிருந்து பாதுகாக்கிறார்கள்)

பசியும் சுரண்டலும் நோயும் நீதிக்கும் தண்ணீருக்குமான அவாவும்,
துன்புறுத்தல்களும் கண்டனங்களும் தனிமையும் கைவிடலும்
ஒடுக்குதலும் மரணமும் தவிர எதுவுமற்றவர்களின் பெயரால்,

எங்களுக்கு எல்லாவற்றையும் மறுப்பதற்காக
நான் தனிச்சொத்துரிமையைக் குற்றஞ்சாட்டுகிறேன்.

**ரோக் டால்ட்டன்**

தமிழில்: நிலங்கோ

# தாயகம்

## தேசிய கலை இலக்கியப் பேரவையின்

## 3வது மாநாட்டு மலர்

**20.07.2019**

மக்கள் கலை இலக்கியம் என்பது
மக்களது வாழ்வின் யதார்த்தத்தை
அழகியலுடன்
பிரதிபலிப்பது மட்டுமல்ல,
ஒடுக்குதல்கள் நிறைந்த சமூக அமைப்பை
மாற்றி அமைக்க எண்ணும்
மக்களின் உணர்வுகளுக்கு
ஆத்மார்த்த பலம் அளிப்பதாகும்

இலங்கை மண்ணில்
இன, மத, சாதி, பால், வர்க்க பேதங்களால்
சிதறுண்டு கிடக்கும்
மக்கள் படும் இன்னல்களை நீக்க
அடிப்படைச் சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும்
மக்கள் கலை இலக்கியப் பணியாளர்களின்
கூட்டுழைப்பால் இயங்கிவரும்
தேசிய கலை இலக்கிப் பேரவை
கொழும்பு, மலையகம், வவுனியா,
யாழ்ப்பாணம் என விரிந்து
46வது ஆண்டில் நடத்தும்
3வது அனைத்து இலங்கை மாநாட்டுக்கு
தாயகத்தின் வாழ்த்துக்கள்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு

# தாயகம்

**கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்**
**இதழ் 96**
**ஏப்ரல்-ஜூலை, 2019**

பிரதம ஆசிரியர் :
*க. தணிகாசலம்*
*தொலைபேசி : +94765283003*

நிர்வாக ஆசிரியர்:
*ச. சத்தியதேவன்*

ஆசிரியர் குழு :
*சி. சிவசேகரம்*
*குழந்தை ம சண்முகலிங்கம்*
*சோ. தேவராஜா*
*அழ. பகீரதன்*
*தெ. ஞா. மீநிலங்கோ*
*வே. தினகரன்*
*லோ. நிலா*
*க ஆதித்தன்*

இதழ் வடிவமைப்பு :
*சிவ பரதன்*

அட்டை படம் :
**இணையத்திலிருந்து**

ஓவியங்கள் :
**நன்றியுடன் இணையத்திலிருந்து**

படங்கள்:
*எஸ். ரி. அனுஜன்*

தொடர்பு :
*ஆசிரியர்,*
*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில்*

மின்னஞ்சல் :
thajaham@gmail.com

ISSN NO : 2335-9492

அச்சுப்பதிவு : JS PRINTERS
SILLALAI ROAD
PANDETHERUPPU
T.P. 077 248 7212

# உள்ளடக்கம்

## கவிதைகள்

*சி. சிவசேகரம்*
*த. ஜெயசீலன்*
*இயல்வாணன்*
*தம்பா*
*அழ. பகீரதன்*
*மு. மயூரன்*
*சி. கிருஷ்ணப்பிரியன்*
*எளிமைக்கவி றொபின்*
*மாதவி உமாசுதசர்மா*
*மகிழ்ச்சி ஆ. ராம்குமார்*

## சிறுகதைகள்

*கே. ஆர். டேவிட்*
*சை. கிங்ஸ்லி கோமஸ்*
*க. சிவகரன்*
*பெண்ணியம் செல்வகுமாரி*
*ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்*
*சு. தவச்செல்வம்*
*மகிழ்ச்சி. ஆ. ராம்குமார்*
*செம்மனச் செல்வி*
*கொற்றை பி. கிருஷ்ணானந்தன்*

## கட்டுரைகள்

*சோ. பத்மநாதன்*
*அநாதரட்சகன்*
*கருணாகரன்*
*ஞானசீர்த்தி மீநிலங்கோ*

## மொழியாக்கம்

*வில்ஹெல்ம் லீப்னெஹ்ட்*
*ரமீஸ் ரொவ்ஷான், அசர்பைஜான்*

தேசிய கலை இலக்கியப் பேரவை
இல: 62, கொக்குவில் சந்தி,
கொக்குவில்

**நிதி அனுப்புதல்களுக்கு :**
தாயகம் ஆசிரியர் குழு
Editorial Board of Thayakam
S/A NO : 0072361444
BANK OF CEYLON, CHANKANAI
SWIFT CODE NO : BCEYLKLX

தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

இதழ் 96 ஜனவரி –ஜூலை 2019

# பேயரசுகளும் பிணம் தின்னும் சாத்திரங்களும்

முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின் பத்து ஆண்டுகள் கழித்து மீண்டும் குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை பலநூற்றுக் கணக்கான மக்களை ஒரே நாளில் பல்வேறு இடங்களில் பலிகொண்ட துயர நிகழ்வுகள் நடந்துள்ளன. இப்படி பல பத்தாண்டு கால இடைவெளிகளில் பல நிகழ்வுகளை இலங்கையின் அண்மைய வரலாற்றில் நினைவு கூரமுடியும். இவ்வாறு ஆண்டு இடைவெளியைக் கணக்கிடுவதால் இடையில் உள்ள காலங்களில் எத்தகைய கொடூரங்களும் நடைபெறவில்லை என்பதல்ல. இது எமது மண்ணில் மட்டுமல்ல. மக்கள் நலன்களைப் பொருட்படுத்தாத, பெரும் இலாபத்தை மட்டுமே குறியாகக் கொண்ட பணப்பேய்களின் ஆட்சிகள் நிலவும் அனைத்து நாடுகளிலும் இவை நடைபெற்று வருகின்றன. இதனால் உயிரழிவுகள் மட்டுமல்ல. இன, மத, சாதி, நிற, வர்க்க பேதங்களால் தொடர்ந்தும் மனித மனங்களில் பிளவும், அச்சமும் குரோதங்களும் வளர்க்கபபடுகின்றன. முப்பது ஆண்டுகால யுத்தத்தில் தமிழ் மக்களனைவரையும் புலிகளாகவே கருதி ஒடுக்குதல்களைச் செய்தது போலவே, முஸ்லிம் மக்கள் அனைவரையும் அடிப்படைவாதிகளாகப் பார்க்கும் நிலை இன்று உருவாகியுள்ளது.

ஆனால் சாதாரண மக்களைப் பொறுத்தவரை இதுபோன்ற கொடூரங்கள் எங்கு எவர்க்கு நடந்தாலும் மனம் வருந்துவதுடன், இனிமேல் அவ்வாறு நடைபெறக் கூடாது என்று எண்ணும் மனப்பாங்கு உள்ளவர்களாகவே உள்ளனர். அதனை தத்தமது பண்பாடு, சடங்கு முறைகளுக்கு ஏற்ப தீபங்களேற்றி அஞ்சலி செய்துவிட்டு, தம்மீது சுமத்தப்பட்ட தமது நாளாந்த பொருளாதார வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குள் மூழ்கிவிடுகின்றனர். இதனால் இவர்களது மனிதநேய உணர்வுகள் பரவலாக வளர்ச்சி அடைவதில் தடை ஏற்படுகிறது. ஆனால் இதுபோன்ற நிகழ்வுகளை அரசியலாக்க விரும்புபவர்கள் மட்டும் யதார்த்த உணர்வு நிலைகளுக்கு அப்பாலும் இவைகளை இட்டுச் செல்கின்றர். இங்கு மனித உயிர்களின் பெறுமானமும் இழப்பும் ஆழமாக எவர் மனதையும் உறுத்துவதில்லை. இதனால் இக்கொடூரங்கள் தொடர்வதற்கான காரணங்களை ஆய்வறிவுடன் கண்டறிந்து இனிமேலும் இவை இடம் பெறுவதை இல்லாதொழிக்கும் வழிமுறைகளை நோக்கி இவர்கள் செல்ல முயல்வதில்லை.

மக்கள் நலனில் அக்கறையற்ற அரசியல்வாதிகள் இதற்கான காரணங்களை தேடுவதில் தத்தமது அரசியல் சுய இலாப எல்லைகளுக்குள்ளேயே நின்றுவிடுவர். இதனால் எந்த அரசியல் வழிமுறை கொலைக்களங்களை உருவாக்கும் சூழல்களை நோக்கி படிப்படியாக இட்டுவந்ததோ அதே இன, மத வாத அரசியலையே மேலும் மக்களிடம் திணிக்க முயல்கின்றனர். இதனால் இனவவாதச் சேற்றின் சகதிக்குள் எழுபது ஆண்டுகளுக்கு மேலும் அமிழ்ந்து கிடக்கும் நிலை இந்த மண்ணில் தொடர்கிறது. இத்தகைய பேரினவாத, குறுகிய இனவாத அரசியல் சகதிகளுக்குள் இருந்து மக்கள் தம்மை மீட்டுக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டுகொள்வதும், அதன்வழியில் பயணிப்பதும் இன்றைய முதன்மைத் தேவையாகும்

ஆளும் வர்க்க அரசுகள் கல்வி, மதம், கலை, பண்பாடு, அறம், ஒழுக்கம், சட்டம், நீதி என்பன யாவற்றையும் மக்களை ஒடுக்கும், அவர்களது அதிகாரத்தைக் காப்பாற்றும் கருத்தியல் ஆயுதங்களாகவே கொண்டுள்ளன. எனவே அவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றன. அவர்களால் நடத்தப்படும் கொலைக் களங்களை படிப்படியாக உருவாக்கும் புனிதப் பணியை, அவர்களுக்குச் சார்பான 'ஜனநாயக வெளி'க்குள்

நின்று 'நடுநிலை'யாக இவை செய்துவருகின்றன. மனிதர்கள் மீது மனிதர்கள் செலுத்திவரும் கொடூரமான ஒடுக்குதல்களை 'எல்லாம் ஆண்டவன் செயல்' என்றும், கொடூரமான மனிதப் படுகொலைகளை 'இறைவன் விதித்த விதி' என புனிதப்படுத்திச் செய்யும் மதவெறி உணர்வும், அனைத்தையும் கேள்விகளின்றி ஏற்று மக்களை அடங்கி ஒடுங்கி வாழச் செய்யும் கருத்துக்களும் இன்றும் 'பிணம் தின்னும் சாத்திரங்களாக' பலமாக உள்ளன. 'இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமையாக' மனித மனங்களில் படிந்துள்ள பழமைச் சிந்தனைகள் மக்களின் விடுதலைக்கு அல்ல, அதிகார வர்க்கங்களுக்கே இன்றும் துணையாக இருந்து வருகின்றன. இவை கல்வி, கலை, மத, பண்பாடுகளின் பெயரால் மக்களை ஒடுக்கும் அதிகார வர்க்கங்களின் வலிமையான கருத்தாயுதங்களாக இருபத்தோராம் நூற்றாண்டிலும் இருந்து வருகின்றன. இலத்திரனியல் ஊடக பலங்களையும் தமது உடமைகளாக அவர்கள் கொண்டிப்பதால் இவை மக்களின் மனங்களில் பன்மடங்கு தாக்கம் செலுத்துகின்றன. இவற்றையே மாக்சிய அறிஞரும் இத்தாலிய மக்கள் விடுதலைப் போராளியுமான அந்தோனியோ கிராம்சி 'பண்பாட்டு மேலாண்மை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய பண்பாட்டு மேலாண்மையுடன் நவகொலனித்துவ பொருளாதாரமும், திறந்த சந்தையும், அதில் குவிக்கப்படும் பொருள்களுக்கான போட்டியில் உருவாக்கப்படும் நுகர்வுக் கலாசாரமும் இணைந்து மக்களின் ஆரோக்கியமான இயல்பு வாழ்வை அழித்துவருகிறது. தொழிலாள, விவசாயிகளின் வாழ்வில் நஞ்சைக் கலக்கின்றன. நாம்வாழும் புவியினதும், உயிரின, மனித இருப்பையும் கேள்விக்குட்படுத்துகின்றன. உலகமயமாகிவிட்ட இச்சமூக பொருளாதார அமைப்பு பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்ற போதும் இன்றும் இதன் தாக்கம் பேரழிவைத் தருவதாகவே உள்ளது.

இதற்கு எதிராக உலக மக்கள் இன்று விழிப்படைந்து வருகின்றனர். தத்தமது நாடுகளில் இவைகளுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து போராட்டங்களை நடத்துகின்றனர். இன்று இவற்றின் தாக்கங்களுக்கு எதிரான விழிப்புணர்வு எமது நாட்டின் பல்லின மக்கள் மத்தியிலும் ஏற்பட்டு வருகிறது. எமது நாட்டின் பலபாகங்களிலும் பலபோராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. பேரினவாத, குறுந்தேசிய இனவாத அரசியலாக குறுகிக் கிடக்கும் இலங்கை அரசியலை சமூக, பொருளாதார, சூழலிய, பால், வர்க்க அரசியலாக மாற்றுவதன் மூலமே அனைத்து மக்களுக்குமான மாற்று அரசியலை முன்னெடுக்க முடியும். மதம் சார்ந்த 'பண்பாட்டு மேலாண்மையை' சாதகமாக வைத்து சிங்கள மக்களிடம் பேரினவாத உணர்வுகளைத் தூண்டி வளர்த்து, தென்னிலங்கையில் மாறிமாறி பதவிக்கு வருபவர்களிடம் இனங்களின் உரிமைகளை மட்டுமல்ல, சுதந்திரத்தையும், சுபிட்சமான வாழ்வையும் அனைத்து மக்களுமே எதிர்பார்க்க முடியாது. அரசுகளுடன் அண்டி நின்று பெறும் சில சலுகைகளை மட்டுமே பெறமுடியும் என்பதை இருகட்சிகளும் ஒன்றிணைந்த அரசின் கையாலாகாத்தனமே காட்டி நிற்கிறது.

எனவே மதசார்பற்ற அரசு, மதசார்பற்ற கல்வி என்பவை நடந்து முடிந்த இரு பேரிழப்புக்களின் முக்கிய பாடங்களில் ஒன்றாக அமையவேண்டும். அறிஞர்கள் சமூகவிஞ்ஞான அறிவியல் பூர்வமான உலகப் பார்வையை இளைஞர்களிடமும், மாணவர்களிடமும், மக்களிடமும் கொண்டு செல்லவேண்டும். கலைஞர்கள் எழுத்தாளர்கள் தமது கலைப் படைப்புக்கள் முலம் உழைக்கும் மக்களிடம் இயல்பாக உள்ள தன்னைப்போன்ற மனிதர்களை மட்டுமல்ல, இயற்கையையே நேசிக்கும் உணர்வுகளுக்கு தமது படைப்புக்களால் வலுச்சேர்க்க வேண்டும். இதன்மூலம் பேயரசுகளையும், பிணம் தின்னும் சாத்திரங்களையும் மக்கள் விலக்கி வைக்க முடியும்.

பன்மைத்துவத்தை மதிப்பதோடு நின்றுவிடுவது இதுவரை அதிகார வர்கங்களின் பிரித்தாளும் தந்திரத்துக்கே வாய்ப்பாக அமைந்து வருகிறது. எனவே பயன்மிக்க பன்மைத்துவ அடையளங்களைப் பாதுகாத்தல் என்பது பிரிந்து நின்று பேரினவாதத்தை பலப்படுத்துவதோ, நவகொலனித்துவத்தை பாதுகாப்பதோ அல்ல. பன்மைத்துவத்தின் வேராக ஓடும் மனித சமூக சார்புணர்வை – மானுடத்தை நோக்கிய, மக்களின் விடுதலைக்கான மாற்று அரசியலில் அனைத்து இனங்களும் ஒன்றிணைவதாகும். பன்மைத்துவத்துள் ஒருமைத்துவத்தை – மனிதத்துவத்தைக் காணும் விடுதலைக்கான உழைக்கும் மக்களின் புதிய ஜனநாயகத்தை, புதிய வாழ்வை, புதிய பண்பாட்டை இம்மண்ணில் ஏற்படுத்துவதாகும்.

# மக்கள் விரோதப் பயங்கரவாதம்

உயிர்த்த ஞாயிறு அதிர்ச்சியினின்று நாடு விடுபட முன்பே, மே 5ம் திகதி கத்தோலிக்க, முஸ்லிம் குழுக்கள் இரண்டு நீர்கொழும்பில் மோதின. எழுந்தமான இம் மோதல் பரவவில்லை. மாறாக, மே 12இல் சிலாபத்திற் தொடங்கிய வன்முறை வடமேல் மாகாணத்திலும் பின்பு கம்பஹா மாவட்டத்திலும் பரவிப் பள்ளிவாசல்கட்கும் முஸ்லிம்களின் உடைமைகட்கும்; கடுஞ் சேதம் விளைத்தது. அடுத்து, முஸ்லிம் வணிகர்கள் தொல்லைக்குட்பட்டனர். பாதுகாப்புப் படைகளின் செயலூக்கமின்மை போகப், பாதுகாப்புப் படையினர் தாக்கினோரை ஆதரித்தனர் எனவுங் கூறப்பட்டது. சிறுபான்மையினர் மீதான ஐந்து தசாப்த வன்முறையைக் கண்டோர் இவற்றால் வியப்புறார். இப்போது மதவெறிப் புத்த பிக்கு ஞானசாரரின் சிறைவாசத்துக்கு ஜனாதிபதி முடிவுகட்டியமை எதைக் கட்டியங்கூறுகிறது?

தற்கொலைத் தாக்குதல் ஆளணியும் ஆயுதங்களும் வெடிப்பொருட்களுமே பிரச்சனையல்ல. குண்டுவெடிப்பு, ஐ.எஸ். பயிற்றியதாகக் கூறும் சிலரின் செயல் மட்டுமல்ல. வஹ்ஹாபிப் போராளிகள் பற்றி முஸ்லிம்கள் பல ஆண்டுகள் முன்பே பொலிஸுக்கு முறைப்பட்டுள்ளனர். தாக்குதல்கள் பற்றி ஏலவே அறிந்த தனது பாதுகாப்புத் துறை இலங்கைப் பாதுகாப்புத் துறைக்குத் தெரிவித்ததாக இந்தியா கூறுகிறது. தனது தூதரகமும் ஒரு இலக்கு எனும் இந்தியா, இலங்கை அரசாங்கத்திடம் பாதுகாப்பக் கோரவில்லை. இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஈன்று வளர்த்தோருள் அமெரிக்கா அடங்குமாதலால், இலங்கையில் ஐ.எஸ். செயற்பாடுகளை அமெரிக்கா அறியாதென்பது கடினம். ஆயின், இலங்கை மட்டுமே இருளிலிருந்ததா? வஹ்ஹாபி குழுவையும் குண்டு வெடிப்பு உட்பட அதன் ஐயமான செயற்பாடுகளையும் அரசியற் தலைவர்களும் பாதுகாப்புப் படை உறுப்பினர்களும் முன்னமே அறிவர் எனப் பொதுமக்கள் ஐயுறல் நியாயமானது.

மத்திய-கிழக்கிற் தோற்ற பின், ஆபிரிக்காவின் வடக்கிலும் மேற்கிலும் தொல்லை விளைக்கும் ஐ.எஸ். அங்கு வலுவாக வேரூன்றவில்லை. மத்திய-கிழக்கு அடைவுகளால் நம்பிக்கை இழந்த தன் ஆதரவாளர்களின் நிதியுதவியைக் கருதியே அது இலங்கைக் குண்டுத் தாக்குதல்கட்கு உரிமைகோருகிறது. தற்கொலைத் தாக்குதல் அலையெதுவும், அதையோ அதன் பதிலாள் எவரையுமோ இலங்கையில் ஆட்சியில் நிறுவாது என்பது கவனத்துக்குரியது. தாக்குதலை அடுத்த நிகழ்வுகள் உணர்த்துமாப் போல, தாக்குதலின் நோக்கம், நாட்டில் உறுதியின்மையை விளைப்பதே.

உள்ளூர், வெளியூர் நலன்கள் சார்ந்த பிரிவினர் நெருக்கடியை வாய்ப்பாக்க முயல்கின்றனர். குண்டுவெடிப்பைத் தவிர்க்கத் தவறியமைக்கும் சிங்கள-பவுத்த வெறியர்களின் முஸ்லிம் விரோதக் காடைத்தனத்துக்கு ஆயத்தமின்மைக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ற்றம்ப் நேரஞ் சுணக்காமல் குண்டு வெடிப்புக்கு மறுநாளே இலங்கை ஜனாதிபதியைப் புறக்கணித்துப் பிரதமருடன் தொடர்புகொண்டு பயங்கரவாதத்தைப் போரிட ஆதரவு தெரிவித்தார். 2015 தொட்டு இலங்கையில் தன்னை வலுவாக நிறுவுமாறு அமெரிக்கா செயற்படுகிறது. 2019 ஓகஸ்ற்றில் அமெரிக்கா தனது வங்காள விரிகுடா முயற்சியின் பகுதியாக இலங்கைக்குக் கடற்பரப்புப் பாதுகாப்புக்காக 39 மில்லியன் டொலர் நன்கொடை வழங்கியது. சீனா தன் பங்கிற்குப் பாதுகாப்புத் துறையை வலுப்படுத்த நிதியையும் தொழில்-நுட்ப நிபுணத்துவ இராணுவ-உபகரண அலுவல்களில் ஒத்துழைப்பையும் உறுதியளித்தது. ஐரோப்பிய, துணைக்கண்ட வல்லரசுகளும் நாடு எதிர்நோக்கும் நெருக்கடியில் வாய்ப்புத் தேடுகின்றன. இவற்றில் எதுவுமே நாட்டுக்கு உதவா.

குறுந் தேசியம் ஒவ்வொன்றும் தனது இனத்திற்கும் முழு நாட்டிற்கும் கேடிழைத் துள்ளது. சுதந்திரத்தற்குப் பிந்திய அரசு-விரோத எழுச்சிகள் யாவும் அரசியற் தலைமைகள் மீதான அவநம்பிக்கையின் விளைவுகள் என்பது நோக்கத்தக்கது.

ஒரு பாராளுமன்ற அரசியற் கட்சியும் மக்களின் குறைகளைப் பேசுவதில்லை. வாக்குத் திரட்ட உதவும் பிரச்சனைகளையே நோக்கி, வெறுப்பு அரசியலை வளர்த்துத் தம்மைத் தக்கவைப்பதே பாராளுமன்றக் கட்சிகளின் தேவையாகும்.

முஸ்லிம் விரோதம் சிங்களப் பேரினவாதத்தின் முக்கிய பகுதி. அது சிங்கள-பவுத்த தேசியமாகிய பின், முஸ்லிம்கட்கு இலங்கைச் சமூகத்தில் இடத்தை அறவே மறுக்கிறது. தமிழ்ப் பேசும் தேசிய இனங்களை இணைக்கத் தவறிய தமிழ்த் தேசியம், தேர்தல் கணிப்புகளின் நோக்கில் முஸ்லிம்-விரோத அரசியலை முன்னெடுத்தது. எந்த முஸ்லிம் கட்சியும் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் முஸ்லிம் நலன்களை முன்னெடுத்ததில்லை. முஸ்லிம் சமூகத்துள் உருவான உள் நெருக்கடியைத் தலைமைகள் கவனியாமையே முஸ்லிம்களின் அரசியல் அவலம்.

முஸ்லிம் தலைமைகள் உட்பட்ட குறுந்தேசியவாதிகள் யாவரும் முஸ்லிம்களை மேலுந் தனிமைப்படுத்தவே முயல்கின்றனர். இப் பின்னடைவினின்று முஸ்லிம் சமூகம் மீளவேண்டும். ஒரு குறுந்தேசியவாதமும் அதற்கு உதவாது. தேர்தல் அரசியலாற் சீரழியும் வரை இடதுசாரிகள் மட்டுமே மக்களின் உரிமைகளைக் காக்க அனைத்துச் சமூகத்தினரையும் ஒன்றிணைத்தோராவர்.

உழைக்கும் மக்களதும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களதும் விடுதலைக்கும் மாற்று அரசியற் பாதையை வகுக்கத் தருணமிது. அனைத்துத் தேசிய இனத் தோரையும் பிற அடையாளங்கட்குரியோரையும் ஒரு வலுவான ஐக்கிய முன்னணியாக அணிதிரட்ட நேர்மையான இடதுசாரிகளும் பிற முற்போக்கு, ஜனநாயக சக்திகளும் துணிவுடன் எழுவேண்டும்.

## தருமம்

தருமர் மட்டுமா உலகில் இருக்கிறார்?
சகுனி களாகவே அநேகர் திரிகிறார்!
தருமர்... தருமம் நீதி என நிற்க
சகுனிகள் சூழ்ச்சி செய்தே ஜெயிக்கிறார்!
தருமர் மட்டுமே வாழும் உலகுக்கு
தருமம் சரி; ஆனால் சகுனிகளே மிகப்
பெருமளவில் புழங்கும் உலகினில்
பிழைக்க சூழ்ச்சியும் கற்பதே நல் வழி!
தரும வழிவிட்டு மாறாது... சூழ்ச்சியால்
சரிகளைக் காக்கத் தயங்காது ... அதர்மத்தை
சரிக்கச் சாணக் கியத்தின் துணைகொண்டு
தடை தகர்த்திட யுக்திகள் மேற்கொண்டு
வரங்கள் பெற்றிட வேண்டும்! தவமும் நல்
வழியில் செய்திட வேண்டும்! அவரவர்க்-
குரிய நீதி கைக் கொண்டு ...சகுனிகள்
குனிய...தருமர்கள் நிமிர்ந்திட வேண்டுமாம்!

த. ஜெயசிலன்

*'யந்திரங்களை மனிதன் இயக்கிய காலத்திலிருந்து, மனிதனை இயந்திரங்கள் இயக்குகின்ற காலம்' என்ற செய்தியைத்தான் இந்தப் பிச்சைக்காரன் கூறுகிறான் என்பதை அந்தப் பேராசிரியர் புரிந்து கொண்டிருக்கிறார்.*

# குருவன்



## கே. ஆர். டேவிட்

**நா**ன்கு வீதி முனைகளின் சந்திப்பு– 'நாற் சந்தி'. இந்தச் சந்தியை 'சத்திரத்துச் சந்தி' என்றுதான் கூறுவார்கள்.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள முக்கியமான சந்திகளில் இதுவும் ஒன்று. இச்சந்தியின் நான்கு திசைகளிலும் வீதிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் மின்சார பல்புகள் பொருத் தப்பட்டுள்ளன. சிவப்பு, மஞ்சள், பச்சை... மூன்று நிற மின்சார பல்புகளும் மாறிமாறி எரிந்துகொண்டேயிருக்கும் மக்கள் அதைப் புரிந்துகொண்டு நடந்துகொள்வார்கள்.

இந்த நாற்சந்தியில் இணைந்திருக்கும் நான்கு வீதிகளில் ஆஸ்பத்திரிவீதியும் ஒன்று. இந்த வீதி சந்திக்கும் இடதுபக்க மூலையில் உருளை வடிவிலானதொரு மின்கம்பம் நாட் டப்பட்டுள்ளது.

இந்த மின் கம்பத்தின் அடிப்பகுதியில் இருவர் நீட்டி நிமிர்ந்து படுக்கக்கூடியதொரு சீமந்து நிலம் அமைந்துள்ளது.

சூரியன் அஸ்த்தமனமாகி, இருள் படர்ந்து... ஏழரை மணிக்கு மேல் இருக்கும். இன்று ஞாயிற்றுக்கிழமை, மக்களின் நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்தது.

குருவன் அந்தச் சீமந்து நிலத்தில் சப்பாணி கொட்டி அமர்ந்திருக்கின்றான். அவனுக்கு முன்னால் அவனுடைய சாக்குப் பையும், வலது முளங்காலோடு மருவி 'ரீ' நிறைந்த அவனது கைபிடிக்கோப்பையும் கிடக்கின்றது.

அவனுக்கு முன்னால் ஒரு நாய்... பின் கால்கள் இரண்டையும் மடித்து, உடலின் பிற்பகுதியை சீமந்து நிலத்தில் பதித்து நிமிர்ந்து அமர்ந்திருக்கின்றது. குருவனுக்குள்ள ஒரேயொரு உறவு இந்த நாய்தான்...!

குருவன் ஒரு பிச்சைக்காரன்.

எழுபத்தைந்து வயதுக்கு மேலிருக்கும், சராசரி உயரத்துக்கும் குறைவான உயரம், கறுத்த உடல்... காய்ந்த கோரைப் புற்களைப் போன்ற தாடியும் மீசையும்... ஒரு சாறத்தை உடுத்தியிருப்பான்... அதையும் ஒழுங்காக உடுத்திக் கொள்வதில்லை சாறம் உரிந்து விழுந்து குருவன் நிர்வாணமாகப் போகிறான் என்ற அச்சத்தை எற்படுத்தும் வகையில் அந்தச் சாறத்தை அவன் உடுத்தியிருப்பான்.

குருவனின் தோழில் ஒரு சாக்குப் பை யொன்று எந்த நேரமும் இருக்கும். தண்ணீர் குடிக்கின்ற கைப்பிடி போட்டதொரு பேணி, தகரத்தினாலானதொரு சாப்பாட்டுக் கோப்பை, ஒரு துவாய், ஒரு படுக்கை விரிப்பு, ஒரு சொப்பிங் பையொன்று அதற்குள் புகை யிலைக் காம்பு, காய்ந்துபோன வெற்றிலை களும், சீவல் பாக்குத் துகழ்களும்... இன்னும் சில சாமான்களையும் அந்தச் சாக்குப்பையுள் காணலாம்.

அவனுக்குள்ள ஒரேயொரு சொத்து இந்தச் சாக்குப் பைதான்.

ஏறத்தாழ ஏழரை மணிக்கெல்லாம் குரு

வன் இந்தச் சத்திரத்துச் சந்திக்கு வந்துவிடுவான். எட்டு மணிக்கிடையில் அந்த நாய் வந்துவிடும்... அந்த நாயோடுதான் குருவன் பேசுவான்... தனது பேச்சை அந்த நாய் புரிந்து கொள்கின்றதென்றொரு உணர்வு குருவனுக்கு உண்டு...

இரவு ஒன்பது, ஒன்பதரை வரையில் குருவன் இதே இடத்தில் இருப்பான். குருவனோடு அந்த நாயும் நிற்கும். ஒன்பதரை அளவில் முன்னாலுள்ள கருவாட்டுக்கடை விறாந்தையில் குருவன் படுப்பான். அவனுக்குப் பக்கத்தில் அந்த நாயும் படுத்துக் கொள்ளும். விடிந்ததும் குருவனும் சென்றுவிடுவான். நாயும் சென்றுவிடும்...

மறுநாளும் சந்திப்பார்கள்...

குருவனுக்கும் இந்த நாய்க்குமிடையிலுள்ள இந்த உறவு எப்ப, எப்படி ஏற்பட்டதென்பது... குருவனுக்குத்தான் வெளிச்சம்...!

வழமைபோல இன்றும் அதே சத்திரத்துச் சந்தியில், அந்த மின்சார பல்புகள் பொருத்தப்பட்டுள்ள கம்பத்தின் அடியிலுள்ள சீமந்து நிலத்தில் குருவன் அமர்ந்திருக்கின்றான். அவனுக்கு முன்னால் அவனுக்குள்ள ஒரே உறவான அந்த நாய் பின்னங்கால்கள் இரண்டையும் மடித்தபடி அமர்ந்திருக்கின்றது.

"பாம்பின் காலைப் பாம்புதான் அறியும் என்று கூறுவார்கள்... என்னைப் பற்றி உனக்குத் தெரியும்... உன்னைப்பற்றி எனக்குத் தெரியும்... நீ நாயாகப் பிறந்து நாயாகவே வாழ்கிறாய்... நான்... மனிசனாகப் பிறந்து... நாயாக வாழ்கிறேன்... பிறப்பில் வேறுபாடுகள் இருந்தாலும்... நமக்குள்ள பிரச்சினை ஒண்டுதான்...

...பசி...

உனக்கும் எனக்குமுள்ள பிரச்சினை இதுதான்...

அதுசரி... இண்டைக்கு உன்ரை முகம் சரியில்லை... சோர்ந்துபோய் இருக்கிறாய்... வயிறும் இடிஞ்சுபோய்க்கிடக்கு... இண்டைக்கு உனக்குச் சாப்பாடு கிடைக்கயில்லையா..?"

இப்படிக் கூறிய குருவன் அந்த நாயின் முதுகைத் தடவுகிறான். அந்த நாய் தனது நாக்கை நீட்டி குருவனின் கையை நக்குகின்றது.

"... இண்டைக்கு எனக்கும் சாப்பாடு கிடைக்கயில்லை... பட்டினி கிடக்கிறது உனக்கும் எனக்கும் பழக்கப்பட்டட விஷயந் தானே... இப்பதான் ஒரு புண்ணியவான் ஒரு பணிசும் ரீயும் வாங்கித் தந்தான்..." குருவன் இப்படிக்கூறியதும், அந்த நாய் என்னத்தைப் புரிந்து கொண்டுதோ... முன்னங்காலால் சப்பாணி கொட்டி அமர்ந்திருந்த அவனின் முளங்காலைத் தடவுகின்றது.

"பொறு, பொறு... உனக்குத் தராமல் நான் சாப்பிடுவனா... ஒரு ரீயும், ஒரு பணிசும் இருக்கு... இருவரும் பாதி, பாதியாய் சாப்பிடுவம்..." இப்படிக் கூறிய குருவன் அந்தச் சாக்குப் பையுள் தனது வலது கையை முளங்கைவரை செலுத்தித் துளாவுகிறான். துளாவி முதலில் தனது சாப்பாட்டுக் கோப்பையை எடுத்து அந்தச் சீமந்து நிலத்தில் வைக்கிறான்... இரண்டாம் முறை அந்தச் சாக்குப் பையுள் கையைவிட்டு அந்தப் பணிசை எடுக்கிறான்.

அந்த நாய்... மீண்டும் தனது முன்னங் காலால் குருவனின் முளங்கால் பகுதியைத் தடவுகிறது..!

"அவசரப்படாதை... நான் உனக்குத் தருவன்.." குருவன் கூறியபடி, அவனுடைய பேணிக்குள்ளிருந்த ரீயின் ஒரு பகுதியை அந்தச் சாப்பாட்டுக் கோப்பையில் ஊற்றி... அந்தக் கோப்பையை நாய்க்கு முன்னால் நகர்த்துகின்றான்... நாய் எழுந்து நின்று வாலை ஆட்டியபடி அந்தப் பாலை நக்கிக் குடிக்கின்றது... பணிசை எடுத்த குருவன் அதை இரண்டாகப் பிய்த்து நாய்க்கு முன்னால் போடுகிறான். நாய் சாப்பிடுகின்றது...

தனக்காக ஒதுக்கி வைத்த பாதிப் பணிசை குருவன் சாப்பிடுகின்றான். இடையிடேயே தனக்காக ஒதுக்கி வைத்த ரீயையும் குடித்துக் கொள்கிறான்.

"உனக்குப் பேச வராது... எனக்குப் பேச வரும்... உன்னோடை மட்டுந்தான் என்ரை பேச்சும்... ஏழை சொல் அம்பலம் ஏறுமா..? ஒருக்காலும் ஏறாது.." இப்படிக் கூறிய குருவன் தனக்குள் சிரித்துக் கொள்கிறான்.

பிச்சைக்காரர்களுக்குள் குருவன் வித்தியாசமானதொரு பிச்சைக்காரன். நிறைந்த அனுபவசாலி. அதுவும் கொதிக்கின்ற வயிற்றுக்குள் கருவாகிப் பிரசவித்த அனுபவங்கள்..! பெற்றுக்கொள்கின்ற அனுபவங்களை அறிவியல் அடிப்படையில் நிரல்படுத்தப்பட்ட செய்திகளே இன்று தத்துவங்களாக பேசப்

படுகின்றன. குருவனிடம் அனுபவங்கள் உண்டு. அவற்றை அறிவியல் அனிப்படையில் நிரல்படுத்துகின்ற கற்றல் ஆளுமை அவனிடம் இல்லை என்றுதான் கூறவேண்டியுள்ளது.

அண்மையில், இதே சத்திரத்துச் சந்தியில் நடந்த ஒரு சம்பவம், அந்தச் சம்பவத்தோடு குருவன் முழுமையாகத் தொடர்புபட்டிருந் தான்...

அன்றும் வழமைபோலக் குருவன் இதே சத்திரத்துச் சந்தியில், அந்தச் சீமந்து நிலத்தில் சப்பாணிகொட்டி அமர்ந்திருந்தான். அந்த நாய் அவனுக்குப் பக்கத்தில் படுத்திருந்தது. பொழுது சாய்ந்து ஏழு மணியளவில் இருக் கும்... அன்று வேலை நாளாக இருந்ததால் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. பொலிசார்கூட அந்த இடத்தில் கடமையில் இருக்கவில்லை...

சிவப்பு, மஞ்சள், பச்சை... இந்த மின்பல் புகள் தொடர்ச்சியாக எரிந்துகொண்டிருந்தன. ...அந்த மின்பல்புகளின் கட்டளைகளை அந்தப் பிரயாணிகள் ஏற்றுச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்... ஒரு விபத்துக்கூட நிகழ வில்லை...

அந்தக் காட்சியைப் பார்த்து ஆச்சரியப் பட்ட குருவன், தனக்குள் சிரித்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்... வழமைபோல அந்த நாய்க்குத்தான் அவன் கூறினான்.

"...அப்ப எனக்கு முப்பது வயதுக்குள்ளை தான் இருக்கும்... நான் ரவுணிலை கூலியாக வேலை செய்துகொண்டிருந்தன்... கொழும் பிலை இருந்து பெரும்பெரும் வாகனங்களிலை சாமானுகள் வரும். அவையளை இறக்கி உரிய இடங்களிலை அடுக்கிறதுதான் என்ரை வேலை... அப்ப எந்தப் பெரிய வாகனங்கெல்லாம் இருந்தது... எல்லாத்தையும் மனிசர்தான் ஓட்டி னாங்கள்... ஆயிரக்கணக்கான மூடைகளை ஏத்திக் கொண்டு கடற் கப்பல் கொழும் பிலையிருந்து பருத்துறைக்கு வரும்... இந்தக் கடல் கப்பலை, பிளேனை... றெயினை... எல்லாத்தையும் மனிசன்தான் ஓட்டினான்...

இப்ப.. சிவப்பு பல்ப் எரிஞ்சால் நிக்கிறான்...

மஞ்சள் பல்ப் எரிஞ்சால் தயாராகுகின் றான்...

பச்சை பல்ப் எரிஞ்சால் புறப்படுகின்றான்...

யந்திரங்கள் மனிசரை இயக்கிக் கொண் டிருக்கு... எந்தப் பெரிய மாற்றம்..."

இப்படிக் கூறிய குருவன் அந்த நாயின் தலையைத் தடவியபடி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

'இயந்திரங்களை மனிதன் இயக்கிய காலத் திலிருந்து, மனிதனை இயந்திரம் இயக்குகின்ற காலம்' குருவன் சொல்ல வந்த செய்தி இது தான். விஞ்ஞான வளர்ச்சியைக் குருவன் உணர்கிறான். தான் உணர்ந்தவைகளை நெறிப் படுத்தி, அழகியலோடு கூறிவிட அவனுக்குத் தெரியவில்லை.

குருவன் இப்படி நாயோடு பேசிக்கொண் டிருந்த போது, அந்த வீதியால் பயணித்து, பச்சை விளக்கை எதிர்பார்த்து பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் தரித்து நின்றி ருக்கின்றார். அதுவும் இவனுக்கு அண்மை யிலேயே நின்றிருக்கின்றார். குருவனின் பேச்சு மிகத் தெளிவாகவே அந்தப் பேராசிரியருக்குக் கேட்டிருக்கின்றது.

'யந்திரங்களை மனிதன் இயக்கிய காலத்தி லிருந்து, மனிதனை இயந்திரங்கள் இயக்கு கின்ற காலம்' என்ற செய்தியைத்தான் இந்தப் பிச்சைக்காரன் கூறுகிறான் என்பதை அந்தப் பேராசிரியர் புரிந்துகொண்டிருக்கிறார்.

குருவன் பிச்சைக்காரன்— அவனுடைய விஞ்ஞானப் பார்வையின் ஆழம்... அந்தப் பேராசிரியர் அதிர்ந்து போய்விட்டார்...!

தனது சேட் பைக்குள்ளிருந்த கைத் தொலைபேசியை எடுத்து குருவனையும் அந்த நாயையும் ஒரு புகைப்படம் எடுத்துக் கொள் கிறார். பச்சை பல்ப் எரிகிறது. அந்தப் பேராசிரியர் புறப்படுகின்றார். நடந்தது எதுவுமே குருவனுக்குத் தெரியாது...!

இந்தச் சம்பவம் நடந்து ஏறத்தாழ ஒரு மாதம் சென்றிருக்கும். இன்றும் குருவன் அதே இடத்தில் நாயுடன் இருக்கின்றான்.

"இண்டைக்கு உனக்கும் எனக்கும் இவ்வளவு தான் சாப்பாடு... சரிவிடு... பசி எண்டது உனக்கும் எனக்கும் பழக்கப்பட்ட ஒண்டு தானே..." குருவன் அந்த நாய்க்குக் கூறு கின்றான்.

நேரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. கரு வாட்டுக் கடை பூட்டப்பட்டால்த்தான் குருவனுக்குப் படுப்பதற்கு இடம் வரும். அந்தக் கருவாட்டுக் கடை விறாந்தையில்த் தான் குருவன் படுத்துக்கொள்வான். அவனுக் குப் பக்கத்தில் அந்த நாய் படுத்துக் கொள்ளும்.

கருவாட்டுக் கடை பூட்டப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நடைபெறுகின்றன...

யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோர் பக்க மிருந்து வந்த மூன்று மோட்டார் சைக்கிள்கள் சந்தியை அண்மித்து நிறுத்தப்படுகின்றன... ஆறோ ஏழு வாலிபர்கள்... இருவரின் கை களில் பசை நிறைந்த சின்னஞ்சிறு வாளிகள், அடுத்த இருவரிடம் சுருட்டப்பட்ட நிலையில் நோட்டீசுகள்... வந்தவர்கள் இரண்டு பகுதி களாகப் பிரிந்து, ஒரு பகுதியினர் கே.கே.எஸ் றோட் பக்கமாகவும், மற்றப் பகுதியினர் குருவன் இருக்கின்ற றோட் பக்கமாகவும் நோட்டீசுகளை ஒட்டுகின்றனர்.

வந்த வாலிபர்கள் செய்யும் ஆரவாரத்தில் குருவனின் நாய் இலேசாக மிரள்கின்றது...

"...நீ பயப்பிடாதை... தேர்தல் வருகிது அதுக்காகத்தான் அந்தப் பொடியள் நோட் டீஸ் ஒட்டுறாங்கள்... உனக்கு அரசில்லை, அரசியலுமில்லை, அதாலை கட்சியுமில்லை, தேர்தலுமில்லை.. அதாலைதான் தேர்தல் எண் டால் என்னண்டு தெரியாமல் பயப்படு கின்றாய்...

...தேர்தல் எண்டால் என்னண்டு நான்தான் உனக்கு விளங்கப்படுத்த வேணும்... என்னை விட உனக்கு வேறை ஆர் இருக்கினம்..." இப்படிக் கூறிய குருவன் காவோலை போன்ற அவனது தலை மயிருக்குள் தனது வலது கை விரல்களைப் புதைத்துச் சொறிந்தபடி யோசிக் கின்றான்... அவனின் ஒரே உறவான அந்த நாய்க்கு தேர்தல் பற்றிக் கூறவேண்டும்...?

நாய் அவனுக்கு முன்னால் படுத்திருக் கின்றது.

"... 'அரசியல் விசுவாசத்தோடு' நடத்தப்பட வேண்டியதொரு தேர்தல் இருக்கு... எனது அறிவுக்கு எட்டின வரையிலை 'அரசியல் விசுவாசத்தோடு' ஒரு தேர்தல் நடந்ததாக எனக்கு நினைப்பில்லை...

... இப்ப நடைமுறையில் உள்ள தேர்தலைப் பற்றிச் சொல்றன்..." குருவன் அந்த நாய்க்குக் கூறுகிறான்.

நோட்டீஸ் ஒட்ட வந்த அந்த வாலிபர்கள் குருவன் இருந்த பக்கத்திலும் நோட்டீசை ஒட்டுகின்றனர்... நாய் இலேசாக முறுகு கின்றது..

"சீ... நீ பயப்பிடாதை... நானிருக்கிறன்..." குருவன் இப்படிக் கூறியபடி நாயின் தலையைத் தடவுகிறான். சொற்ப நேரத்தின் பின் குருவன் மீண்டும் பேச ஆரம்பிக்கின்றான்.

"எனக்கிப்ப எழுபத்திநாலு வயது... இந்த எழுபத்திநாலு வயதுக்கிடையிலை நான் எத்தினையோ தேர்தல்களைக் கண்டிட்டன்... நான் கண்ட தேர்தல் அனுபங்களைத்தான் நான் உனக்குச் சொல்லப் போறன்...

... நான் ரவுணிலை... இந்த யாழ்ப்பாண ரவுணிலை... மூட்டை தூக்கிற வேலை செய் தது உனக்குத் தெரியும்... அந்த நேரங்களிலை ஆயிரக் கணக்கான அரிசி மூடை, மாமூடை, சீனி மூடைகளை ஏத்திக் கொண்டு கடல் கப்பல் பருத்துறைக்கு வரும்... அப்ப நானும் என்னோடை சேர்ந்தவையும் அங்கைதான் வேலை செய்வம்... கப்பலிலை இருந்து முழு மூட்டைகளையும் இறக்கவேணும்... ஒருமாத மாவது செல்லும்...

அந்த நேரத்திலை கப்பலிலை வேலை செய்யிற ஆக்களெல்லாம் ஓய்வாக இருப் பாங்கள். அவங்கள் எங்களோடையெல்லாம் நல்லாய் பழகுவாங்கள்...

இவங்கள் தங்கடை ஓய்வு நேரங்களிலை தூண்டில் போடுவாங்கள்... அதுக்கெண்டு பருத்துறை மீன்கடைக்குப் போய் குஞ்சு மீன்கள் வாங்கிவந்து தூண்டில் ஊசிகளிலை அந்தக் குஞ்சு மீன்களைக் குத்தித்தான் போடு வாங்கள்... பெரிய பெரிய மீன்களெல்லாம் புடிப்பாங்கள்... சிலவேளை எங்களுக்கும் தரு வங்கள்... அங்கை வேலை செய்யயுக்கை நாங்களும் சமைச்சுத்தான் சாப்பிடுகிற னாங்கள்.

தங்கடை சாப்பாட்டிலை எங்களுக்குத் தருவாங்கள்... நாங்கள் எங்கடை சாப்பாட் டிலை அவங்களுக்குக் குடுப்பம்... அவங்கள் பேதமெல்லாம் பாக்கமாட்டாங்கள்...

இதிலை கவனிக்க வேண்டியது என்னண் டால்... கடல் கப்பலிலை வேலை செய்யிற அவங்கள் தொடர்ச்சியாகக் கடலிலைதான் சீவிக்கிறவங்கள்... அதாலை கடல்நீரைப் பற்றிய விபரங்களெல்லாம் அவங்களுக்கு அத்துப்படி...

...நீரோட்டத்தைப் பார்த்து, அந்த நீரோட் டத்திலை என்ன வகை மீன்கள் நிக்கு மெண்டதைச் சொல்லுவாங்கள்... அந்த இடத் திலை தூண்டில் போட்டு மீன்களைப் புடிச்சும் காட்டுவாங்கள்...

பருத்துறை மீன் சந்தையிலை குஞ்சு

மீன்களை வாங்கிவந்து தூண்டில் ஊசியிலை குத்தித் தூண்டில் போட்டு பெரிய மீன்களைப் புடிப்பாங்கள் எண்டு சொன்னனானெல்லே... அதுமாதிரித்தான் எங்கடை தேர்தலும்...

...தேர்தலிலை போட்டியிடுகிறவையெல்லாம் குஞ்சு மீனைத் தூண்டலிலை குத்திப் போட்டு பெரிய மீன்களைப் புடிக்கிறவங்கள்... தேர்தலிலை வெண்டால்... பெரிய பதவிகள் கிடைக்கும் அது மட்டுமில்லை... இராச மரியாதை, பாதுகாப்பு, சுகபோகங்கள்... அடுத்த தேர்தல் வரையிலை அவங்கள் இந்த மக்களைத் திரும்பியே பாக்கமாட்டாங்கள்...

கப்பலிலை வேலை செய்யிறவங்கள் கடல் நீரோட்டங்கள் பற்றியெல்லாம் தெரிஞ்சு வைச் சிருக்கிறதுபோலை இந்தத்தேர்தலிலை போட்டிபோடுறவங்கள் எங்கடை சனங்களைப் பற்றியும் நல்லாய்ப் புரிஞ்சு வைச் சிருக்கிறாங்கள்...

'புறொய்லர்' கோழிக் குஞ்சுகளுக்குக் குறுனல் அரிசி போடுற மாதிரி அப்பப்ப ஏதாவது செய்வாங்கள்... அல்லது செய்யப் போறன் எண்டு சொல்லுவாங்கள்...

...இதுதான் எங்கடை தேர்தல்..." இப்படிக் கூறிய குருவன் தனக்குள் சிரித்துக் கொள்கிறான். சப்பாணி கொட்டி அமர்ந்திருந்த குருவன் இடது காலை மடித்து, வலது காலை நீட்டி அமர்ந்தபடி அவனுக்கு எதிராகவுள்ள கருவாட்டுக் கடையைப் பார்க்கின்றான். கடை பூட்டப்பட்டுக் கடையில் உள்ளவர்களும் சென்றுவிட்டனர்...

நீட்டப்பட்டிருந்த அவனது வலது காலை அந்த நாய் நக்குகின்றது...

"... அதுசரி... நான் தேர்தலைப் பற்றிச் சொன்னதுகள் உனக்கு விளங்கிச்சிதா?" குருவன் அந்த நாயிடம் கேட்கின்றான். நாய் வாலை மட்டும் ஆட்டுகின்றது.

"... என்னைப் போலப் பஞ்சப் பரதேசியள்... எப்ப நியாயம் கதைக்க வெளிக்கிடுகிதுகளோ... அதுக்குப் பிறகுதான். எங்களைப்போன்ற பஞ்சப் பரதேசிகளுக்கு ஒரு வாழ்க்கை கிடைக்கும்..." பெருமூச்சோடு கூறிய குருவன் சாறத்தை உரிந்து உதறி உடுத்துக் கொண்டு... கருவாட்டுக் கடை விறாந்தைக்குப் போகத் தயாராகுகின்றான்.

அவனோடு போவதற்கு நாயும் தயாராகின்றது.

## வாழ்வும் இருப்பும்

மலைப் பெண்மையை
வறுமைக் கோட்டுக்குள்
வலிந்து நகர்த்தும்
வடுக்கள் உமிழ்கின்ற
வாழ்வை...
நினைவில் சுழிக்கின்ற
இருப்பு தொலைக்கிறது.

லயத்துக் கழிவுகளை
லயித்துச் சுமப்பது
நெத்திக் கண்களுக்கு
புதிதல்ல...

எவனோ திமிங்கிலம்
திட்டமிடுகின்ற ஊதிய
உயர்வுப் போராட்டம்,
குடியேற்றம்,
மதமாற்றம்,
கருக்கலைப்பு,
குளிசைப் பரீட்சார்த்தம்- அவள்
யதார்த்தத்துள்.

கால் நூற்றாண்டு
கழியு முன்னரே- எத்தனை
அறுவைகள்.

பதின்ம பருவத்திலே
'ஏனியா' ஆபரேஷன்

பிரசவ அறுவை
கருத்தடை அறுவை

மார்பகப்புற்று
கண்ணில் பூ

மன அழுத்தத்தில்,
தொற்றா- பல
பிணிகளும் தொற்றும்.

கல்லுடைத்து
கணம் தூக்கியதால்
கருப்பை இறக்கமாம்.

உதிரப் போக்கால்
அவளுடலம்
சடலமாய் சரியும் போது,
தயவு செய்து – அவளை
கீறிப் புதைக்காதீர்கள்.

கருந்துளைகளுக்கப்பாலும்
கடந்து செல்லும்
களியொலிகளைக் கேளா
வௌவால்களுக்கு- இந்த
றப்பர் மரங்களை
ரணப்படுத்துவதே
கேளிக்கையாயிற்று

திருமதி சி. சாரதாம்பாள்

# பாடல்கள் கொல்லப்பட்ட ஆண்டொன்றில்

ஃப்ரெட்ரிக்கோ கார்சியா லோர்காவுக்குச்* சமர்ப்பணம்

பாடல்கள் கொல்லப்பட்ட ஆண்டை யார் நினைவில் வைத்திருக்கிறீர்கள்?
பாடல்கள் கொல்லப்பட்டன.
பாடல்கள் கவிஞர்களின் கதவைத் தட்டின—
திறவுங்கள்! நாங்கள் ஒளிக்க வேண்டும்...

சில கவிஞர்கள் கதவைத் திறந்தார்கள்.
பாடல்களுடன் சேர்த்து அவர்களும் வாசற்படியிலேயே கொல்லப்பட்டார்கள்.
தங்கள் அறைகளின் மூலைகளில ஒளித்திருந்த சில கவிஞர்கள்
தமது கதவுகளை இறுக்கப் பூட்டினர்.
அவர்களது பாடல்கள் அவர்களது கதவடியிலேயே கொல்லப்பட்டதுன.
குருதிதோய்ந்த ஐந்து சோடி விரல் அடையாளங்கள் கதவில் எஞ்சின.

பாடல்கள் புதைக்கப்படவில்லை.
காகங்கள் இறந்த பாடல்களைக் கொத்தின. நைட்டிங்கேல் வானம்பாடிகளின் தொகைஅதிகரித்தது.
ஒலியில்லை, சத்தமில்லை.
அவற்றின் கழுத்தில் தொங்கிய கிற்றார்கள் மட்டும்
காற்றில் ஆடின
பின்னர் உலகின் இரத்தந் தோய்ந்த நிலங்களிலெல்லாம் பயணித்த முதியோன் ஒருவன் இறந்த
பாடல்களின் திறந்த கண்களை மூடினான்.

பாடல்கள் கொல்லப்பட்டது யாருக்கு நினைவிலுள்ளது?
பாடல்களின் பழைய காயங்கள் புதிய பக்கங்களால் மருந்திது கட்டப்படுகிறதுன்றன.
நாங்கள் உடைந்த கிற்றாரை அணைக்கிறோம்.
நிலத்தின் மணத்தை நாம் முகர்கிறோம்
பாடல்கள் கொல்லப்பட்ட ஆண்டில் இறந்த பாடல்களை நாம் பாடுகிறோம்

*(ரமிஸ் ரொவ்ஷான், அசர்பைஜான், 1946)*

தமிழில்: நிலங்கோ

* கார்சியா லோக்கா நன்கறியப்பட்ட கவிஞரும் எழுத்தாளருமாவார். ஸ்பானிய இலக்கிய வட்டத்தில் தலைமுறை 27 என்ற புகழ்பெற்ற குழுவின் உறுப்பினர். ஸ்பானிய உள்நாட்டுப் போரின் போது தனது 38வது வயதில் தேசியவாதிகளால் கொல்லப்பட்டார்.

# சுத்தமாக காண்பித்தலும் சுத்தப்படுத்திக் கொள்ளலும்

கருணாகரன்

சற்று ஊன்றிக் கவனித்தீர்களென்றால் இலக்கியப்போலிகளுக்கும் அரசியல் போலி களுக்குமிடையில் பெரிய வித்தியாசமெது மில்லை என்பதைக் கண்டு கொள்வீர்கள். அத்தோடு இவையிரண்டிலும் மேலும் பல சனவிரோத உள்ளடுக்குகளையும் உங்களால் கண்டு கொள்ள முடியும். இரண்டுமே தங்களைத் தந்திரமாகச் சுத்தமாக்கிக் காட்ட முனைபவை. பதிலாக மற்றவைகளின் மீது எந்த ஆதாரங்களுமில்லாமல், நியாயங்களுமில் லாமல், ஏன் அடிப்படைகளே இல்லாமல் பழித்துரைப்பவை. இப்படிச் செய்வதன் மூல மாக உண்மையை மறைத்துத் தம்மை மேலுயர்த்தவும் முன்னகர்த்தவும் முயற்சிப் பவை. இதற்குக் காரணம், இரண்டுமே தன் னலன் சார்ந்து இயங்குபவை. இந்தத் தன்ன லனே தன்முனைப்பையும் தனக்கான முதன் மைப்பாட்டையும் தேடி முன்னகர வைக்கிறது. என்பதால் இவை முற்று முழுதாக வணிக அடிப்படையில் இயங்குபவை. வணிகத்தின் நுட்பங்களைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்பவை. இப்படி வணிக லாபத்தைக் குறி வைக்கும்போது அங்கே அறம் காணாமல் போகிறது. அல்லது காணாமலாக்கப்படுகிறது. பதிலாக அது வணிக அடிப்படையை மட்டுமே பெற்றுவிடுகிறது. அப்படி லாபத்திற் குறி வைக்கப்படும் வணிக முயற்சியானது அடிப்படையில் சன விரோதம், சமூக விரோ தம், சூழல் விரோதம், வரலாற்று விரோதம் என அனைத்திலும் விரோதத்தையே தன்ன கத்தில் கொள்கிறது. இதையிட்ட கவலையோ, வெட்கமோ, குற்றவுணர்ச்சியோ இவற்றுக்கு ஏற்படுவதில்லை. தன்னை மையப்படுத்திச் சிந்திக்கும்போதே பிறவனைத்தும் பொருட் படத் தவறிவிடுகின்றன. அத்தோடு அவை கீழாக்கவும் படுகின்றன. ஆகவே அறத்தின் வீழ்ச்சியிலேயே இவை உயிர்வாழ்கின்றன. ஆனால் வேடிக்கை என்னவென்றால், இதை ஒரு போதுமே இவை ஏற்றுக்கொள்வதில்லை. பதிலாகத் தாமே அறம் உட்பட அனைத் தினதும் காவலர்களென நிறுவ முற்படுகின் றன. மறுவளமாகத் தமக்கு எதிரான தரப்பு களையே அறவீழ்ச்சிக்குக் காரணமானவை எனக்காட்டி விடவும் முயற்சிக்கின்றன. இது சுத்த அயோக்கியத்தனம், அங்கிடுதத்தித் தனமாகும். இதைப் பலரும் அறிவர். ஏன் நம்மிற் பலருக்கும் கூட இவையெல்லாம் தெரியும். ஆனாலும் நாங்களும் இவற்றைக் குறித்து அதிகமதிகம் கவலைப்படுவதில்லை. இதற்கெல்லாம் போய்ச் சண்டை போட்டுக் கொண்டிருக்க முடியுமா? என்று மெல்ல ஒதுங்கி விடுகிறோம். சேற்றிலிருந்து வரும் பன்றியைக் கண்டால் தூர விலகி விட வேண்டும் என்று யாரோ சொன்னது அப்போது எங்கள் நினைவிலெழுந்து எங் களை விலகி விடச் சொல்கிறது. இதனால் பொய்களில் சவாரி விடுகிறவர்களுக்கு மேலும் வசதியாகிப்போகிறது. கேட்பதற்கு ஆளில்லை என்றால் தம்பி சண்டமாருதன் என்ற மாதிரியே அவர்கள் கோலோச்ச முற்படுகிறார்கள். இதற்கு அவர்களுக்குத் தாம் சார்ந்த அணிகள், குழுக்கள் போன்றவை வேறு பலம் சேர்க்கும். இந்தப் பலத்தை வைத்துக் கொண்டே தம்மையும் தமது நோக்கையும் போக்கையும் நியாயமென நிறுவ முயற்சிக்கின்றன. இத்தகைய போக்கே ஈழ இலக்கியத்திலும் எழுத்தாளர்களில் ஒரு தொகுதியினரிடத்திலும் காணப்படுகிறது. இவர்கள் தங்களைச் சுத்தமாகக் காண்பிப் பதற்கு ஏராளமான முறைகளில் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். கவனிக் கவும் தங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதில்லை. சுத்தமாகக் காண்பிப் பதற்கே முயற்சிக்கின்றனர் என்பதை. இந்தக் காண்பித்தல் என்ற தோற்றத்தை உருவாக்கு வதற்குவதற்காக எழுத்தில் கலை

வெளிப்பாட்டின் அவசியம், அழகியலின் அடிப்படைகள் என்றெல்லாம் பேசுவர். இன்னொரு வகையில் அரசியலில் இனரீதியான சிந்தனைகளையும் அடையாளங்களையும் முன்னிலைப்படுத்துவர். இதற்கும் மேற்சென்று இதை ஒற்றைப்படை யிலேயே முன்வைப்பர்.

இவ்வாறு கலை வெளிப்பாட்டின் அடிப்படைகள், அதில் அழகியலின் முக்கியத்துவம் பற்றிச் சொல்லுக்குச் சொல் வலியுறுத்தல்களை முன்வைப்போர் தமது அணியைச் சேர்ந்தவர்கள் அதில் கோட்டை விட்டுத் தாழ்விறக்கம் கொள்ளும்போது அதைக் கண்டு கொள்வதில்லை. இதற்கு நல்லதொரு அண்மைய உதாரணம், தீபச்செல்வனின் "நடுகல்" நாவல் பற்றிக் கள்ள மௌனத்தில் பலரும் உறைந்திருப்பதும் மறைந்திருப்பதுமாகும். "தீபச் செல்வனின் தமிழ்த்தேசிய அரசியல்" நோக்கோடு சமனிலை கொள்ளும் யமுனா ராஜேந்திரன் இதை நாவல் எனத் தன்னாற் கொள்ள முடியாதுள்ளது என்று அதற்கான காரணங்களைக் கூறியிருக்கிறார். யமுனா ராஜேந்திரன் மட்டுமல்ல, அதனை வாசித்தவர்களிற் பலரும் இத்தகைய கருத்தையே கூறியிருக்கின்றனர். ஆனால் இதனை அழகியல் பற்றியும் இலக்கியப்பிரதியின் அடிப்படைத் தகுதிகளைப்பற்றியும் வரிக்கு வரி அடிக்கோடிட்டும் மேற்கோள்களிட்டும் அடையாளப்படுத்த முற்படுகின்ற அ. யேசுராசா உள்படப் பலரும் பேசாதே இருக்கின்றனர். இதற்குக்காரணம் வேறொன்றுமில்லை. யேசுராசாவும் தீபச்செல்வனும் இன்று ஓரணி கொண்டிருப்பவர்கள் என்பது மட்டுமே. யேசுராசாவின் அரசியல் நிலைப்பாடும் தீபச்செல்வனின் நிலைப்பாடும் ஒன்றென்பதேயாகும். இதேபோல ஒத்த அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டவர் என்றாலும் யமுனா விலகி நிற்கிறார். யேசுராசா விலக முடியாமல் கள்ள மௌனத்தில் மறைந்து நிற்கிறார். யேசுராசா மட்டுமல்ல, இந்த அணியோடு தம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள பலரும் கூட தங்கள் மௌனத்தின் பின்னே உள்ளொடுங்கிக் கிடக்கின்றனர். இந்தக் கள்ள மௌனம் என்பது வெளிவெளியாகப் பேச முடியாத நிலையின் இயலாமையன்றி வேறென்ன? டானியலின் நாவல்களை அரசியல் பிரச்சார நாவல்கள், ஒற்றைப் பரிமாணமுடையவை, வன்முறை மனோபாவத்தைக் கொண்டவை என்று விழித்தால் நடுகல் எதினிலிருந்து வேறுபட்டுயர்கிறது? இதைக்குறித்த பதில்களென்ன? பதிலே வராது. அப்படி வருமாக இருப்பின் அது தமிழ்த்தேசிய அரசியலுக்கு வலுச்சேர்க்கும் தகுதியைக் கொண்டிருக்கிறது. என்பதால், ஒடுக்கப்பட்ட இனமொன்றின் ஆன்மக்குரல் எனத் தகுதிப்படுத்தப்படும். அப்படியென்றால் நாம் இன்னொன்றை இந்தச் சந்தர்ப்பத்திற் கவனிக்க வேண்டும். இப்படி இவர்கள் பேசுகின்ற, பேச முற்படுகின்ற அரசியலுக்கும் தாம் எடுத்திருக்கும் அரசியல் நிலைப்பாட்டுக்கும் கூட விசுவாசமாக இருப்பதில்லை என்பதை. இன்று தமிழ்த்தேசிய நிலைப்பாட்டையும் அதனுடைய அரசியலையும் ஆதரிக்கின்ற எழுத்தாளர்கள் மற்றும் கலை வெளிப்பாட்டாளர்களில் எத்தனை பேர் அந்த அரசியலின் வழி மக்களின் போராட்டங்களில் பங்கேற்கின்றனர்? மக்களுடைய பிரச்சினைகளுக்காகக் குரல்கொடுக்கின்றனர்? மக்களோடிணைந்து வாழ்கின்றனர்? எத்தனைபேர் சமூகப் பிரச்சினைகளில், சமூகத்தில் நிலவும் அசமத்துவ நடைமுறைகளுக்கு எதிராகப் போரிடுகின்றனர்? கேப்பாப்பிலவு, இரணைதீவு, வலி வடக்கு போன்ற பல இடங்களில் மக்கள் தங்கள் சொந்த நிலத்துக்குச் செல்வதற்காகப் போராடியபோது இவர்களில் ஒருவரைத் தன்னும் நான் கண்டதில்லை. இதைப் போலவே அரசியற் கைதிகள் என்ற சிறைப் படுத்தப்பட்ட விடுதலையாளர்களுக்கான போராட்டம், குடிநீருக்கான போராட்டம், அவசரகாலச் சட்டத்துக்கு எதிரான போராட்டம், காணாமலாக்கப்பட்டோ ருடைய உறவினர்களின் போராட்டம், மலையகத் தொழிலாளர்களுடைய சம்பள உயர்வுக்கான போராட்டம், சூழற்பாதிப்புக்கெதிரான போராட்டம் என நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற எந்தப் போராட்டத்திலும் இவர்கள் பங்கேற்றதாகச் சரித்திரமே இல்லை. மட்டுமல்ல மீண்டும் மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் அல்லது மேற்கிளம்பிக் கொண்டிருக்கும் சாதிய ஒடுக்குமுறைகளைக் குறித்தும் இவர்களில் எவரும் எதுவுமே பேசுவதில்லை. ஆனால், மேடைகளிலும் எழுத்திலும் தீவிரமாகத் தம்மைத் தமிழ்த்தேசியவாதிகளாகக் காண்பித்துக் கொள்கின்றனர். வசதிப்படும்போதெல்லாம் "தமிழ்த்தேசியம்" என்ற ஒரு பெருந்திரைக்குப் பின்னால் ஒழிந்து கொள்கின்றனர். அதேபோல தேவைப்படும்போது






அந்தத் திரைக்கு முன்னே வந்து நின்று நாடகமாடுகின்றனர். இப்படிச் செயற்படுவதை எப்படி, எந்தப் பெயரைக் கொண்டு அழைப்பது? மெய்யாகவே தமிழ்த்தேசிய அரசியலை ஆதரிப்பவர்களாக இருந்தால் அது வலியுறுத்துகின்ற நிலைப்பாட்டுக்கும் கோட்பாட்டுக்கும் தம்மை ஒப்புக்கொடுத்துப் போராட வேண்டும். அந்தப் போராட்டங்களோடு தங்களைப் பிணைத்துக் கொள்ள வேண்டும். அதுவே அழகு. அதுவே நியாயம். அதுவே தகுதியான செயற்பாடு. தமிழ்த் தேசிய அரசியலின் விளைவுகளால் நெருக்கடிகளைச் சந்தித்திருக்கின்ற, பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களோடு தம்மைப் பிணைத்துக் கொள்ளத் தயாரில்லாத போது அது இழிவன்றி வேறென்ன? ஒரு சிறிய உதாரணம் அல்லது கேள்வி, காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஓராண்டுக்கும் மேலாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய போராட்டத்தில் என்றாவது நீங்கள் அதிதீவிரப் புனிதர்களாகத் தம்மைக் கட்டமைத்துக் கொண்டு தேசியப்பற்றைப் பற்றிப் பேசுவோரை நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா? இதெல்லாம் இவர்களுடைய கண்களுக்குத் தெரிவதில்லையா? அல்லது இவற்றைப் பற்றித் தாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்கிறார்களா? சரி, இதுதான் கிடக்கட்டும். அரச ஒடுக்குமுறையும் பௌத்த விரிவாக்கம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என இவர்களே வலியுறுத்துகின்ற சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக இவர்கள் எங்கும் கிளர்ந்தெழுந்ததாக இல்லையே.



ஆனால், இந்தப் போராட்டங்களிலெல்லாம் கலந்து கொள்ளும் எழுத்தாளர்களும் கலைஞர்களுமுண்டு. தங்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு விசுவாசமாக நின்று கொண்டே அவர்கள் இதைச் செய்கின்றனர். அப்படிக் கலந்துகொள்ளும் இலக்கிய அமைப்புகளுமுண்டு. உதாரணம், தேசிய கலை இலக்கியப் பேரவை. எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்றால் க. தணிகாசலம், சோ.தேவராஜா, தனுஜன், ஸ்ரீபிரகாஸ், மு. மயூரன், க. சத்தியசீலன், மற்றும் கிரிஷாந்த், யதார்த்தன் எனப் பலர் இந்த வரிசையில் வருகின்றனர். இவர்கள் தம்மைச் சூழ நடக்கும் அனைத்து ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடுகின்றனர். அனைத்துவகையான மானுட விரோத, சூழல் விரோத, பண்பாட்டு விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தம்மை முன்னிறுத்துகின்றனர். இதுதான் உண்மையில் அழகு. இதுதான் உண்மையில் மாண்பு. இதுதான் உண்மையான சிறப்பு. சொல்லுக்கும் செயலுக்குமிடையில் இடைவெளியும் மாறுபடுதலும் இல்லாத, பொய்மையும் போலியுமில்லாத தூய நிலை. எழுத்தின் மாண்பென்பது அதற்கு மாறாகத் தன்னைக் கட்டமைத்துக் கொள்ளாமையாகும். இவர்களுடைய அரசி

யல் மக்களின் நன்மையைக் குறித்தது. சூழலின் பாதுகாப்பைக் குறித்தது. பண்பாட்டின் பேணுகையைப் பற்றியது. இதையெல்லாம் அறிவியல் நோக்கிலும் பன்மைத்துவ நோக்கிலும் ஜனநாயக அடிப் படையிலும் நோக்குவது. அத்தகைய நோக்கே இவ்வாறு இவர்களை இந்தப் போராட்டங்களிலும் இந்த மேலான நன்மைகளிலும் பிணைத்துள்ளது எனலாம். எழுத்தாளரும் கலைஞர்களும் கட்டாயம் போராடித்தான் ஆக வேண்டுமா? போராட்ட இயக்கங்களோடு தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டுமா? இது கட்டாய விதியா? என்று யாரும் கேட்கக் கூடும். தாம் வலியுறுத்தும், தாம் நேசிக்கும் அரசியலோடு தம்மை இணைத்துக் கொள்ள முடியாதென்பதும் அதற்கு மக்களும் பிறருமே பொறுப்பு, அவர்களே போராட வேண்டும் என்று கருவதும் அதிகார நிலைப்பட்ட மனோபாவமேயாகும். தாம் கருத்துரைப்பவர், அந்தத் தளத்தில் நின்று ஆதரவளிப்பவர் மட்டுமே. தெருவிலிறங்கிப் போராடுவது தமது வேலை அல்ல என்பது மக்கள் சந்திக்கும் நெருக் கடிகளிலிருந்து விலகியிருப்பதாகும். இது போராடும் மக்களைக் கீழிறக்கி விலக்கம் செய்வதாகும். மக்களுடைய அலைச்சல்கள், போராட்டத்தில் செலவிடும் உழைப்பு போன்றவற்றுக்கு நிகராகத் தம்மையும் தமது உழைப்பையும் செலுத்தத் தயாரில்லாத நிலை இரண்டகமானது. சனங்கள் வேறு. தாம் வேறு என்ற பிரிகோட்டின் பாற்பட்டது. இந்த வேறுபாட்டையே எமது அரசியல்வாதிகளிற் பலரும் இன்று கொள்கின்றனர். ஆகவேதான் எமது சூழலில் இலக்கியப் போலிகளும் அரசியல் போலிகளும் என இரண்டு தரப்பையும் ஒன்றெனக்காணவும் சமப்படுத்திக் கொள்ளவும் வேண்டியுள்ளது.

இலக்கியத்தில் எப்போதும் சர்ச்சைகளிருப்பதற்குப் பிரதான காரணம், அது கருத்து நிலைப்பட்டிருப்பதேயாகும். வலியுறுத்தப்படும் கருத்தியலுக்கும் செயற்பாட்டுக்கும் அதன் வழி ஒழுகும் வாழ்க்கை முறைக்கும் இடையிலான வேறுபாட்டைக் கொள்ளும்போது நிகழ்வதாகும். அரசியல் மயப்பட்ட எழுத்தாக இருந்தாலும் சரி, அரசியல் நீக்கம் செய்யப்பட்ட எழுத்தாக இருந்தாலும் சரி இரண்டுமே ஏதாவதொரு கருத்து நிலைப்பட்டேயிருக்கும். ஆனால், இதைச் சந்தர்ப்பங்களில் மழுப்பித் தப்பித்துக்கொள்ளவே சிலர் (எல்லோருமல்ல) அழகியல் முதற்கொண்டு இன, மத, தேசிய அடையாளங்களை வலியுறுத்தி அவற்றிற் சரணாகதி அடைவதும் அதைக் கவசமாக்கிக் கொள்வதுமாகும்.

வரலாற்றில் இதுவொன்றும் புதியதல்ல. ஒவ்வொரு போகத்துக்கும் முளைத்துச் சடைக்கின்ற களைகளைப்போல ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்தப் போலிப் பதர்கள் முளைத்துச் சடைப்பது வழமை. ஆனால், வரலாறும் மக்கள் வாழ்க்கையும் இதற்கு அப்பாலானது. அது மக்களாலும் மக்கள் நேயச் சக்திகளாலும் உருவாக்கப்படுவது. அதுவே நிலைத்திருப்பது. இத்தனை ஒடுக்குமுறைகள், அதிகாரத்துவங்கள் அனைத்திற்குள்ளும் நின்று நிலைத்திருப்பது மக்களுடைய காலடிச் சுவடுகளே. அவர்கள் உருவாக்கிய வரலாறும் படைப்புகளும் வாழ்வுமே.





# நானும் கடவுளும்

இன்று வெள்ளிக்கிழமை
நானும் கடவுளும்
மதுவருந்திக் கொண்டிருந்தோம்

ஒரு மிடறு உள்ளே இறங்கியதும்
என் முகம்
அஷ்ட கோணலாய்ப் போனது

"கொஞ்சம் தண்ணீர் விட்டுக்கொள் மதுவின்
செறிவைத் தணிக்கும்" என்றார் கடவுள்

தலை சூடாகியதும்
எனது பிரசங்கத்தை தொடங்கினேன்



"ஆண்டவரே சர்வ வல்லமைப் படைத்தவரே
சேரியின் குழந்தைகளை
சாக்கடையில் குப்பைகளை பொறுக்கும் குழந்தைகளை
மனித மலத்தை அள்ளப் பிறந்திருக்கும் குழந்தைகளை
பசித்த குழந்தைகளை
யாசகம் கேட்கும் குழந்தைகளை
தினம் தினம் போர்களால்
அவதியுறும் குழந்தைகளை
அகதியாய் திரியும் குழந்தைகளை
ஏனய்யா படைத்தீர்?"

"நீர் எந்த முகத்தை வைத்துக்கொண்டு
எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள் குழந்தைகளே எனச் சொல்லுவீர்"

"வாழ்வின் சம்பவங்கள்
ஓநாய்கள் போல
அக் குழந்தைகளை துரத்தும் போது அவர்களும் ஒரு நேரத்தில்
ஓநாய்களாய் மாறி
இந்தச் சமூகத்தில் அலைந்து திரிவர் என நீர் அறியவில்லையா?"

"அற்புதங்கள் பல செய்த அன்பானவரே அவர்களின் செவிகளில்
அன்பு என்பது
எவ்வளவு அபத்தமாய் ஒலித்திருக்கும் என்பதை நீர் அறியவில்லையா?"

கடவுளின் தலையும் சூடாகிவிட்டது
கண்ணீருடன் பிரார்த்தனை செய்கிறார்
அப்போது கூட "அன்பானவர்களே"
என்று தான் ஆரம்பித்தார்

அன்பு
ஓ! அது தான் எவ்வளவு அபத்தமான வார்த்தை.

சி. கிருஷ்ணப்பிரியன்



# நிலாவின் மடியில்

ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்

வழமையாக அந்த வீதியால் சென்று வருப வர்கள் நீலவேனியின் வீட்டினை எட்டிப் பார்க்கத் தவறவில்லை. ஏனெனில் அரிதான நிகழ்வாக சினிமாப்பாடல் ஒலிக்க விடப்பட் டிருந்ததனால் அங்கு ஏதாவது சுப நிகழ்வு நிகழ்கின்றதா என்ற சந்தேகத்தை ஊரவர் களிடம் ஏற்படுத்தியிருந்தது. சிலர் நின்று நிதானமாக தமது சந்தேகத்தைக் தீர்த்தனர். ஓரிருவர்,

"என்ன நிலாக்கா வீட்டிலை ஏதும் கொண் டாட்டமோ"

என தமது சந்தேகத்தை தீர்த்துச் சென்றனர்.

நிலாவிற்கு இன்றைய நாள் விசேடமானது. அவளின் மகள் வரப்போகின்றாள். பாட சாலை இரண்டாம் பாடவேளையின்போது அவளது கணவன் மகளை அழைத்து வரச் செல்வதை அறிவித்த நேரத்திலிருந்து இருப் புக்கொள்ளாது தவித்தாள். எல்லா அதிஸ்ட மும் ஒன்றாக வந்து பூமிமீது பறப்பதைப் போன்ற உணர்வைக் கொடுத்தது. மனதை ஒருநிலைப்படுத்தி வகுப்பறைச் செயற்பாடு களில் முழுமையாக ஈடுபட முடியாமலிருந்தது. அரை நாள் விடுகையும் மேலதிகமாக ஒரு கிழமைக்குரிய விடுமுறைக்கான அனுமதியை யும் பெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டிலும் ஒரு இடத்தில் பொறுமையாக இருக்க முடியாதிருந்தது. வீடும் இன்றுதான் மிகவும் தூய்மையற்றதாக தெரிந்தது. வீட் டினை தூசிதட்டி கூட்டி ஒழுங்குபடுத்திவிட்டு பெருமூச்சு விட்டவளின் கண்ணுக்கு திரைச் சீலைகளில் இருந்த சின்ன அழுக்குகளும் நுணுக்குக்காட்டியில் தெரியும் நுண்ணங்கி களாக நகர்ந்தன. அவை எல்லாவற்றையும் கழற்றி சலவை இயந்திரத்தில் போட்டாள். அது இயங்கும் நேரத்தில் மகள் வரவை பார்வையிட எண்ணி பல தடவை வாசலுக்கு போனாள். அந்த வேளையில் நான்கு பேர்,

"என்ன நிலாக்கா ஆரோ வீட்டை வரப் போகினம் போல" என்று கேட்டுவிட்டனர்

"ஓம்... ஓம் எல்லாரையும் பாக்க கூப் பிடுவன்" என்று சொல்லி வைத்தாள்.

சலவை இயந்திரத்தில் இருந்த திரைச்சீலை களை முற்றத்திலிருந்த கயிற்றுக்கொடியில் விரித்துக் காயப்போட்டாள். அவ்வேளை கொடியின் ஓரமாக வந்து அமர்ந்த காகம் கரைந்தது. மற்றைய நாட்களாயின்,

"சூய் சும்மா கத்தாதை இஞ்ச ஆட்கள் வரப்போறது மாதிரிக் கத்துவாய் ஒருத்தரும் வறேலை"

என்று கல்லை எடுத்தெறிந்து கலைத்துவிடு வாள். ஆனால் இன்று காகம் கரைவதை இரசித்தாள். காற்றில் அசைந்த துணிகள் நீர்த்திவலைகளை அவளின் மீது சிந்தியது. அதுவும் அவளுள் இன்பத்தை படரவிட்டது.

பாடசாலையிலிருந்து வந்த வேகத்தோடு வேலைகளை செய்ய ஆரம்பித்தது அவளுள் ஒரு இயலாமையை ஏற்படுத்தியது. தேநீர் குடிப்பதற்காக சமையலறை வாசலில் நுழைந் தவள் திரும்பிச் சென்று கணவனை கை பேசியில் தொடர்பு கொண்டாள்.

"என்னப்பா இவ்வளவு நேரமா என்ன செய்யிறியள்? எப்ப வருவியள்...? ரண்டு மணித்தியாலமாகுமோ...?"

அவசரமாக கதைத்து முடித்துவிட்டு கை பேசியை சலிப்போடு மேசைமீது வைத்தாள். அக்கணமே தேநீரின் நினைவும் மறந்து போனது. வீட்டினை ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்தாள். அவளது சுழற்சியில் மூன்று அறைகளும் ஆராயப்பட்டது.

"அச்சச்சோ பிள்ளை படுக்கிற அறையை

எதுக்கும் கழுவினால் நல்லது. தூசுகளால ஏதும் வருத்தம் வந்தாலும்"

அறையை கழுவிச் சுத்தப்படுத்துவதற்குரிய வேலைகளை செய்ய ஆரம்பித்தாள். அறையில் இருந்த தேவையற்ற பொருட்களையெடுத்து பக்க அறைக்கு கொண்டு சென்று அடுக்கினாள். ஒரு அறையை கழுவுதல் என ஆரம்பித்த வேலை வீடு முழுவதும் கழுவிச் சுத்தப்படுத்துவதில் நிறைவுற்றது. செம்பு நிறைந்த தண்ணீரை எடுத்து குடித்துவிட்டு, மகளின் ஆடைகள் இருந்த அலுமாரியை திறந்தாள். மகள் வரப்போகின்றாள் என தெரிந்த இரு நாட்களில் வாங்கி சேகரிக்கப் பட்டவை. தனது ஆட்காட்டிவிரலால் அவற்றை மேலிருந்து கீழாகத் தடவிப் பார்த்தாள். உடல் சிலிர்த்து நின்றாள். கண்ணாடியில் தெரிந்த தன் உருவம் கண்டு சலித்துக் கொண்டு இயங்குநிலைக்கு வந்து, தன் ஆடையில் ஒன்றை உருவியெடுத்துக் குளிக்கச் சென்றாள். மளமளவென்று குளித்து முடித்துவிட்டு தன்னை அலங்கரித்து வழமைக்கு மாறாக குத்துவிளக்கை ஏற்றி கண்ணீர் சிந்தி நின்றாள். கடவுளுடன் பேசுவதற்கு வார்த்தைகள் தேவையற்றதாக இருந்தது. இதேயிடத்து பல நாட்கள் கொட்டித்தீர்த்த வார்த்தைகள் எண்ணற்றவை. சில மணித்துளிகள் கழித்து வாசலை நோக்கி சென்று அமர்ந்தாள்.

நிலா வாசலில் அமர்ந்திருப்பதை கண்ட முன்வீட்டுப் பாட்டியம்மா அங்கு வந்தாள்.

"என்ன பிள்ளை பள்ளிக்கூடத்தால வேளைக்கு வந்திட்டாய். ஏதும் உடம்புக்கு பிரச்சனையே"

"இல்லை பாட்டி, இவர் மகளை கூட்டியரப் போட்டார் அதுதான் வந்தனான்"

"ஓ முந்தநாள் சொன்னனி பெரிய சந்தோசம். பார் இப்பதான் உன்ர முகத்திலை வெளிச்சமடிக்குது. நான் வீட்டைப் போட்டு வாறன்"

பாட்டி நிலாவின் தலையினை செல்லமாக வருடிவிட்டு தன் வீட்டுப் பக்கமாக நடந்தாள். வீதியில் முச்சக்கர வண்டியொன்று வரும் சத்தம் கேட்டது. பாய்ந்தடித்து வீதிக்கு ஓடினாள். வந்த வண்டி மறுபக்க வீதியால் திரும்பிச் செல்ல, ஏமாற்றத்தோடு மீண்டும் இருக்கையில் அமர்ந்தாள். வீட்டில் அவளும் கணவனுமாக அனுபவித்த தனிமையெனும் கொடுமை இன்றோடு மடியப்போகின்றதை நினைத்து, தொலைந்த இளமையைத் திரும்பக் கொண்டுவந்து துள்ளிக் குதித்தாள். ஒலித்த பாடலோடு தானும் சேர்ந்து பாடினாள். மீண்டும் முச்சக்கர வண்டியின் ஒலி கேட்டது. நிலா போவதா விடுவதா என்று போராடிக் கொண்டிருக்க முச்சக்கர வண்டி வாசலில் வந்து நின்றது. மென்று விழுங்க முடியாத உணர்வு. முன்னே ஒரு அடியெடுத்து வைக்க சிந்தை தடுமாறியது. இதயத்துடிப்பு தனது வேகத்தைக் கூட்டியது. பொலபொல வென கண்ணீர்த் துளிகள் மார்பில் விழுந்தன. வாசலில் நின்று கணவன் தன்னை அழைப்பது எங்கோ ஆழ்குழியிலிருந்து கேட்பது போலிருந்தது.

மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு உள்ளே வந்தான். வெள்ளைப் போர்வையி னால் சுற்றி மூடியிருந்த சிசுவை அவளது கையில் வரமாகக் கொடுத்தான். போர்வையி னுள் நெளிந்த மகளின் சிறு பாதங்கள் நிலாவின் வயிற்றில் செல்லமாக உதைத்தன. திருவடி தீட்சையினால் பிறவிப் பயனை அடைந்ததாக உணர்ந்தாள். தன் கணவனை நீர் சிந்தும் விழிகளால் நோக்கினாள். அவன் செயல் மறந்து நின்றான். நிலா கைகளில் குழந்தையோடு நிற்கும் தோற்றம் பலவருடக் காத்திருப்பின் பெரும் பேறாகத் தெரிந்தது. குழந்தையையும் மனைவியையும் மென்மை யாக அணைத்தான்.

நிலாவினால் எதுவும் பேசமுடியாதிருந்தது. மெல்லக் குழந்தையோடு கதிரையில் அமர்ந்தாள். குழந்தை தனது சிவந்த உதட்டை மெல்ல விரித்து அழுதது. நிலாவும் கணவனும் குழந்தையின் அழுகையில் இன்பத்தையும், துன்பத்தையும் ஒரே கணத்தில் அனுபவித்தனர். நிலா கணவனின் கையில் குழந்தையைக் கொடுத்துவிட்டு முன்னாயத்தமாக வாங்கி வைத்திருந்த பால்மாவை கரைத்தெடுத்து வந்து கணவனிடம் கொடுத்தாள்.

"நீ இரு நிலா"

நிலாவை கதிரையில் அமரவைத்து பாலைக் கொடுக்கும்படி வேண்டினான். நிலா குழந்தையை தன் நெஞ்சோடு அணைத்து பாலைக் கொடுத்தாள். மார்பு சுரந்து பால் பெருகுவதாக உணர்ந்தாள். குழந்தையின் அழுகை மறைந்தது. அணைத்து வைத்திருந்த கையின் விரல்களால் குழந்தையின் அங்கங் களை தொட்டுயிர்த்தாள். அந்தப் பரவச நிலையை ரசித்தவாறு கணவனும் அவளது காலடியின் கீழ் சப்பாணி கொட்டி அமர்ந்தான்.

எட்டு மாதங்களுக்கு முன் ஒரு குழந்தையை எடுத்து வளர்ப்பது என முடிவெடுத்து, அதற்கான நடைமுறைகளை நிறைவு செய்து, காத்திருந்தவேளையில் இன்று காலை நீதிமன்றத்திலிருந்து குழந்தையைப் பொறுப்பேற்றுச் செல்லுங்கள் என்ற அழைப்பைக் கேட்டு ஓடிச்சென்று பேரானந்தத்தைக் கைகளில் ஏந்தி வீடு கொண்டு வந்தது வரையான சம்பவங்களை நிலாவிடம் கூறினான். அவள் அவையாவற்றையும் குழந்தை மீது வைத்த கண்களை எடுக்காது கேட்டாள். அவை அனைத்திற்கும். ஒரு பதிலாக குழந்தையின் உச்சியில் முத்தமிட்டு,

"பிள்ளைக்கும் என்னைப் போல பெரிய காது பாருங்கோ... என்னைப் போல நாடியிலை மச்சமும் இருக்கு......"

கணவனிடம் பெருமிதமாகக் கூறினாள்.

# அஞ்சற்க...

*கண்ணீரும் வற்றிய கண்களை அஞ்சற்க..*
*காற்றுக்கும் கேட்காத கதறலை அஞ்சற்க..*
*வென்றோரே, கொன்றோரே, வெடிபோட்டுச் சிரித்தோரே..*
*வெளியேற்ற வழியற்ற அழுகையை அஞ்சற்க..*
*பன்னாட்டுப் போர்க்குற்றச் சாட்டுகளை அஞ்சற்க..*
*படங்களாய் வெளிவந்த சான்றுகளை அஞ்சற்க..*
*மண்ணுக்குள் ஆழத்தில் அமுகுண்ட பிணங்களின்*
*மனதுக்குள் ஓலமிடும் உண்மைகளை அஞ்சற்க..*
--
*தெய்வத்தையன்று, உம் தெரிவினை அஞ்சுக!*
*விதியினையன்று, நீர் விதைத்ததை அஞ்சுக!*
*கொடும்வதை வலியினை கதறலையன்று, - நீர்*
*கொடியாட்டி வரவேற்ற கொடியோரை அஞ்சுக!*
*பழியினையன்று, உம் வழியினை அஞ்சுக!*
*பாவத்தையன்று, உம் ஆபத்தை அஞ்சுக!*
*ஒடுக்கியும் அடக்கியும் ஓங்கும் அதிகாரத்தை*
*உயர்த்தி உடன்பட்டு வளர்த்ததை அஞ்சுக!*
--
*எதிர்ப்பதையன்று, நீர் வளர்ப்பதை அஞ்சுக!*
*மற்றதையன்று, நீர் பெற்றதை அஞ்சுக!*
*பிறர்தானே சாகட்டும் என நீங்கள் பழிதீர்க்க*
*உருவேற்றி உருவாக்கி ஏவியதை அஞ்சுக!*
--
*அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்று - உம்*
*கொள்கைதான் கொல்லும் உமை!!*

மு. மயூரன்

# படைப்பு...

படைப்பாற்றலே உன் புகலிடம் எங்கே?
நடைப்போடுமே என் பாதச் சுவடுகள் அங்கே...

உந்தன் வரையறை தேடி அலைந்தேன்.
இணையத்தின் கரைவரை ஓடித் தொலைந்தேன்.
கிட்டவில்லை கிட்டியும் எட்டவில்லை.

சிந்தித்தேன்...
வந்துதித்தாய் என் சிந்தையில்
செதுக்கினேன்...
சிற்பியாய் என் சித்தியில்

படிப்பாற்றல் மட்டும் போதுமா படைப்பாற்றலுக்கு?
படிப்பாற்றலோடு புதுப்படைப்புகள்
படைக்க வேண்டும் என்ற
துடிப்பாற்றல் வேண்டும்
படைப்பாற்றலுக்கு.

தனித்தனியாய் சிந்தித்தல் படைப்பாற்றலா?
தனித்துவமாய் சிந்தித்தலே படைப்பாற்றல்.
அறிவுப்பூர்வமாய் சிந்தித்தல் படைப்பாற்றலா?

அறிவுக் கோட்டையின் உள்ளே
அமைதியாய் அமர்ந்து
பூட்டைப் போட்டுக் கொள்வதா
படைப்பாற்றல்?

அறியாமைக் கோட்பாடுகளின்
பூட்டுகளை உடைத்தெறிந்து
ஆர்த்தெழுவதே படைப்பாற்றல்.

கற்பித்தலில் வருவதன்று படைப்பாற்றல்.
கற்றலோடு கற்பனையை வளர்ப்பதில் வருவதே
படைப்பாற்றல்.

கல்வியில் பிறப்பது கற்பனை
கற்பனையில் பிறப்பது படைப்பாற்றல்
படைப்பாற்றலில் பிறப்பது புதுமை.

உலகில் புதுமைகளின்றி
உவகைகள் இல்லை.

இலக்கியத்தில் புதுமை - புதுக்கவிதை
இருட்டில் புதுமை - மின்விளக்கு
வானில் புதுமை - ஆகாய விமானம்
வாழ்வில் புதுமை - அறிவியல் வளர்ச்சி
பட்டினியில் புதுமை - பசுமைப் புரட்சி
பார்ப்பதில் புதுமை - தொலைக்காட்சி
கேட்பதில் புதுமை - வானொலி
தகவல் தொழில்நுட்பத்தில் புதுமை - தொலைபேசி

படைப்பாற்றலில்
புதுப்படைப்பு எதுவாயினும்
புதுமைதான்.
புத்தியைத் தீட்டி
பழமைகள் புரட்டி
புதுமுறைகள் புகுத்தி
மனிதப் பதுமைகள்
படைக்கும் பிரம்மனைப்போலே
புதுமைகள் படைப்போம்...
வெறுமைகள் துடைப்போம்



மாதவி உமாசுதசர்மா



# சிலந்தியும் ஈ-யும்

**வில்ஹெல்ம் லீப்னெஹ்ட்**

**வில்ஹெல்ம் லீப்னெஹ்ட்** *(1826—1900)* ஜெர்மன் சமூக ஜன நாயகக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினருள் ஒருவர். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டத்தின் வெற்றிக்கு மனப்பூர்வமாகப் பாடுபடும் தொழிலாளி வர்க்கத் தலைவர்கள் தமது வாழ்வு மற்றும் பணி மூலம் உதாரணமாக விளங்குவதைப் போன்று அவர் இருந்தார்.

“லீப்னெஹ்ட்டின் பெயர் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்ததாகும்” என்று எழுதினார் லெனின். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் லீப்னெஹ்ட் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சிக்குத் தலைமை தாங்கினார். கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் இவர்களது நண்பராய், சக தோழராய் இருந்தார். தலைசிறந்த பாட்டாளி வர்க்க நிறுவன ஒழுங்கமைப்பாளராகவும் சங்கநாதமென ஒலித்த குரலாகவும் ஜெர்மனியின் எல்லைகளுக்கு அப்பாலும் முற்போக்குத் தொழிலாளர்களின் அன்புக்குப் பாத்திரமாகி அவர்களிடையே செல்வாக்கு பெற்றிருந்தார். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த போராட்டத் தலைவராக இருந்த அவர் ஆற்றல் மிகுந்த பிரசாரகராயும் விளங்கினார்.

சிலந்தியும் ஈயும் ஐரோப்பிய நாடுகளில் அது வெளிவந்த காலத்தில் வெகுவாய் வரவேற்கப்பட்ட பிரசுரமாய்த் திகழ்ந்தது. பாட்டாளிகளிடையே அரசியல் உணர்வை உயர்த்துவதற்கு அருஞ்சேவை புரிந்தது. சுரண்டும் சிலந்திக்கும் சுரண்டப்படும் ஈக்கும் இடையிலே நிலவும் பகை முரண்பாடுகளை லீப்னெஹ்ட் தெளிவான, எளிய நடையில் புலப்படுத்துகிறார். ஒடுக்குமுறைத் தளைகளை முறிக்க வேண்டுமாயின் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு ஒருசேரப் பாடுபடுவது ஒன்றே வழி என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

– பதிப்பாளர், மாஸ்கோ பதிப்பகம்

**நீ**ங்கள் எல்லோரும் அதை நன்கு அறிவீர்கள் – அந்தப் பூச்சி சால் போன்ற வயிறுடையது. முடிகள் மண்டிய பிசுபிசுப்பான உடல் கொண்டது. பகலின் ஒளியிலிருந்து தூர விலகி இருண்ட இடங்களில் பதுங்கியிருக்கிறது. கொலைகார வலையைப் பின்னி வைக்கிறது. கவனக் குறைவான அல்லது சிந்தனையில்லாத, பரிதாபத்துக்குரிய ஈ இந்த வலையிலே அகப்பட்டுக் கொலையுண்டு போகிறது. அருவருப்பான அந்தக் கொடூரப் பூச்சி கண்ணாடி போன்ற உருண்டைக் கண்களுடையது. தன்னிடம் அகப்பட்டுக் கொள்ளும் ஈயைக் கெட்டியாய் பற்றிக் கொண்டு அழுத்தி நெரிப்பதற்கு வசதியாய் கோணமாய் மடங்கிக் குச்சி போலமைந்த நீண்ட முன்கரங்களைக் கொண்டது. அந்தக் கொலைகாரப் பூச்சிதான் சிலந்தி.

அதோ அந்த மூலையில், இரை எப்பொழுது தன் பிடியில் வந்து சிக்குமென்று ஆடாமல் அசையாமல் உணர்ச்சியற்றுக் காத்திருக்கிறது. அல்லது மெல்லிய ஈயைச் சிக்க வைத்துத் தப்ப முடியாதபடிக் கட்டுண்டு

போகச் செய்யும் தனது கொலைகார இழைகளை பேய்த்தனமாய் நெய்து கொண்டிருக்கிறது! வெறுக்கத்தக்க கொடும் பிறவியான அது அளவிலா முயற்சியெடுத்து வேலை செய்கிறது. தன்னிடம் வந்து சிக்கும் இரை தப்புவதற்குச் சிறிதும் வழியின்றி கடைசி இழை வரை யாவற்றையும் செவ்வனே அமைத்துத் தனது வலையைக் குற்றம் குறையற்றதாய் நெய்கிறது. முதலில் ஓர் இழையைப் பின்னியமைக்கிறது. பிறகு இரண்டாவது, மூன்றாவது – இப்படி மேலும் மேலும் அமைத்துச் செல்கிறது. சிக்கும் இரை சாகுமுன் எவ்வளவு தான் துடியாய்த் துடித்தாலுங்கூட வலை பிய்ந்து போகாமல், அதிரவுங்கூட இல்லாமல் கெட்டியாய் இருக்கும் பொருட்டு, இழைகளைக் குறுக்கில் இழுத்துச் சுற்றுகிறது, மறுமுறையும் இழுத்துக் கெட்டியாய்ச் சுற்றுகிறது.

முடிவில் வலை தயாராகிவிடுகிறது, கண்ணி வைக்கப்பட்டு விட்டது, இனி தப்ப வழி ஏதுமில்லை – சிலந்தி இப்பொழுது அதன் உறைவிடத்தில் பதுங்கிக் கொள்கிறது. சூதறியாத ஈ பசியால் உந்தப்பட்டு உணவு தேடிக் கொண்டு எப்பொழுது வருமென்று சிலந்தி காத்திருக்கிறது.

ஈ வந்து சேர சிலந்தி அதிக நேரம் காத்திருக்க நேர்வதில்லை. பாவம், அப்படியும் இப்படியுமாய்ப் பார்த்தவாறு ஈ ஓடி வந்து விரியப் பறந்திருக்கும் இழைகளை அடைந்து துணுக்குற்று நடுங்குகிறது. சிக்குண்டுத் துடிக்கிறது, பெரு முயற்சி செய்கிறது – அவ்வளவுதான், இனி ஒன்றும் செய்வதற்கில்லை.

ஈ அகப்பட்டுக் கொண்டுவிட்டதைக் கண்டதும் சிலந்தி தனது பதுங்கிடத்தை விட்டு மெள்ள முன்னே வருகிறது. பசி வெறி கொண்ட கண்களுடன் குச்சிக் கரங்களை அசைத்துக் கொண்டு தனது இரையை நோக்கி முன்னேறுகிறது. அது அவசரப்படத் தேவையில்லை, தன் வலையில் அகப்பட்டுக் கொள்ளும் அபாக்கியசாலி தப்ப முடியாது என்பது அந்தப் பயங்கர பைசாசத்துக்குத் தெரியும். அது மேலும் மேலும் நெருங்கிச் செல்கிறது, துருத்திக் கொண்டிருக்கும் மங்கலான கண்களால் தனது இரையை ஏறிட்டுப் பார்த்து எடை போடுகிறது, அதைத் தவிக்கச் செய்து திணறடிக்கிறது. ஈ தன்னை நெருங்கி வரும் பயங்கர அபாயத்தைக் கண்டு நடு நடுங்குகிறது, பிசுபிசுப்பான அந்த இழைகளிலிருந்து பிய்த்துக் கொள்ள முயலுகிறது, தப்பிப்பதற்கு அரும்பாடுபடுகிறது. இந்த மூர்க்கமான இறுதி முயற்சிகளில் அது தனது பலத்தை இழந்து விடுகிறது.

ஆனால் அதன் முயற்சிகள் பயனளிக்கவில்லை, அதன் பிரயத்தனங்கள் வீணாகின்றன! வலையில் அது மேலும் மேலும் கடுமையாய்ச் சிக்கிக் கொள்கிறது. இதற்கிடையில் சிலந்தி அதை மேலும் மேலும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. சிலந்திக் கூட்டின் வலைப் பின்னல்கள் மெல்லியனவாய் இருப்பினும் தப்ப வழியின்றி ஈயை இறுகப் பற்றிக் கொண்டுவிட்டன. இவற்றிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக ஈ மேற்கொள்ளும் முயற்சி ஒவ்வொன்றும் மேலும் அதிகமான இழைகளில் அதை மாட்ட வைத்து. மேலும் அதிகமான வலைப் பின்னல்களில் சிக்கச் செய்கிறது. முடிவில், எதிர்க்கும் ஆற்றல் அனைத்தையும் இழந்து ஓய்ந்து போய் மூர்ச்சித்துவிடும் ஈ, அதன் பகைவனின், வெற்றியாளனின் அந்தப் பயங்கரச் சிலந்தியின் காலடியில் கிடக்கிறது!

பிறகு அந்தப் படுபயங்கரப் பிராணி முடிகள் மண்டிய தனது கொடுங்கரங்களை நீட்டி ஈயைப் பிடித்துத் தனது கொலைகார அரவணைப்பிலே கெட்டியாய் அழுத்துகிறது. அடுத்து அது பலமிழந்து போய் நடுங்கும் ஈயின் உடலைக் கடிக்கிறது. ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என்று தனது வெறிக்கும் பசிக்கும் ஏற்ப அத்தனை தரம் விழுந்து பிடுங்குகிறது. அதன் இரத்த வெறி தற்போதைக்கு அடங்கியதும் பாதி உயிர் போன நிலையில் அந்த ஈயை விட்டுவிட்டு விலகுகிறது. பிறகு திரும்பி வந்து மீண்டும் உறிஞ்சுகிறது. இப்படித் திரும்பித் திரும்பி வந்து ஈயின் உடலிலுள்ள இரத்தம் அனைத்தையும், சத்து அனைத்தையும் உறிஞ்சி இழுத்து விழுங்குகிறது. பாவம் அந்த ஈ, எளிதில் அது உயிரை இழப்பதில்லை, குத்துயிரும் கொலையுயிருமாய் நெடு நேரம் திணறுகிறது.

இரத்த வெறி கொண்ட அந்தப் பைசாசம் தனது இரையிடம் இம்மியளவு உயிர்த் துடிப்பு எஞ்சியிருக்கும் வரை அதை விடுவதில்லை. ஈயின் உயிரை உள்ளுக்கு இழுக்கிறது, அதன் பலத்தை உறிஞ்சியிழுக்கிறது, இரத்தத்தைக் குடிக்கிறது. ஈயிடமிருந்து பருக எதுவுமே இல்லாமற் போன பிறகு தான் அதை விடுகிறது.


முற்றும் உறிஞ்சப்பட்டு சாகடிக்கப்பட்ட ஈ மெல்லிறகையும் விட இலேசாகியபின் வலையிலிருந்து தள்ளிவிடப்படுகிறது. சிறிதளவு காற்று வீசியதுமே காற்றோடு காற்றாய் அடித்துச் செல்லப்படுகிறது. யாவும் முடிவுற்று விட்டன.

வயிற்றை நிரப்பிக் கொண்டு திருப்தியோடு சிலந்தி மட்டும் தனது உறைவிடத்துக்குத் திரும்புகிறது. தன்னையும் தனது உலகையும் நினைத்து மன நிறைவு கொள்கிறது. தரமானவர்கள் உலகில் இனியும் நல்லபடியாகவே காலங்கழிக்க முடிகிறதென அகமகிழ்ந்து கொள்கிறது....

***

நகரத்தையும் கிராமத்தையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினர்களே, உறிஞ்சியிழுக்கப்பட்டுக் கொல்லப்படும் இந்த ஈ, விழுங்கப்படும் இந்த ஈ நீங்களேதான்! ஏனையோர் வாழ்வது உங்களுடைய இரத்தத்தைக் குடித்துத்தான்! ஒடுக்கப்பட்ட மக்களே, அறிவுத் துறையினரே, ஆலைத் தொழிலாளர்களே, உங்கள் உரிமைகளுக்காக எதிர்த்து நிற்கத் துணியாதோரான அஞ்சி நடுங்கும் இளம் மகளிர்களே, பலமற்றோராய் இருந்து மிதிபடும் பெண்டிர்களே, யுத்த வேந்தர்களுக்குப் பலியாகும் அப்பாவிகளே! சுருங்கக் கூறின் ஏழைகளும் சுரண்டப்படுவோருமானோரே, உங்களுடைய இரத்த நாளங்களிலிருந்து உறிஞ்ச ஏதும் இல்லாமற் போனதும் உதறியெறியப்படுவோரே!

எல்லாச் செல்வங்களின் உற்பத்தியாளர்களே, தேசத்தின் இதயமும் மூளையும் ஜீவசக்தியுமானோரே, அடி பணிந்து ஓசையின்றி எங்கோ மூலையில் அவலமான முறையில் மடியும் உரிமையன்றி வேறு உரிமை ஏதும் இல்லாதவர்களே! உங்களுடைய இரத்தத்தை, வியர்வையை, உழைப்பை, உங்களுடைய சிந்தனைகளை, உங்களுடைய உயிரைக் கொடுத்து உங்கள் எஜமானர்களாகவும் ஒடுக்குமுறையாளர்களாகவும் இருப்போரை– அருவருக்கத்தக்க சிலந்திகளை – பெரியவர்களாக்குகிறீர்கள், வலியவராக்குகிறீர்கள்.


வில்ஹெல்ம் லீப்னெஹ்ட்

எஜமானன், பணமூட்டை, சுரண்டலாளன், ஊகவாணிபன், முதலாளி, ஆசை காட்டி மோசம் செய்கிறவன், சமயச்சபை மேலவர்கள், எல்லா வகையான புல்லுருவிகள், நம்மை வருத்தும் கொடுங்கோலன், படுமோசமான ஒடுக்குமுறைச் சட்டங்களை இயற்றுகிறவன், நம்மை அடிமைப்படுத்தும் மூர்க்கன் ஆகிய இவர்கள் தான் சிலந்தி. மக்கள் செல்வில் உண்டு வாழும் ஒவ்வொருவனும், நம்மைக் காலால் மிதித்துத் துவைக்கும், நமது துன்ப துயரங்களையும் பயனற்றுப் போகும் நமது முயற்சிகளையும் எள்ளி நகையாடும் ஒவ்வொருவனும்தான் இந்தச் சிலந்தி.

ஏழைத் தொழிலாளிதான் ஈ. வேலை வாங்கும் எஜமானன் பிறப்பிக்க விரும்பும் கொடிய சட்டங்களுக்கு எல்லாம் இந்த ஏழைத் தொழிலாளி அடங்கி நடக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் வாழ வழியற்ற நிலையிலுள்ள அபாக்கியவானான இந்தத் தொழிலாளி தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஜீவனோபாயம் தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது. பெரிய ஆலை முதலாளிதான் சிலந்தி.

தனது தொழிலாளர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நாள் ஒன்றுக்கு 6 லிருந்து 8 மார்க் (1) வீதம் சம்பாதிக்கும் இந்த முதலாளி, அதே போது 12 லிருந்து 14 மணி நேர வேலைக்கு இத்தொழிலாளர்களுக்கு மனம் துணிந்து, இல்லை அருள் கூர்ந்து 2 லிருந்து 3 மார்க் வரையிலான அரைப் பட்டினிக் கூலி தருகிறான்.

சுரங்கத்தின் நச்சுக் காற்றில் தன் உயிரைப் பலி கொடுக்கிறானே, தான் அனுபவிக்கப் போகாத செல்வங்களைத் தரைக்கு அடியிலிருந்து வெட்டியெடுக்கிறானே, அந்தச் சுரங்கத் தொழிலாளிதான் ஈ. திருவாளர் பங்குமுதலாளிதான் சிலந்தி. இந்த ஆளின் பங்குகள் மதிப்பில் இரட்டிப்பாகவும் மும்மடங்காகவும் உயர்ந்து செல்கின்றன.

ஆயினும் இவர் திருப்தியடைவதே இல்லை, மேலும் மேலும் உயர்ந்த லாப விகிதங்கள் வேண்டுமென்கிறார், தொழிலாளர்களுடைய உழைப்பின் பயன்களை அவர்களிடமிருந்து சூறையாடிக் கொண்டு விடுகிறார்.

தொழிலாளர்கள் சொற்ப அளவு கூலி உயர்வு கேட்கத் துணிவார்களாயின் ராணுவத்தை அழைத்துக் கலகக்காரர்களுக்குத் துப்பாக்கிக் குண்டுகளின் சுவையைத் தெரியப்படுத்து கிறார்.

சின்னஞ் சிறு வயதில் அறியாப் பருவத்தில் ஆலையிலும் பட்டறையிலும் பிறகு வீட்டிலும் மாடாய் வேலை செய்து குடும்பச் செலவுக்கு, வரவை இணையாக்க உதவ வேண்டியிருக்கும் சிறு பிள்ளை தான் ஈ. போதாமையால் தம் குழந்தைகளைக் காவு கொடுக்கும்படி பலவந் தம் செய்யப்படும் ஏழைப் பெற்றோர்களல்ல சிலந்தி; இயற்கை உணர்ச்சிகளின் இந்த வக்கரிப்புகளை, தனது சொந்தக் குடும்பம் இப்படி நாசமாவதை மாறாத மூர்க்க விதி யாக்கும் இன்றைய அடாத நிலைமைகளே தான் சிலந்தி.

மக்களுடைய மகளாய்ப் பிறந்த மதிப்புக் குரிய மங்கை நேர்மையாய் வாழ வழி தேடுகிறாள், ஆனால் ஆலை முதலாளி அல்லது டைரக்டரின் காமவெறிக்குப் பணி யாவிடில் வேலை பெற முடியாதவளாய்த் திண்டாடுகிறாள். அவளைக் கெடுக்கும் அந்த ஆள் பிற்பாடு - பல சந்தர்ப்பங்களில் பிள் ளையும் பிறக்கப் போகும் நிலையில் - "மானத்தை காப்பாற்றிக் கொள்வதற்காக" ஈவிரக்கமின்றி மெத்தனமாய் அவளை நடுத் தெருவில் விடவே நிற்கதியாகிறாள் - அவள் தான் ஈ.

தளுக்கு இளைஞன், "உயர் குடும்பத்தில்" பிறந்த வீணன், கூத்தடித்துத் திரிந்து அறியாப் பெண்களைச் சீரழித்துச் சாக்கடையிலே தள்ளுகிறானே, இப்படித் தன்னால் சீரழிக்கப் படும் பெண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தன் மதிப்பும் உயர்வதாய்க் கருதுகிறானே அவன் தான் சிலந்தி.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் உழவர்களே, செல்வந்தர்களான நிலப்பிரபுக் களுக்காக நிலத்தை உழுது நீங்கள் அறுத் தெடுத்துக் கொள்ளப் போகாத பயிரை விதைத்தும், நீங்கள் சுவைக்கப் போகாத கனிகளை வளர்த்தும் வரும் நீங்கள் தான் ஈ. தான் சொகுசாய்ச் சுகபோக ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்காகத் தனது ஏழைச் சாகுபடியாளர்களையும் பண்ணையடிமைகளையும் கூலியாட்களையும் கணப்பொழுதும் ஓய்வின்றி வேலை வாங்கும் அந்த நிலப்பிரபுதான், ஆண்டுக்கு ஆண்டு வாரத்தை(2) உயர்த்தியும் நேர்மையான உழைப்புக்குரிய கூலியைக் குறைத்தும் செல்லும் அந்த நிலப்பிரபுதான் சிலந்தி.

ஏழையும் எளியோருமான நாம் எல் லோரும் தான் ஈ. நீண்ட நெடுங்காலமாய் வழிபாட்டு மேடையின் படிகளில் நின்று நடுங்கியும், சமயக் குருமார்களது சாபச் சொற்களுக்குத் தலைவணங்கியும், சமயச் சபையின் கீர்த்திக்காகவும் உல்லாச விளை யாட்டுக்காகவும் போராடியும் ஒருவரை யொருவர் அடிமை செய்தும் வந்திருக்கும் நாம் தான், அவர்களுடைய சமயப் போத னையின் நலிவுறச் செய்யும் செல்வாக்குக்கு உட்பட்டு ஆன்மீக முடவர்களாகிவிட்டோம். ஆதலால், நமது முதுகு ஒடிய வளைந்தும் மண்டியிட்டும் வந்துள்ள நாம் தான், நமது ஒடுக்குமுறையாளர்களை அவர்களது அநீதி யின் பலன்களை அனுபவிக்கும்படி விட்டு வந்துள்ள நாம் தான் ஈ.

கறுப்பு அங்கி அணிந்து நயவஞ்சகமும் பேராசையும் நிறைந்த பார்வை கொண்டுள்ள அந்த குருமார் தான், இழிநிலையிலே இருத் தும் தனது போதனையின் மூலம் தனது பக்த கோடிகளின் எளிய உள்ளங்களை மயக்கங் கொள்ளச் செய்து பணிந்து ஒடுங்கும் அடிமைப் புத்தியை வளர்த்தும், இதன் மூலம் மக்களது ஆன்மாவை மாசுபடுத்தியும், போலந்தின் விவகாரத்தில்(3) நடைபெற்றது போல் தேசங்களையே பாழ்பட வைத்தும் செல்லும் அந்த சமயக் குருமார் தான் சிலந்தி.

சுருங்கக் கூறினால் ஒடுக்கப்பட்டோரும் அடிமைப்பட்டோரும் சுரண்டப்படுவோரும் தாம் ஈ. கேடுகெட்ட ஊக வாணிபக்காரர் என்றோ, சட்ட முறையற்ற கொடுங்கோலர் என்றோ எப்படி வேண்டுமாயினும் அழைக் கப்படத் தக்கவராயுள்ள அவரேதான் சிலந்தி.

சிலந்தி முன்னொரு காலத்தில் அரண்கள் செய்யப்பட்ட பெரிய கோட்டைகளிலும் நிலப்பிரபுத்துவப் பண்ணைகளிலும் தனது வலையைப் பின்னி வந்தது. இன்று அது பெரிய தொழில் மையங்களில், இக்காலத்துப் புண்ணியவான்களது செல்வமனைகளில் தன்னை இருத்திக் கொள்ள முனைகிறது. பெரும்பாலும் ஆலை நகரங்களில் தான் அதை அதிகமாய்க் காண்கிறோம்.

ஆயினும் கிராமப்புறங்களிலும் சிறு ஊர் களிலும் அது வலை பின்னிக் கொண்டுதான் இருக்கிறது. எங்கே சுரண்டல் தாண்டவமாடு

கிறதோ, எங்கே தொழிலாளியும் சொத்தில்லாத பாட்டாளியும் சிறு கைவினைஞரும் நாட்கூலியாரும் கடன் சுமை தாங்காமல் வருந்தும் சிறுவிவசாயியும் ஊகவாணிபர்களது வரைமுறையற்ற லாப வெறிக்கு ஈவிரக்கமின்றி உட்படுத்தப்படுகிறார்களோ அங்கெல்லாம் அது இருக்கக் காணலாம்.

அது எங்கே இருப்பினும், நகரமாயினும் கிராமமாயினும், அங்கே பேதைகளான ஈக்கள் பகைவரது வலைகளில் சிக்கிக் கொண்டு தப்ப முடியாமல் தவிப்பதைக் காணலாம், துடி துடித்துப் பலமிழந்து ஓய்ந்து உலர்ந்து போய் மடிவதைக் காணலாம்.

பல மில்லாத மெல்லிய ஈக்கும் இரத்த வெறி கொண்ட கொடூரச் சிலந்திக்கும் இடையே எத்தனையோ நூறு ஆண்டுகளாய் நடைபெறும் இந்தப் போரில் புரியப்பட்டுள்ள சொல்லொணாத படுபயங்கரங்களுக்கு அளவே இல்லை! இந்தக் கதை கொடுமையிலும் கொடுமையானது. அதைத் திரும்பவும் சொல்ல வேண்டியதில்லை. நடந்தது நடந்து விட்டது, கடந்த காலம் போகட்டும், நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் பற்றிப் பேசுவோம்.

சிலந்திக்கும் ஈக்கும் இடையே நடைபெறும் இன்றைய போராட்டத்தை நெருங்கிச் சென்று உற்று நோக்குவோம். நிலைமையை உள்ளது உள்ளபடி நாம் உணர்ந்து தொண்டாக வேண்டும். ஈக்களாகிய நாம் நமது பகைவர்கள் நமக்காக மீண்டும் எப்படிப்பட்ட கண்ணிகளை வைத்தமைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கண்டு கொண்டாக வேண்டும். யாவற்றுக்கும் மேலாய் நாம் ஒன்றுபட்டாக வேண்டும்.

நாம் தனித்து நிற்கும் வரை நம்மைக் கட்டியிருத்தி வைக்கும் வலைப் பின்னல்களைப் பிய்த்தெறியப் பலமற்றோராகவே இருப்போம். நமக்கு விலங்குகளிடும் சங்கிலிகளை உடைத்தெறிவோம், நமது பகைவர்களை அவர்களது பதுங்கு இடங்களிலிருந்து விரட்டியடிப்போம், எங்கும் அறிவின் பிரகாச ஒளியைப் பரப்புவோம், பேய்த்தனமான இந்தச் சிலந்தி இனி எந்நாளும் இருண்ட மூலையில் இருந்து தனது கொலைகாரக் கைங்கரியத்தைச் செய்ய வழியில்லாதபடி செய்வோம்!

ஈக்களே, நீங்கள் விரும்பினால், மெய்யாகவே விரும்பினால், யாராலும் உங்களை வெல்ல முடியாதபடி நீங்கள் பெரும் பலம் படைத்தோராகிவிட முடியும்! மெய் தான், இன்றும் சிலந்திகள் பலமுடையதாகவே இருக்கின்றன, ஆனால் எண்ணிக்கையில் அவை மிகமிகச் சொற்பம். ஈக்களான நீங்கள் சின்னஞ் சிறியவர்களாய் இருப்பினும், செல்வாக்கு இல்லாதிருப்பினும், எண்ணிக்கையில் அதிகமாய் இருப்பவர்கள்; வாழ்வே நீங்கள் தான், உலகமே நீங்கள் தான் – மெய்யாகவே நீங்கள் விரும்புவீர்களாயின் எல்லாமே நீங்கள்தான்!

**ஈக்களாகிய நாம் நமது பகைவர்கள் நமக்காக மீண்டும் எப்படிப்பட்ட கண்ணிகளை வைத்தமைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கண்டு கொண்டாக வேண்டும். யாவற்றுக்கும் மேலாய் நாம் ஒன்றுபட்டாக வேண்டும்.**

நீங்கள் ஒன்றுபட்டால், உங்களுடைய இறக்கைகளின் ஒரேயொரு வீச்சாலேயே எல்லா இழைகளையும் அறுத்தெறிந்து விடலாம், இன்று உங்களைக் கெட்டியாய்க் கட்டி, அடக்கி வைத்திருக்கும் சிலந்தி வலைகளை எல்லாம், உங்களைத் திணற வைத்துத் துடிக்கச் செய்து பட்டினியால் சாகடிக்கும் இந்த வலைகளை எல்லாம் அடியோடு துடைத்தெறிந்துவிடலாம், வறுமை யையும் அடிமை வாழ்வையும் நீங்கள் ஒழித்துக் கட்டிவிடலாம். மெய்யாகவே நீங்கள் விரும்புவீர்களாயின் எல்லாம் செய்யலாம்!

ஆகவே விரும்பக் கற்றுக் கொள்ளுங்கள்!

**அடிக்குறிப்புகள்**:

1. மார்க் – ஜெர்மன் மார்க் – ஜெர்மன் நாணய முறை.

2. வாரம் – நிலவாரம் – நிலவுடைமையாளர்கள் மற்றும் நிலப்பிரபுக்களுக்கு விவசாயிகள் கொடுக்க வேண்டிய நில வாடகை, நிலத்துக்கான குத்தகை.

3. ஆஸ்திரிய மற்றும் பிரஷ்யவுக்கு எதி ரான போலந்தின் தேசிய விடுதலை எழுச் சியில் சமயகுருமார்கள் அடிமைச் சிந்தனையை பரப்பி தேசத்தின் ஆன்மாவை சீரழித்தனர்.

நன்றி : வினவு தளம்

*'முட்டை அவிச்சுக் கண்ணிலை கட்டினால் இரண்டு நாளையிலை நோவை இழுத்துப் போடும். அதோடை எல்லாம் சரியாப்போம்' எண்டுதுகள். நாங்கள் சைவம். முட்டை மச்சம். அது செய்யேலாது. சிலர் தாய்ப்பாலைக் கண்ணுக்குள்ளை முண்டு நேரம் விட்டால் சரி எண்டினம். நான் தாய்ப்பால் தேடிப்போனால் ஊரிலை அந்த நேரம் எங்கடை செல்லன்ரை பெட்டை தான் பிள்ளைப் பெத்திருந்திது. நான் பலதையும் பத்தையும் யோசிச்சுக் கொண்டு அப்பாச்சியிட்டைக் கேட்டால் அவா, விடமாட்டன் எண்டிட்டா.*



# பற்று

செம்மனச்செல்வி

என்ன சோக்கான இடம். பத்து தர பத்து சதுர அடி அறை. ஒரு பக்கம் ஆறு தர ஆறு யன்னல். எட்டு அடி உயரக் கதவு. கண்ணுக்கு இதமான மாம்பழ மஞ்சள் நிற தடிச்ச கேட்டின் துணிக்கு மேலை நல்ல சீமப்பால் கடும்பு நிற லேஸ் கேட்டின் தொங்குது. யன்னலின்ரை ஒரு கரையிலை ஒரு சின்ன மேசையும் கதிரையும் மேசையிலை படிக்கப் படிக்கத் திகட்டாத ஒரு திவ்வியமான புத்தகமும் யன்னலின்ரை மற்றப் பக்கத்தில சில காயிதங்களும் பேனையும். நான் கும்பிடிற றோசும் வெள்ளையும் சேர்ந்த கடவுள் சிலையும் நிலவாய் ஒளிருற விளக்கும் பூக்களும். மற்றப்பக்கம் என்ரை உடுப்பலுமாரியள் எண்டு பலதும். நிலத்துக்கு காப்பற் விரிப்பு.

இதுதான் நான் இருக்கிற, உண்மையாய் ஒரு புருசன் பெண்சாதியும் இரண்டு சின்னப் பிள்ளையளும் வடிவாய் இருக்கக் கூடிய பெரிய அறை. இப்பிடி ஒரு வடிவான அறையை என்ரை அப்பா, அம்மா கனவிலையும் கண்டிருக்காயினை. ஏன் முந்தி நானும் கண்டனானே.

அறை நடுவிலை ஒரு கிங் சைஸ் கட்டில். அதின்ரை மெத்தை எண்டால் சொல்லி வேலையில்லை. அவ்வளவு குசன். சும்மா ஆளிருந்தால் துள்ளும். படுத்தால் உள்ளுக்கை புதைஞ்சுபோற சொகுசு மெத்தை.

எனக்குப் படுத்தால் நித்திரை வருகுதில்லை. ஒரே யோசினை. ஒரே யோசினை. நித்திரை வராட்டிலும் வெளியிலை நான் போயிருந்து மற்றவையோடை சேர்ந்து கதைக்கிறதோ ரீ வி பாக்கிறதோ எண்டு பொழுதைக் கழிக்கன். அவமாய், நெஞ்சிலை பாரம் கூடக் கூட நான் என்ரை அறேக்கை வைச்சிருக்கிற புத்தகத்தை வாசிக்கிற பக்கங்கள்தான் கூடும்.

நேரம் போகிறதுக்கு ஏதேன் வேலை தன்னும் செய்வமெண்டால் நான் தனி ஓராளுக்கு என்ன பெரிய வேலை. ஒருக்காச் சமைச்சதை மூன்று நேரமும் இரண்டு நாளைக்கு வைச்சுச் சாப்பிடுவன். கூட்டித் துடைச்சு கழுவி வைச்சது வைச்சபடி எல்லாச் சாமானுகளும் அந்தந்தப்படி கிடக்கும். நான் ஆடம்பரமாய் உடுத்திறதுமில்லை. உடுத்திற உடுப்புகள் ஊத்தையும் அவ்வளவாகாது. எனக்குச் செலவும் பெரிசாயில்லை. பேந்து ஆருக்கு அதிகம் உழைக்க வேணும்.

வேலை நேரம் எட்டு மணித்தியாலம் போக என்ரை வீட்டுவேலைக்கு இரண்டு மணித்தியாலம் போக பொழுதுபடுமட்டும் தொண்டுதான் நான் செய்யிறது. ராவிலை கட்டில்லை நித்திரை வராமல் புரண்டு புரண்டு என்ரை பழசு பந்துகளை சும்மா யோசிச்சுக் கொண்டு கிடப்பன். எத்தினை நாளைக்கு இந்தத் தனிமை வாழ்க்கை. எண்டைக் கெண்டாலும் ஒருநாள் இந்த நரக வாழ்க்கை மாறும். கடவுள் வேதனையைக் குடுத்து

என்னைச் சோதிச்சு என்ரை மனத்தைப் புடம் போடுறார்' எண்டுதான் நான் மனம் தள்ளாடுற நேரமெல்லாம் என்னை ஆத்துறது. வியாழன் இரவு வந்தால் சந்தோசம். வெள்ளி இரவு என்ரை பிள்ளையள் என்ரை வீட்டை வருவினம். பிறகு அவை ஞாயிறு பின்னேரம் போனால் திங்கள், செவ்வாய் வரையும் அவை வந்திட்டுப் போனது வரை நடந்ததுகளை மீட்டி மீட்டிக் கொண்டிருப்பன். பிறகு செவ்வாய் பழைய படி என்னைத் தனிமை தொற்றியிடும். பிறகு பழையபடி வெள்ளியை எதிர்பார்த்துக் கொண்டு... இப்பிடியே என்ரை துயர நாடகமும் புத்தகமும் கடவுள் துணையும் தான் என்ரை வாழ்க்கை.

முந்தி ஊரிலை பிள்ளையள் இரண்டு பேரும் முத்தத்திலை விளையாடிக் கொண்டிருப்பினம். நான் அவையை இடையிடை கூப்பிட்டுச் செக் பண்ணிக்கொண்டு என்ரை வீட்டலுவல்களிலை கவனமாயிருப்பன். மூத்தவள் சாடையாய் என்னைப் போலை. ரண்டாவது பெட்டை உரிச்சுக் கழட்டி அசல் அவரே தான். அவளைப் பாக்கப் பாக்க ஆசை ஆசையாய் இருக்கும். எனக்கு என்ரை அவரிலை சரியான விருப்பம். ஆனால் அவரை இப்பவும் நேரை அவ்வளவாய்ப் பாக்கமாட்டன். வெக்கம். அவர் சொந்த மச்சான்தான். அவர் நான் சாமத்தியப்பட்டநேரம் எங்கடை வீட்டை வரேக்கை அவரை என்னோடை சேர்த்துக் கலியாணம் பேசி நெளிச்சதாலை எனக்கு பன்ரண்டு வயசிலையிருந்தே அவரோடை ஒரு வெக்கம். மரியாதை.

என்ரை கலியாணதுக்கு முதலே அவர் சவுதி போய் ரண்டு மூண்டு தரம் உழைச்சுக் கொண்டு வரேக்கை எல்லாம் எனக்கும் துணிமணியள் எல்லாம் தன்ரை தாயிட்டை குடுத்தனுப்புவார். நான் ஏ. எல் சோதினை எடுத்த பிறகு கலியாணம் என்னைக் கட்டினார். அவர் அந்த மாதிரி வடிவு. நானும் வடிவு தான். என்னை மாம்பழம் எண்டுதான் கூப்பிடுறது. என்ரை நிறம் மஞ்சள் கலந்த வெள்ளை. ஊரிலை எல்லாரும் எங்களை நல்ல சோடிப் பொருத்தம் எண்டு சொல்லுவினம்.

நான் கலியாணம் கட்டின பிறகு எங்களுக்குச் சீதனமாய்த் தந்த வளவுக்கை கிடந்த கொட்டில் வீட்டுக்கை போய் வாழ்க்கை நடத்தினம். இந்த வளவு என்ரை அப்பாச்சியின்ரை வளவு. அதை அவ தன்ரை மற்றப் பிள்ளையள் காசுக் கெண்டாலும் தங்களுக்குத் தரச்சொல்லிக் கனமுறை கேட்டும் அவை ஒருத்தருக்கும் குடுக்காமல் என்ரை அப்பருக்குத்தான் மனம் விரும்பி நன்கொடையாக் குடுத்தவ. காரணம் அது ஒரு குற்றம் பொறுக்காத காணி. அதுக்குள்ளை ஒரு வைரவர் கோயில் இருக்குது. அதைச் சுத்தி வேப்பமரங்கள் ஏழெட்டு நிக்குது. புளி, ஐஞ்சாறு தென்னை, பனை, இலுப்பை, மா எண்டு வளவு முழுக்கச் சோலை தான். ஆரும் மச்சம் தின்னுறவை மச்சம் மாமிசம் திண்டிட்டு குளிக்காமல் அந்த வளவுக்குள்ளை வந்தாலே கிணத்துக்கை காகமோ, அணிலோ தவக்கையோ செத்து மிதக்கும் எண்டு அப்பாச்சி குளறிக் குளறி அடுத்த நாள் மெசின் பிடிச்சு கிணத்தை இறைப்பிப்பா.

அதாலை அவ ஆகாரத்திலை வலு கவனம். வளவுக்குள்ளை ஒருத்தரையும் லேசிலை கால் வைக்கவிடா. நல்லநாள் பெரிய நாளிலைதான் அப்பாச்சி தன்ரை வளவுக்கை வாறவையை வடிவா வரவேற்பா. இல்லாட்டில் படலையடியிலை ஆற்றையும் தலை தெரிஞ்சாலே உடனை, 'தாருது தாருது நில்லங்கை நில்லங்கை நான் பங்கை வாறன். நில்லுதிலை' எண்டு நாய் மாதிரிக் கத்திக் கொண்டு போவா. சனம் அவவின்ரை சத்தத்திலையே பயந்துபோய் தகரப் படலையடியிலையே நிண்டு போடுங்கள்.

காரணம் இந்த எங்கடை அப்பாச்சியின்ரை புருஷன். அதுதான் எங்கடை அப்பப்பா இளசாயிருக்கேக்கை ஒருநாள் அந்த ஊர்ச் சாமி கோயில் வேட்டைத் திருவிழாக்கு றோட்டாலை வீதியுலா வரேக்கை தன்ரை றோட்டுப் படலையடியிலை தான் வரமுதல் தன்ரை வாசல்லை கொஞ்சநேரம் சாமி நிக்காமல் புறப்பட்டிட்டுதெண்டு தன்ரை வளவான் அடுத்த கேற்றுக்காலை போய் சாமி மற்ற றோட்டாலை வரேக்கை வெறியிலை சாமியின்ரை சிலையைத் தொங்கி இழுத்து வாளாலை வெட்டிச் சிலையை விழுத்தினதோ என்னவோ எண்டு ஏதோ பாரதூரமாய் நடந்ததாம். அதுக்குப் பிறகு அடுத்த நாள் வீட்டை விட்டு வெளிக்கிட்டவர்தானாம். போனவர் போனது தான். ஒரே போக்கு. இன்ன இடம் ஏது இடம் எண்டு ஒருத்தருக்கும் ஒண்டும் தெரியாதாம். அதுக்குப் பிறகு அப்பாச்சிதான் தனிய

தன்ரை ஐஞ்சு பிள்ளையளையும் அப்பம் சுட்டு வித்து வளத்து ஆளாக்கினது.

அதாலை அதுக்குப் பிறகு அவாக்கு தெய்வக் குற்றத்துக்குச் சரியான பயம். தன்ரை பிள்ளையளுக்கும் அந்தத் தீட்டு வந்திடக் கூடாதேயெண்டுதான் அவ தன்ரை மற்றப் பிள்ளையள் எல்லாம் காசுக்குத் தன்னும் தங்களுக்குத் தரச் சொன்ன காணியை அவைக்குக் குடுக்காமல் கடைசிவரை மச்சம் தின்னாத தன்ரை பிள்ளை சைவத்துக்குக் குடுத்தது.

சைவமும் தன்ரை அந்தக் காணியை தன்ரை மற்றப் பிள்ளையளுக்குச் சீதனமாய்க் குடாமல் சொந்த மச்சானைக் கலியாணம் கட்டின தன்ரை இளசுக்குக் குடுத்தது. இனசனம் எண்டதாலை எங்கடை விருப்பு வெறுப்புகளை சின்னனிலையிருந்தே தெரிஞ்சு வச்சிருக்கிறதாலை சொந்தபந்தங்களை அனுசரிச்சுப் போகுங்கள் எண்டு.

என்ரை அவரும் அப்பிடித்தான். நல்ல மாதிரி. விடிய நாலு மணிக்கு எழும்பி வளவு முழுக்கக் கூட்டி அள்ளி கோயில் கழுவி கோயில் பித்தளைச் சாமான்களை பளபளக்க புளிபோட்டு மினுக்கி தோஞ்சு குளிச்சுப் பூ ஆஞ்சு மாலை கட்டிப் போட்டு என்னையும் பிள்ளையுளையும் பூசைக்குக் கூப்பிடுவார். சரியாய் அஞ்சு அம்பத்தைஞ்சுக்கு .

நானும் விடிய நாலு மணிக்கு அவரோடையே எழும்பி அடுப்படிச் சாம்பல் அள்ளி அடுப்பு புகடு மெழுகி வீடு வாசலுகள் கூட்டி அள்ளி வீட்டுக்கு மஞ்சள் தண்ணி தெளிச்சு முத்தத்துக்கு சாணி கரைச்சுத் தெளிச்சு சட்டியள் பானையள் மினுக்கி உடுப்புகள் தோச்சு குளிச்சு விடுவன். பிள்ளையளும் இந்த நேரமே எழும்பி கால் முகத்தைக் கழுவிப் போட்டு திருநீத்தைப் பூசிக் கொண்டு இருந்து படிச்சுப் போட்டு அவையும் குளிச்சு ஆறு மணிப் பூசைக்கு றெடியாவிடுவினம். அப்பாச்சியும் தானே சுடுதண்ணி வைச் செரிச்சுத் தோஞ்சு தீட்சை வைச்சு றெடியா விடுவா. பூசைக்கு நாங்கள் ஐஞ்சு பேரும் தான். வேறை ஆக்களை அப்பாச்சி வளவுக்கு நுளைய விடா சுத்த பத்தம் பாத்து.

எனக்குத் துடக்கு நாளேல்லை அஞ்சு நாளைக்கு நான் என்ரை அம்மா வீட்டிலை தான் இருப்பு. அந்த அஞ்சு நாளும் என்ரை அவர் தான் ஒரு சிணுங்கல்படாமல் கோயில் வேலையோடை வீட்டு வேலை, சமையல், தன்ரை தொழில் எண்டு என்னவோ தன்னாலை ஆனதைச் செய்யிறது.

இப்பிடி இருந்து வரேக்கை நாட்டிலை சண்டை தொடங்கியிட்டுது. சமாதானத்துக்கு வந்தவன் சண்டை துடங்க வீட்டிலை ஆம்பிளையளை வைச்சிருக்கிறது பயமாப் போக பாதுகாப்பில்லாததாலை என்ரை அவரும் மற்றவையைப்போலை வெளிநாடு போக வேண்டி வந்திட்டுது. அப்ப வெளிநாட்டுப் பாதையள் கொஞ்சம் ஓட்டம் கூடவாயிருந்து அவர் ஜேர்மன் போன பிறகு பூசையை நான் தான் செய்யிறது. அப்ப எனக்கு அவற்றை கோயில் வேலையளும் என்ரை வீட்டு வேலையளுமாய் வேலை கூடத்தான். ஆனால் அதிலை ஒரு ஆத்ம திருப்தி.

இவர் ஜேர்மன் போன பிறகு என்ரை துடக்கு நாளேலை என்ரை அப்பர் தனக் கேலாட்டாலும், நான் அம்மா வீட்டை போக அவர் வந்து கோயில் அப்பாச்சி, என்ரை பிள்ளையள், சமையல் எல்லாத்தையும் பாக்கிறது.

ஆனால் இவர் ஜேர்மன் போன பிறகு கோயில் அலுவல்கள், வீட்டலுவல்கள் எல்லாம் என்ரை பொறுப்பிலை வந்ததிலை சின்னாக்களை கவனிக்கிறதுதான் கொஞ்சம் குறைவாப் போச்சு.

நாங்கள் சின்னாக்களை பக்கத்து வீடுகளுக்கெல்லாம் போக விடுகிறேல்லை துடக்குக் காத்து.

அதாலை அவை ரண்டுபேரும் தான் வளவுக்கை கெந்தித் தொட்டோ, ஒளிச்சுப் பிடிச்சோ, கொக்கான் வெட்டியோ, சிப்பிக் கோடோ எண்டு வளவுக்கை என்னண்டாலும் விளையாடுவினம். வளவுக்கை ஒரு குறுணிக் கல்லுக்கூட அவைக்குக் குத்தாது. மணல் வார்ந்தோடிப்போய்க் கிடக்கும்.

தகப்பன் இருந்தால் அவர் அவையோடை கிட்டி புள் விளையாடுவார். நவீன கிறிக்கற். தகப்பன் வெளிநாடு போனாப்பிறகு பிள்ளையள் ரண்டும் கிட்டிபுள்தான். புள்ளு கண்ணுகள் மூக்குகளிலை பட்டிடும் எண்டு நான் விளையாட வேண்டாம் எண்டு மறிச்சாலும் தகப்பன்ரை நினைவாலையோ என்னவோ அதைத்தான் நெடுக விளையாடு

வினம். நானும் அதாலை கண்டும் காணாமல் விட்டிடுர்றது.

ஒரு நாள் இப்பிடி இரண்டு பேரும் கிட்டிபுள் விளையாடேக்கை சின்னன்ரை கண்ணிலை நான் பயந்தாப்போலை புள் பட்டிட்டுது. கண் சிவந்து போச்சுது. ஆஸ்பத்திரியளுக்கு போறதுக்கும் பயம். இந்தியன் ஆமியின்ரை அட்டகாசம். பொம்பிளையள் எண்டும் பாக்காங்கள். உடம்புகளைத் தொட்டுச் செக் பண்ணுவாங்கள். எனக்கும் கோயில் அலுவல்கள் வீட்டலுவல்கள் எண்டு வேலையளும். அறிஞ்ச சனம் ‘முட்டை அவிச்சுக் கண்ணிலை கட்டினால் இரண்டு நாளையிலை நோவை இழுத்துப் போடும். அதோடை எல்லாம் சரியாப்போம்’ எண்டுதுகள். நாங்கள் சைவம். முட்டை மச்சம். அது செய்யேலாது. சிலர் தாய்ப்பாலைக் கண்ணுக்குள்ளை மூண்டு நேரம் விட்டால் சரி எண்டினம். நான் தாய்ப்பால் தேடிப்போனால் ஊரிலை அந்த நேரம் எங்கடை செல்லன்ரை பெட்டை தான் பிள்ளைப் பெத்திருந்துது. நான் பலதையும் பத்தையும் யோசிச்சுக் கொண்டு அப்பாச்சியிட்டைக் கேட்டால் அவா, விடமாட்டன் எண்டிட்டா.

குழந்தைக்கு ஒரு வைத்தியமும் செய்யாமலே சுடு சோத்தை வெள்ளைத் துணியிலை பொட்டலம் கட்டி ஒத்தணம் குடுக்கிறன். மூண்டுநாள் போயிட்டுது. பிள்ளைக்கு வலி. பிள்ளை அழுகுது. கண் நல்லா வீங்கி மூடிப் போட்டுது. திறக்கேலாமல், ஆத்தாமல் வலி கூடிக்கொண்டுபோக தாங்கேலாமல் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு என்ரை அப்பரையும் கூட்டிக்கொண்டு போனால், டொக்ரேர்ஸ் ஏன் உடனையே குழந்தையை கொண்டரேல்லை எண்டு எங்களை ஏசிப்போட்டு குழந்தையை உடனேயே வாட்டிலை மறிச்சுப் போட்டினம்.

நான் குழந்தைக்கு வாட்டுக்குத் தேவையான சாமான் ஒண்டும் கொண்டு போகேல்லை. என்ரை அப்பரை வாட்டிலை பிள்ளையோடை விட்டிட்டு, ‘இந்தா உடனை ஒடி வாறன் அம்மப்பாவோட இருங்கோ’ எண்டு குழந்தையைச் சமாதானப்படுத்திப் போட்டு வீட்டை போற பஸ்சைப் பிடிச்சு அவசர அவசரமாய்ப் போய் மெயின் றோட்டிலை இறங்கி அங்காலை உள்ள ஒரு மைல் தூரத்தை ஓட்டமும் நடையுமாய் போகேக்க எங்கடை செல்லன்ரை ஆக்களின்ரை ஒரு பெட்டை கேட்டாள். ‘எங்கையும் ஓட்டமும் நடையுமாய் ஏதன் அவசரமே. பின்னாலை கரியலிலை ஏறுமன். வீட்டிலை படக்கெண்டு கொண்டே விடுறன்’ எண்டு கேட்கவும் ஆபத்துக்குத் தாய்ப்பாலே நாங்கள் வேண்டி கண்ணிலை விடாததை நான் நினைச்சுப் போட்டு அவளின்ரை கதையைப் பறுவா பண்ணாமல் வீட்டை போனால், அப்பாச்சி ஆஸ்பத்திரித் துடக்குக்குப் படலைக்கை மூண்டு வாளி தண்ணி அள்ளியந்து படலேக்கை வைச்சு தோயவாத்து வளவுக்கை விட்டா. பிறகு நாலைஞ்சு வாளி கிணத்திலை தண்ணியை விறுவிறெண்டு அள்ளி உடம்பை முழுசாய் நனைஞ்சு தோஞ்சுபோட்டு வீட்டுக்கை போய் தேவையான சாமான்களை எடுத்துக் கொண்டு கேவியூக்கு முதல் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேந்து அப்பரை வீட்டை அனுப்பினது கண்ணுக்கை நிக்குது.

அதுக்குப் பிறகு என்ரை அப்பர்தான் என்ரை வீட்டிலை போய் இருந்தவர். வளவுக்கை கோயில் கடமையிருக்குதே. தெய்வ காரியம் தடங்கப்படாது.

ஆனால் வைத்தியம் தொடர்ந்தும் ரண்டு கிழமையிலை என்ரை பிள்ளையின்ரை கண் படிப்படியாய் நோ குறைஞ்சாலும் ஒரு கண்ணிலை சாடையாய் பார்வையிலாமல் குறைஞ்சு போச்சு. ஐயோ நான் செய்த பிழையென்ன. என்ரை கடவுளே உனக்கொரு பாவம் பழியும் நான் செய்யேல்லையே. என்ரை செல்வத்துக்கேன் இந்தக் குறையை விட்டாய் எண்டு அழுது உள்ள கோயிலெல்லாம் திரிஞ்சன். வெத்திலைச் சாத்திரி, பொங்கல், படையல், மடை, எள்ளெண்ணைச் சட்டி எரியல், காகத்துக்குப் பிண்டம், நூல் கட்டல், கந்த சட்டி, காவடி, பால்குடம் அது இது எல்லாம் எடுத்தன். என்ரை மனிசன் பறவைக் காவடி எடுக்கிறதாயும் நேந்தன். ஒரு நேரச் சோறு, மண் சோறெண்டு எத்தினையோ நேத்தி வைச்சும் நான் தோத்துப் போனன். காத்திலை பறக்கிற நூலாய் ஓடி ஓடி எல்லா ஆஸ்பத்திரியளுக்கும் கல்லு வைச்ச எங்கட எல்லாக் கோயில்களுக்குமாய் அலைஞ்சன்.

அந்த நேரங்களிலை எங்கடை றோட்டாலை ஒரு குறிப்பிட்ட நேரம் ஒவ்வொருநாளும் சாம்பல் கலர் சீலை உடுத்துக் கொண்டு ஒரு பத்துப் பன்னிரண்டு பெண்டுகளிருக்கும் கையிலை ஒரு புத்தகமும் மணிமாலையும் கொண்டு போறதை நான் பாத்

தன். ஆனால் கனநாளுக்குப் பிறகு தான் அவையை நான் 'உதாராக்கள் உதாலை எங்காலை உவை போயினம்' எண்டு என்ரை பக்கத்து வீட்டு அக்காவை நான் கேக்க அவா, 'உதுகளோ அதுகள்தான் உந்த வேதக்கார ஆக்கள். அவை எங்களை மதம் மாத்தத் திரியினம். கஷ்டப்பட்ட ஆக்களுக்கு கடைசி யிலை தங்கடை கடவுள்தான் அனுக்கிரகம் புரிவாராம். சாத்தான்களைக் கும்பிடுறவை தானாம் விக்கிரக வழிபாடு செய்யிறவை. அது இது எண்டு எங்கடை கடவுளுகளை சமயத் தைப் பற்றி குறைச்சலாய்ப் பேசுறாளவை. அதாலை நாங்களொருத்தரும் உவளவையை மதிக்கிறேல்லை.'

"சிலநாள்ளை நாங்கள் உந்தக் கிறகங்கள் றோட்டாலை போகேக்கை ஒளிச்சு நிண்டு கூக்காட்டிறதும் உந்தச் சவங்கள் எங்கடை ஊருக்கு அங்காலை இருக்கிற அந்தாக்க ளின்ரை திக்குக்குத்தான் போறாளவை. உந்த நாயளை எங்கடை ஊருக்காலை போக விடப் படாது. ஆனால் றோட்டு அரசாங்கத்தின்ரை யெல்லே. நாங்கள் ஒண்டும் செய்யேல்லாது பார்' எண்டா.

பிள்ளேன்ரை ஒரு கண் பார்வை அரை வாசி மங்கிப் போச்சுது. பிள்ளை உலாவக் கொஞ்சம் தட்டுமுட்டுப் படுகுது. அதைப் பாக்க என்ரை நெஞ்சுக்கை ரத்தம் சொட்டுது.

இரவிரவாய் எனக்கு நித்திரையில்லை. ரண்டுமாதம் முடிஞ்சுது. ஒருநாள் சாம்பல் சீலைக் கூட்டத்தை நான் றோட்டிலை கண் டன். அவையை நான் சாடையா நோட்டம் விட அவேன்ரை கதேக்கை காதை விட்டன்.

நானும் இவை என்ன சொல்லினம் எண்டு கேட்டுப் பாப்பம் எண்டு. அவை எனக்குப் பேச்சுக் குடுக்கினம். தங்கடை சமயக் கொள்கையளைச் சொல்லி தங்கடை ஆண் டவர் நடக்கமுடியாத முடவனை நடக்கப் பண்ணின அற்புதத்தையும் தொழுநோயா ளியை சுகப்படுத்தியதையும் எண்டு கனக்க உதாரணங்களையும் சொல்லி தங்கடை மதத்தை விசுவாசிக்கச் சொல்லிச்சினம். என்ரை கஷ்டம் இதுதான். என்ரை பிள்ளை யின்ரை கண் வருத்தம் மாறும் எண்டும் தாங்களும் என்ரை பிள்ளைக்காக ஜெபிக்கிற தாயும் சொல்லிச்சினம்.

'கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப் படும் தேடுங்கள் கிடைக்கு'மென்றார்.

இது எனக்கு சின்னனிலையும் நெடுகலும் கேட்ட பாட்டு. அந்த அடி திரும்பத் திரும்ப என்ரை மனசுக்குள்ளை அண்டைக்கு முழுக்க உருளுது.

எனக்கு ஒரே யோசினை. என்ரை கடவு ளுகளிலை எல்லாம் கேட்டுக் கேட்டுக் கொண்டு வந்தாலும் இதுகும் எனக்கொரு புது பற்றுக்கோடோ.

கோயில் வேலையளை முடிச்ச கை யோடை எதுக்கும் போய்ப் பாப்பம் எண்டிட்டு அடுத்தநாள் விடிய சேச்சுக்கு போறன் என்ரை பிள்ளையையும் கொண்டு ஆளளவு மெழுகுதிரி கொழுத்த.

அங்கை நான் போனநேரம் அண்டைய தொழுகை நடந்துகொண்டிருக்குது. அந்த பிாதரின்ரை அன்பான பிரசங்கம் என்னை ஆசுவாசப்படுத்துகிது. அந்த மதத்திலை ஒரு நல்ல பற்று வருகுது. அந்த மதம் பற்றி அதாலை ஒரே தேடல். நான் அவையின்ரை பைபிள் எல்லாம் வாங்கியந்து அண்டைக்கு ஒரே படிப்பு. பிறகு என்ரை வீட்டை என்னை சேச்சுக்குப் போக வழிசொன்ன பொம்பி ளையள் வந்ததோடை என்ரை அப்பாச்சி யின்ரை எதிர்ப்பு வீட்டிலை வந்திட்டுது. தன்ரை வளவுக்காலை வெளிகிட்டி எண்டா. நான் அங்கை இருக்க முடியாத நிலை வந் திது. நான் புதுசாய் வரிச்ச மதமும் எனி மேலும் நான் அந்த சாத்தான்களை கும் பிடுகிற ஆக்கள் இருக்கிற இடத்திலை அதுக ளோடை கூட வசிக்கிறது பாவம் எண்டு சொல்ல, அப்பாச்சி வீட்டை விட்டிட்டு என்ரை அம்மான்ரை வீட்டை போனன்.

அங்கையும் ஒருத்தரும் என்னோடை என்ரை மதப் பற்றோடை ஒத்துழைக்கேல்லை. உன்ரை கொப்பப்பர் செய்த பாவம் காணா தெண்டே நீ இப்ப இந்த வேதம் விட்டு அந்த வேதத்திலை போய்ச் சேந்திருக்கிறாய். உப்பிடி எண்டால் நீ எங்கடை வீட்டிலையும் இருக் கப்படாதென்ன என்ரை அவற்றை தாய் வீட்டை தேடிப் போறன். என்ரை பிள் ளையளோடை. என்ரை மாமி என்னையும் பிள்ளையளையும் கூப்பிட்டு அன்பாய் வைச்சிருந்தா.

ஆனால், என்ரை புது மதத் தொடுப்புப் பற்றி என்ரை அவருக்கு கடிதம் எழுதிப் போட்டிட்டா. அவர், 'என்ரை செல்லம் எங் கடை குலத்துக்கு நீயும் பாவம் பழி தேடிப் போடாதை. உன்னை நான் விரும்பினதே

உன்ரை பூசை புனஸ்காரங்களைப் பாத்துத் தான். ஆற்றை கண்ணூறோ பட்டிட்டுது. எல்லாத்துக்கும் சேர்த்து ஒரு ஐயரைப் பிடிச்சுச் சாந்தி செய்து போட்டு கொழும் புக்கு வா. நான் உன்னை இஞ்சை(வெளிநாடு) கூப்பிடுகிறன். இஞ்சை எல்லா வருத்தத்துக்கும் மருந்து செய்யலாம். இல்லாத வசதியில்லை இந்த நாட்டிலை. நீ வாவன். பிள்ளையின்ரை வருத்தத்தையும் மாத்தி நாங்கள் இந்த சொர்க் கபுரியை அனுபவிப்பம். உண்மையாய்த்தான் இஞ்சை ஒவ்வொரு இடங்களையும் பாக் கேக்கை 'ஐயோ நீ இல்லையே என்னோடை சேர்ந்து இதை ரசிக்க' எண்டு நினைப்பன். அந்த நேரம் நான் உன்னை இஞ்சை வரக் கேட்டதுக்கு நீ வந்தால் கோயிலை ஆர் பாக் கிறதெண்டு நீ கேட்க, நானும் அதுகும் சரிதான் எண்டுபோட்டு நாட்டிலை சண்டை முடியுமட்டும் தானே நான் இஞ்சை இருக் கிறது எண்டிட்டு பேசாமல் இருந்திட்டன்.

சரி எனி நீ வா என்னட்டை. நானும் நீயும் எனி இஞ்சை சேர்ந்திருக்கிறதுதான் தெய்வ சித்தம் போலை. நாட்டிலை சண்டையும் வரவர கூடிக்கொண்டுதானே போகுது. எதற்கு மாய் நீ உடனை கொழும்புக்கு வந்துவிடு. எல்லாம் 'சுகம் வரும். வைரவர் துணை' எண்டு கடிதம் எழுதியிருந்தார்.

நான் இதை என்ரை புது மதக்காரரிட் டைச் சொல்ல, அவை 'ஓம் அது நல்லதுதான். நீங்கள் அங்கை போனால் வைத்தியம் எல் லாத்துக்கும் வசதி. ஆனால் அதோடை உங்கடை குடும்பம் முழுத்தையும் எங்கடை தேவனுக்கு விசுவாசியள் ஆக்கிப் போட வேணும்' எண்டு ஒரு வேண்டுதலையும் விட் டினம். எனக்கொரு விசேச பிரார்த்தனையும் நடத்தி அங்கையுள்ள அவையின்ரை மதத் தோடை தொடர்புடைய ஆக்களின்ரை விலா சம், ரெலிபோன் நம்பர்களையும் தந்து ஆசீர் வதிச்சு விட்டினம்.

பிறகு நான் உடனை என்ரை பிள்ளைய ளையும் கொண்டு என்ரை ஒரு ஒண்டு விட்ட சகோதரத்தோடை கொழும்புக்கு வந்து—அப் பர் என்னோடை எனி வரார். அவர்தான் இப்ப அப்பாச்சியின்ரை கோயில் பராமரிப்பு.— ஏஜென்சியாலை என்ரை அவர் இருக்கிற ஊருக்குப் போயிட்டன்.

அவற்ரை ஜேர்ம னிக்கு நான் போகேக்கை அந்த என்ரை ஒண்டுவிட்ட சகோதரம் 'சரி உனக்குப் பிடிச்ச சனியெல்லாம் இத்தோடை துலைஞ்சுது. எனிப்போய் மனிசனோடை சந்தோசமாய் இரு' எண்டு சொல்லி வழி அனுப்பி வைச்சது இப்பயும் காதுக்கை கேக்குது.

அங்கை நான் போனதும் எயாப் போட் டிலை என்ரை அவர் என்னைக் கண்டதும் கண்கலங்கினபடி கட்டிப் பிடுச்சுக் கொஞ்சி அழுது கொண்டு பிள்ளையள் ரண்டையும் தன்ரை ரண்டு கையிலையும் தூக்கிக்கொண்டு எங்களைக் கூட்டிக்கொண்டு போனார்.

அந்த ஊரிலை வழியிலை பாக்கிற இட மெல்லாம் பனிமூடி பஞ்சுக்கூட்டங்களாய்த் தெரிஞ்சுது. குளிரோ கிடுகிடுக்க வைச்சுது. பிள்ளையள் தகப்பனோடை ஒட்டிக்கொண்டி ருந்திச்சினம். வெளியிலை ஒரு காட்சியும் தெளிவாய்த் தெரியுறதாயில்லை. ஆனால் சேச் அமைப்பிலை ஒரு கட்டிடம் பனிமூடி இருக்க 'அது சேச்சோ' எண்டு என்ர அவரிட்டைக் கேக்க 'ஓம் சேச் தான்' எண்டு என்ரை அவர் சொல்ல 'ஒருக்கா கொஞ்ச நேரம் அதிலை நிப்பாட்ட ஏலுமோ' எண்டு நான் கேக்க, 'ஓம் நிப்பாட்டலாம். ஆனால் ஏன்' எண்டார். நான் சொன்னன் "நான் உங்களிட்டை வந்த உடனை கோயிலுக்கு உடனையே வாறதாய்.. அதுதான்' எண்டு சொன்னன். அவர் 'நிப்பாட்டவேண்டாம். இங்கை நாங்கள் போகத் தேவையில்லை. எங்கடை கோயில் இஞ்சை இப்ப இருக்கு தெல்லே. நீங்கள் இஞ்சை வந்து சேர்ந்தால் அண்டே அரிச்சனை செய்யிறதாய் நேந்த னான். வா அங்கை போவம்' எண்டார். 'இல்லைப் பறுவாயில்லை. ஒரு நிமிசம் நிப் பாட்டுங்கோ. ஒருக்கா இந்த மண்ணிலை மிதிச்சுப் போட்டு வாறன்.' எண்டு சொல்ல அவர் பேசாமல் கார்க் கதவைத் திறக்க, நான் அவரையும் என்னோடை இறங்கச் சொல் லிக் கெஞ்ச அவரும் இறங்க அந்த இடத்தி லேயே முழந்தாழிட்டு யேசுவை மன்றாட அவர் 'இதென்ன இது நீ நடுறோட்டிலை நிண்டுகொண்டு இப்பிடி. அதுகும் இந்தப் பனிக்குள்ளை' எண்டு ஏசி என்னைக் காருக்குள் பிடித்து ஏத்தினார். எனக்கு இது போதும். முதல் வெற்றி முழுவதும் வெற்றி. ஊரை விட்டு வெளிக்கிடத் தீர்மானிச்ச உடனை நான் என்ரை கடவு ளிட்டை வேண்டின முதல் பிரார்த்தனை இது. அதுதான் நான் என்ரை அவரிட்டை போன உடனை முதல்லை அவரையும் கூட்டிக் கொண்டு

உன்ரை பாதத்திற்கு வாறன் எண்டது. என்ரை முதல் பிரார்த்தனை பலிச்சிட்டுது.

அடுத்தது நான் சேர்ந்த மதம் என்னட்டை கேட்ட வேண்டுகோளை நிறை வேற்றித் தருவன் எண்டது. 'உம்முடைய விசுவாசியாகிய நான் அதுக்கான என்னாலான எல்லா முயற்சியையும் எடுப்பன் ஆண்டவரே' எண்டு அவரை மனசுக்குள் செபிச்சுக் கொண்டு என்ரை அவரோடை காரிலை அவற்றை வீட்டை போனன்.

வீட்டிலை அவற்ரை றூமிலை பெரிய முருகன் படம். பழனி ஆண்டிக்கோலம். அறேக்கை கற்பூரத்தின்ரை வாசம். எனக்கு அறேக்கை போக முடியேல்லை. அவரிட்டை 'இதென்ன இது ஒரே கற்பூர மணம். அறேக்கை அப்பாச்சியிலை மணக்கிறது மாதிரி' எண்டு கேக்க, 'ஓம் எங்கடை வீட்டின்ரை கோயில் நினைப்புக்கு இதை வேண்டி வைச்சிருக்கிறன். வா வந்து குளிச்சுட்டு வந்து சாமி கும்பிடு. கெதியாச் சாப்பிடுவம். இப்பதான் பசிக்குது. ஒரு கிழமையாய் என்னாலை சரியாய்ச் சாப்பிட முடியேல்லை' எண்டார்.

'நான் கும்பிடுறது இருக்கட்டும். என்ன சாப்பாடு? உங்கடை வெளிநாட்டுச் சமையல் எப்பிடி இருக்கெண்டு பாப்பம்' எண்டு கொண்டு அவற்றை சாமியை கும்பிடாமல் தவிர்த்து குசினிக்குள்ளுக்கு போயிட்டன்.

ஆனால் பின்னேரம் 'முருகன் கோயிலுக்குப் போவம். வெளிக்கிடுங்கோ' எண்டு அவர் கேக்க 'நான் வரேலாது நீங்கள் போங்கோ' எண்டதும் அவர் எனக்குச் சுகமில்லையெண்டு நினைச்சுக் கொண்டு, 'என்னெண்டு பிளேனுக்குள்ளை சமாளிச்சனீர். இண்டைக்கு எத்தினை நாள்' எண்டார். எனக்கு அவருக்குப் பொய் சொல்ல முடியேல்லை. 'ஆண்டவருக்கு மேலை ஸ்தோத்திரம். உண்மையிலை நான் இனி சைவக்காரற்றை கோயிலுக்கை வரமாட்டன்' எண்டன்.

'அப்ப நீர் ஆர்' எண்டு அவர் பகிடியாய்க் கேக்கிறார். 'நான் கிறீஸ்துவின்ரை குழந்தை. அவரைத் தவிர ஆரையும் தொழன்' எண்டன் அவருக்கு.

அவர் 'உமக்கென்ன விசரே. பேசாமல் வெளிக்கிடும். முதல் கோயிலுக்குப் போயிட்டு வந்து குழந்தையளை இரவுச் சாப்பாட்டைக் குடுத்து வேளைக்கு நித்திரையாக்குவம். பிறகு நாங்கள் களையாறி நாளைக்கு விடிய வேளைக்கு வேலைக்கு எழும்பிப் போக வேணும்' எண்டார். 'ஏன் நாளைக்கே போகப் போறீங்களோ' எண்டு நான் கேக்க 'இல்லையப்பா, இப்ப ஐஞ்சு நாளாய் நான் லீவு. நீங்கள் வாறதுக்கு வீட்டுக்கு அடுக்குகள் பண்ணினதாலை. எனி என்ன, நாங்கள் எனி வாழ்க்கை முழுக்க எனி இஞ்சைதானே ஒண்டாய் இருக்கப்போறம். கிணத்துத் தண்ணியை வெள்ளமா கொண்டு போகப் போகுது' எண்டு என்னைப் பாத்துச் சிரிச்சுக் கொண்டு "பகிடியை விட்டுட்டு சுறுக்காய் வெளிக்கிடுமம்மா' எண்டார்.

நான் சிரிச்சுக்கொண்டு, 'பறவாயில்லையப்பா நீங்கள் போயிட்டு வாங்கோ. நான் கொண்டந்த சாமானுகளை ஒழுங்கு பண்ணுறன்' எண்டு அவற்ரை கோயிலுக்குப் போகாமல் விட்டிட்டன்.

அவர் கவலையோடை 'சரி, நான் போயிட்டுவாறன். என்ன உங்கள் எல்லாரோடையும் வாறதாய் கடவுளிட்டை வேண்டினனான். பரவாயில்லை' அவர் தன்ரை கோயிலுக்குப் போயிட்டு டப்பெண்டு வந்து 'இன்னொரு நாளைக்கு எல்லாரும் போவம்' எண்டிட்டு எங்களோடை நல்ல புழுகம் புழுகமாய் இருந்தார். அப்ப கதைக்கேக்க 'இனிமேல் தான் நான் நல்ல நிம்மதியான நித்திரை கொள்ளப் போறன். அப்பப்பா நாலு வரியமும் நாப்பது வரியமாய் இருந்திது. நான் உங்களை இப்பிடி இவ்வளவு கெதியிலை காணுவன் எண்டு கனவிலையும் நினைக்கேல்லை. சண்டை எப்ப நிக்கிறது. நானெப்ப உங்களைக் காணுறதெண்டு இருந்தன். எல்லாம் கடவுள் விட்ட வழி' எண்டார்.

ஆனால் நாள் செல்ல என்னைத் தேடி என்ரை மதப்பிரிவினர் என்ரை விலாசத்துக்கு வந்து போதனை செய்யத் துடங்க 'ஏன் இஞ்சை வேறை ஆக்கள் வருவான். ஒருத்தரும் வரப்படாது' அடியடா பிடியா எண்டு என்ரை அவர் என்னோடை பூனைகடி நாய் கடியாய்ப் பாயத் தொடங்கியிட்டார். எனக்கெண்டால், கடவுள் விசயத்திலை என்ரை பிள்ளையின்ரை கண்ணிலை பார்வையை ஓரளவேனும் விட்டுத் தந்த எல்லாம் வல்ல யேசுபிரானை விட்டுக்குடுக்க முடியேல்லை.

'நான் என்ரை கடவுளுகளிட்ட அலைஞ்சு திரிஞ்ச நேரம் இரந்து நான் பேயாய் இடையிலை வந்த இந்தச் சாமியின்ரை அனுக்கிரகம் தானே என்ரை பிள்ளையை காப்பாத்

தினது. எனவே அந்த மதத்தைவிட்டு விட்டால் தெய்வ நிந்தைக்காளாக வேண்டி வந்திடுமே. போனால் போகுது. தெய்வ குற்றத்தை விட மனித குற்றம் எந்தளவுக்கு மேலாகப் போகுது. எப்படியும் இந்தப் பூலோகத்தின்ரை அநித்திய சந்தோஷத்தைவிட பரலோகத்தின்ரை நித்திய சந்தோஷம் என்ரை குடும்பத்துக்குக் கிட்டும்' எண்ட அசையாத நம்பிக்கையிலை என்ரை கணவனோடை அவரின்ரை மதக் கொள்கையிலை உடன்பட மறுத்திட்டன்.

அவர் என்னைப் பலவழியாலையும் திருத்தப் பாத்தார். பேசினார். அடிச்சார். சாப்பாடு தராமல் விட்டார். வீட்டாலை வெளியேத்தினார். விவாகரத்து வழக்கு வைச்சார். பிள்ளையளை என்னட்டையிருந்து பிரிச்சார். வழக்கு வைச்சு கோட்டுத் தீர்ப்பின்படி வருமானம் உள்ள தனக்குரித்தாக்கினார் பிள்ளையளை. எல்லாமாய் ஆறு வருசம் தனிய என்னைப் பிரிஞ்சிருந்தார். வேறை கலியாணம் கட்டப்போறன் எண்டும் சொன்னார். சொன்ன மாதிரி என்னை விட்டுட்டு என்ரை அவர் வேறை ஒரு கலியாணமும் கட்டினார். ஒரு இந்துப் பொம்பிளையை. முதல்லை என்ரை அவற்றை அந்த ரண்டாவது பொம்பிளை இந்துப் பொம்பிளை என்னைப் பாத்து பயந்தது. நான் அந்தப் பிள்ளைக்குச் சொன்னன்.

'நீங்கள் ஏன் எனக்குப் பயப்பிடுறீங்கள். அவர் உங்களைக் கட்டாட்டிலும் வேறை ஆரையும் ஒராளைக் கட்டியிருப்பர்தானே. அதாலை நீங்கள் எனக்குப் பயப்பிடாதையுங்கோ. எனக்கும் என்ரை புருஷனுக்கு மிடையிலை தடையாயிருக்கிறது எங்கடை மதங்களே. என்ரை அவர் ஒரு நல்ல பிள்ளை. என்ரை பிள்ளையள் சரியாய் அவரைப் போலத்தானே.

எனக்கதுகள்ளை சரியான உயிர். அவை கோட்டுத்தீர்ப்புப்படி சனி, ஞாயிறு என்னட்டை வாறவை. அதாலை எனக்குப் பறவாயில்லை. நான் அவையிலை அவரைக் காணுறன். என்ரை ரண்டாவது பிரதீபா சரியாய் அவரைப்போலை. அதாலைதான் அவளின்ரை கண்ணிலை வருத்தம் வந்தால் போலை நான் துடிச்சு அந்த வருத்தத்தை மாத்திறதுக்கு என்னை நான் என்ரை மதத்துக்கு அர்ப்பணிச்சிட்டன். அவள் ஒரளவுக்கு சுகமாயிருக்கிறது எனக்கு என்ரை அவர் சுகமாயிருக்கிறதுக்குச் சமன். அவரை நீங்கள் வடிவாய்ப் பாருங்கோ, அவருக்கு நல்லெண்ணை விட்டுச் சுட்டதோசை நல்ல விருப்பம். ஆரும் சுடச்சுடக் குடுத்தால் நல்லாச் சாப்பிடுவார். அவற்றை உங்கடை இந்தப்பிள்ளை சரியாய் அப்பிடியே பிரதீபா தான். இஞ்சை தாங்கோ இந்தப் பிள்ளையை' எண்டு சொல்லி கேட்டு வேண்டி என்ரை ஆசைதீர கொஞ்சி அவவிட்டைக் குடுத்தன்.

அதே கண். என்ரை பிரதீபான்ரை கண். என்ரை அவற்றை கண். என்ர அவரைத் தான் இந்தக் குழந்தையும் அப்பிடியே வைச்சுரிச்சுப் பிறந்திருக்குது. அப்பிடியே பிரதீபாதான். ஆனால் எனக்கு ஒரு துளி தன்னும் அவர் என்னை விட்டுப் பிரிஞ்சிட்டார் எண்டு அவரோடை கோவமே வரேல்லை. ஏனெண்டால் அவையெல்லாம் அறியாமையெண்ட சாத்தான்ரை பிடியிலை விழுந்திருக்கினம். எண்டைக்கோ ஒரு நாள் அவை கெட்ட சாத்தான்ரை பிடியைவிட்டு நான் போற பாதையிலை வருவினம் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு. அண்டைக்கு நாங்களெல்லாம் என்ரை ஆண்டவற்றை பாதங்களை ஒண்டாய் சரணடைவம். இப்ப நான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அப்ப எங்களெல்லாருக்கும் நித்திய சுகம் கிடைக்கும். எனக்கு நல்வழி காட்டின எல்லாம் வல்ல இறைவன் என்ர குடும்பத்தினரையும் என்ரை வழிக்கு இல்லைத் தன்ரை வழிக்குக் கொண்டு வருவான் எண்ட நம்பிக்கையின் பேரிலை என்னட்டை என்ரை மதம் கேட்ட வேண்டுதலை நிறைவேற்றி நான் சார்ந்த கிறிஸ்துவத்திற்கு என்னோடை என்ரை குடும் பம் அதுதான் என்ரை அவர் என்ரை ரண்டு பிள்ளையள் அதோடை என்ரை அவற்ரை பொம்பிளை, என்ரை அவருக் கும் அவற்றை புதுப் பொம்பிளைக்கும் பிறந்த பிள்ளை எண்டு ஆறு விசுவாசிகளை உருவாக்கிய சந்தோஷத்தோடை பரலோகம் போவன் என்ற நம்பிக்கையோடை சுவிசேஷம் ஆண்டவரை மன்றாடுறது தான் என்ரை வாழ்வாய்ப் போச்சுது.

என்னை செய்யிறது! எங்களைப் பிணிச்சுள்ள மதங்களின்ரை சக்தி பற்றித்தான் நான் யோசிச்சுக் கொண்டு இருக்கிறன்.

> பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு —திருவள்ளுவர்

# மேல் ஏறிப் போகும்வழி



**க. சிவகரன்**

ஆசைகளில் உள்நுழைபவனை மீட்டுவருவது என்பது இயலாத காரியம் என்பது சரவணனுக்குத் தெரியும். அதுவும் பேராசையில் ஒருவன் களம் கண்டபின்பு அவனிடம் பேசுபவை எவற்றிற்கும் பொருள் இருக்காது என்பதுவும் இவனுக்குப் புரியும். கருக்கொண்ட மேகத்தை தடுக்க முடியுமா? கடலை அடையும் நதியை மறிக்க முடியுமா. காதல் கொண்ட பெண்ணின் பின்விளைவினை தடுக்க ஏதும் மொழியுண்டா? சாந்தன் கூட்டத்தில் ஒருவனாய் போய் உள்ளே மாட்டுப்பட்டு விட்டான். இனி அவனை மீட்க முடியாது என்ற கையறு நிலையின் பின்னர் வீதியிற் போன வாகனங்களை மட்டும் வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா நின்றான்.

சாந்தன் கேட்டதற்காகவே இவன் இங்கு வந்திருந்தான். வருமுன்பே அவன் உய்த்துணர்ந்த விடயங்கள் சரியாகவே இருந்தது. முப்பதாண்டுப்போரின் பின் அடிபட்டுப் போன ஒரு சமூகம் மேல் எழமுடியாமல் கருவறுக்கும் கூட்டங்கள் எமது சமூகத்திலேயே உள்ளமை அவனுக்கு வியப்பாகப் படவில்லை. நாளும் பொழுதும் அவன் அதைக் கண்டு உணர்கின்றான். மோசடிகள் பலவழிகளில் நடக்கின்றன. நுண்கடன் திட்டம் என்ற ஒன்று சந்தடி இல்லாமல் நுழைந்து ஆட்டையும், மாட்டையும் அலையும் அடித்துப் போய்விட்ட அலை ஓய்ந்தபாடில்லை. இப்பொழுதும் திரை மறைவில் மோசடிக் கடன்திட்டம் நடைமுறையில் உள்ளது என்பதை சரவணன் அறிவான். சாந்தன் உள்ளே இருந்து வெளியே வரப் போவதில்லை. இவன் கூட்டம் முடியுமுன்பே வெளியே வந்தது அவனுக்கு வியப்பாகப் படவில்லை. இவனை அவன் முழுமையாக நம்பியும் அழைத்துவரவில்லை. எனினும் மனித மனங்களின் பலவீனங்களில் எளிதிற் புகுந்து விளையாடலாம் என அவன் கோட்டை கட்டி இருக்கமுடியும்.

மூளைச் சலவை செய்வது பற்றிச் சரவணன் கேள்விப்பட்டதுண்டு. அவனே அவற்றைச் செய்ததும் உண்டு. வகுப்பறையில் மாணவர்முன் கற்பிப்பதற்கு முன் அவர்களிற்கு மூளைச்சலவை செய்ய வேண்டிய தேவை இவனுக்கு அடிக்கடி ஏற்பட்டதுண்டு. தாம் படிக்கப்போகும் விடயம் தொடர்பாக ஆவலும் ஆசையும் ஏற்பட இந்த உத்தி சாதுரியமாக அவனுக்குப்பட்டது. ஆனால் சலவைக்கு அகப்படாத மண்டைகளும் உள்ளதை அவன் அறிவான். இவன் ஒருமுறை சிறு கோயில் ஒன்றில் சாத்திரம் சொல்லும் பூசாரியால் ஓட ஓட விரட்டப்பட்டவன். அந்தப் பூசாரிக்குத் தெரியும் இவனிடம் எனது பயறு வேகாது என்பது. அதனால் இவனை கூட்டத்தில் வைத்து இருந்தால் கூட்டமே பிசுபிசுத்துபோய் தனது வயிற்றுப் பிழைப்பில் அடிபட்டுப் போய்விடும் என்ற பூசாரி அவன் போன்றவர்களை முகக்குறிப்பில் அறிந்து உடனேயே விரட்டிவிடுவது வழக்கம். இவனுக்கும் அது தெரியும். அப்படியே வெளியேறி வந்து விட்டான். இன்றும் கூட்டத்தில் இருந்து வெளியே வந்த பொழுது அங்கே காவலுக்கு நின்றவர்கள் இவனை எதுவும் கேட்கவில்லை. தலையசைத்து வெளியே போகவிட்டனர். அவர்களும் அதைவிரும்பியிருக்கமுடியும். வேகாத பயறுகளை வைத்து வியாபாரம் செய்ய அவர்கள் ஒன்றும்முட்டாள்க்ள்

கிடையாது என்பது இவனுக்குப் புரியும்.

சாந்தன் உடனே அகப்பட்டுக்கொண்டான் அல்லது தன்னை ஆகப்படுத்திக் கொண்டான் என்பது தொடர்பில் சரவணன் மனம் ஆராய முற்பட்டது. இதில் எதுவும் நடந்திருக்கலாம்.

அறம் என்ற ஒன்று இந்த உலகில் நிலையாக இருக்கின்றது என யாரும் கூறுவார்கள் ஆயின் அவர் போல முட்டாள்கள் யாரும் இருக்க முடியாது என சரவணன் நம்பினான். அறத்தை மனிதர் தாமாக கடைப்பிடிப்பார் என்றால் சட்டம் நீதிமன்றம் என்பன ஏன் என இவன் அடிக்கடி தன்னுள் கேட்பது உண்டு. அதே மற்ற நெறிகளில் பொதிவிட்ட உலகில் வாழ்தல் என்பது கொடிய காட்டில் விலங்குகளிடையே வாழ்வதிலும் கொடியது என எண்ணிய நாட்கள் உண்டு. பாவம் சாந்தன் என வ வேண்டிய தேவை இவனுக்கு எழவில்லை. வரட்டும் எனக் காத்திருந்தான்.

உள்ளே நடக்கின்ற கூட்டம் பிரமிட்டு அடிப்படையில் கூட்டப்பட்ட பொருள்விற் பனைக் கூட்டம் என்பது சாந்தனுக்கு புரியா மல் இருக்க நியாயம் கிடையாது. கூட்டத்தின் ஆரம்பத்திலேயே இது சட்டவிரோதமானது அன்று எனவும் போதிய சான்றுகள் சாட்சிகள் என்பன படமூலம் காட்டப்பட்ட பொழுதே சரவணன் இது சட்டவிரோதமானது தான் என முடிவு எடுத்துவிட்டான். சட்டரீதியாக கொண்டு சான்று காட்டி நிரூபிக்கவேண்டிய தேவை வேண்டுமா. உண்மைகட்கு மேலும் உண்மை என்று சான்றுகள் போதுமா பொய் யான ஒன்றிற்கே மனிதர்கள் அதிகம் பேச வேண்டியுள்ளது என்பதை இவன் அறிவான். ஆனால், சாந்தன் இவற்றை கூறினானோ இல்லையோ இவன் கூறினான்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் காட்டிய அவை யடக்கம் சாந்தனையும் அமைதி கொள்ள வைத்தது. பின்னர் பேசிய பேச்சுகள் அதைவிட அள்ளி வீசியது உள்ளங்களில் அடங்கிப் போய்கிடந்த ஆசையிலே தீ ஊற்றி எரிப்பதற்கு அவர்கள் நிறையப் பயிற்சி பெற்றே வந்தார்கள் தூண்டில் போட்டு மீன்பிடிப்பது போல என்று கூறமுடியாது. ஊசி இல்லாமலே மீன் பிடிக்கும் வித்தையை அவர்கள் கற்றிருப்பதாக இவனுக் குப் பட்டது.

ஒருவியாபாரம் செய்வதற்கு வேண்டிய அனைத்து கருவிகளும் அவர்களிடம் பயிற்சி மூலம் இருந்தது. திட்டமிடல், பொருத்த மானவர்களைப் பிடித்தல், அவர்கள் தலையில் கட்டியடித்தல், கூட்டத்தில் கூடியிருந்தவர்கள் யாவரும் பிரமிட்டு வடிவத்தில் நடுவில் நிற்பவர்கள் சிலர்களுக்குத்தானே மேலே போக வேண்டும் என்ற ஆசை இருக்கும் என்பது சரவணனின் கணிப்பு அல்ல கூட்டம் நடத்துவோரின் கணிப்பு. அது உண்மையாகிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சமூகம் ஒரு பிரமிட்டு வடிவத்தில் தான் கட்டமைக்கப்பட்டு உள்ளது என்பது சாந்தனிற்கு நன்கு தெரியும். அடிமட்டத்தில் உழைப்போர் நடுவிலே அவர்களை கண் காணிப்போரும் மேல் மட்டத்தில் உள்ள உயர்குழாத்திற்கு சேவைபுரிவோரும் இந்த எளிமையான ஆனால் சிக்கலான வடிவத்தில் மேலே ஏறிப்போக கீழ்மட்டம் மட்டுப் பாடுகள் எப்பொழுதும் சறுக்குமாப்போல் இருப்பது ஏன் என்பதும் சாந்தனிற்குப் புரியும். மேலே நேராக ஏறமுடியாது என்பது இவனுக்குப் புரியும். அதற்குமேல் குறுக்கு வழிகள், கொள்ளைகள், மோசடிகள் வேண் டும் என்பதும் இவனுக்குப் புரியும். சாந்தன் இதைப் புரிந்துதான் உள்ளே இருக்கிறானா இல்லைப் புரியாமல் போய் மாட்டி விட்டானா என்பது சரவணனிற்கு தேட லாகவே இருக்கின்றது.

பொருட்களை விற்கும் அமைப்பில் கட்டப்பட்ட இந்த வியாபார அமைப்பில் கூட்டத்தில் காட்டப்பட்ட முன் வைப்புகளில் ஒருவர் கட்டாயம் அவர்களிடமிருந்து ஒரு பொருளை வாங்கவேண்டும். அதன்பின்பு இரண்டு பேரைச் சேர்த்துவிட வேண்டும். பின்னர் இரண்டு பேர் பொருட்களை வாங்க வேண்டும். பின்னர் இரண்டு பேரைச் சேர்த்து விடவேண்டும். இப்படியே போகப் போக மேலே உள்ளவருக்குத் தரகுப் பணம் வந்து கொண்டே இருக்கும். முடிவில்லாமல் வரும் உலகின் கடைசி மனிதர் வாங்கும் வரையும் வரும். பின்னர் முன் உள்ளவர் மீண்டும் வாங்க வாங்க மேலும் நீங்கள் கோடீஸ்வரர் ஆகிவிடமுடியும். இதுதான் அடிப்படை விளக்கம்.

இந்த பிரமிட்டு அமைப்பு சட்டத்தால் தடை செய்யப்பட்டது என்பது சரவணனுக்குத் தெரியும். சாந்தனுக்குத் தெரியும். தெரிந்தும் தெரியாமல் இருப்பது போல் அவன் நடிக்கலாம் என இவன் நம்பினான்.

இந்தப் பிரமிட்டு வடிவம் தொடர்பில்

சரவணன் வாசித்தளவில் சிலர் ஆர்வங்காட்டி சூட்சி செய்யும் நடவடிக்கை என்பதை அறிந்து இருந்தான். ஒரு பொருளை சந்தையிலே பார்த்து வாங்கும் விலையைவிடவும் நான்கு மடங்கு விலைக்கு இங்கே வாங்க வேண்டும். அதன்பின்பு அவனைப்போல இரண்டுபேரைச் சேர்க்கவேண்டும். அப்படி முடியாவிட்டால் கட்டியழவேண்டியதுதான். ஆகக்கூடியது இரண்டு கட்டம். மூன்றாம் கட்டம் நான்காம்கட்டம். இதன்பின் பிரமிட்டு எட்டமுடியாது போய் விடும். மேலே உள்ளவன் காற்காசுக்கு பொருளை விற்றுச் சுருட்டிவிட்டு பங்கு போட்டுக்கொள் வான். இந்த ஊரைவிட்டுப் போய் மற்றுமோர் ஊரில் கடையை விரிப்பான். இப்படியே ஊர் ஊராய் ஏமாற்றி கோடிஸ்வரன் ஆகிவிடுவான். இந்த முட்டாள் சாந்தனுக்கு இவை தெரியுமா? தெரியும் . அவன் மனசில் ஆசை குடிகொண்ட பின்பு தானும் மேலே ஏறிப்போய் விடமுடியு மென அவன் நம்பிய பின்பு அவனை மீட்பது என்பது முடியாத காரியம் என்பதை சரவணன் உணரத்தலைப்பட்டான்.

மேலே கூட்டம் நடந்துகொண்டேயிருக் கின்றது. சாந்தன் ஏற்கனவே பொருளை வாங்க இரண்டு இலச்சம் கட்டிவிட்டான். நான் கீழே வந்துவிட்டேன். இங்கு நிண்டால் என்னைத் தேடி வருவான். வீண்வம்பு வேண்டாம் என எண்ணிச் சாந்தன் புறப்படத் தயாரானான்.

மெல்ல நடந்து வீதியைக் கடந்து தனது மோட்டார் வண்டியே தேடினான். விட்ட இடத்தை அடைந்து அதை இயக்க அதன் மேல் ஏறினான். என்ன வெளிக்கிட்டாச்சோ என்ற படி தயாளன் வந்து குதித்தான்.

மூவரும் ஒரு பள்ளியில் படிப்பிக்கும் ஆசிரி யர்கள் நண்பர்கள். ஆக வாழ கட்டுப்பட்ட வர்கள். ஏதோ தொழில் அடிப்படையில் கூடி வாழத்தானே வேண்டும் என கூடி வாழ்ப வர்கள். சாந்தன் கேட்டமையால் வந்த சரவ ணன் திட்டம் வெளிச்சமாக வெளிவிட்டுவிட் டான். நான் போறன். எனக்குச் சளியிருமல் என கூறிவிட்டு புறப்படத் தயாரானான் சரவணன். தயாளன் தொலைபேசி ஒலித்தது. வந்துவிட்டேன் மச்சான் எங்க மேலையே. வாறன். தயாளன் மேல ஏறிப் போகின்றான். அவன் மேல ஏறிப் போகும் வழியே இவன் பாத்துக்கொண்டு நின்கின்றான்.

# திருவிழாவில் தொலைந்துபோதல்

விரிந்த உலக வலையின்
அத்தனை நம்பிக்கைகளும்,
தத்துவங்களும்,
மதங்களும்
சாமானியனுக்கு கைவிரிக்கும்.
அனுதினமும் சாண் ஏற முழஞ்சறுக்கி
கரையேற்றத்தை கானல் நீராக்கி காக்கவைக்கும்.

வியாபாரிக்கு விலை மதிப்பில்லா
உலோகமோ
பண்டமோ
பத்திரமோ
அடமானத்தின் பிடிமானமே
கஞ்சத்தனத்தை கலைக்கும் நம்பிக்கைகளானது.

மோசமான வியாபாரியே
உலோகமற்ற உயிரின்
அடமானத்தில் அவமானம் காண்பான்.

உலக மகாநேயத்தின் மன்னனை
தமிழன் என்றால்
அவனுக்கு பெரும் சக்கரவர்த்தி
வேட்பாளர் எனப் புளகாங்கித்து முழங்கு

வேதனை தலைகளை அறுத்து
விடுதலையின் கனலை
நாடும் கரங்களை கட்டிபோட
விலங்குகள் வேண்டவோ,
நெஞ்சின் வலியை கூவிச்சொல்ல
கிழிந்த வாய்க்கு
பிளாஸ்திரி வேண்டவோ,
அர்த்தங்கள் அழிந்த வாழ்வை திறக்க
தூக்குக்கயிறு வேண்டவோ
அரை தசாப்தங்கள் காத்திரு.

உயிரின் மகசூலை
அறுவடை செய்யும் வேதாளத்திற்கு
மானத்தை
மரியாதையை,
சுயகவுரவத்தை ஒன்று திரட்டி
ஒரேயொரு விரலின் புள்ளியில்
அடமானம் வை.

தம்பா



# கோலம் செய

நீள அகன்ற தெருக்களில்
சுழித்தோடும் உந்துருளிகளில்
கரைந்தோடும் இளமைகள்
கால நீட்சியில்
கோலம் காட்டிடும்
அறிவியல் மேன்மையில்
அன்பும் அறமும் தேய
நொடிப் பொழுதின் உரசலில்
முட்டி மோதிட
அகவை அடையா
உயிர்கள் பறக்கச்
சடமாய் உடலங்கள்!

ஞாலம் போற்றும் நாட்டில்
கடனில் விருத்தி வாய்த்திட
காப்பெற் தரைகளில்
லீசிங் வாகனங்களின்
ஈசிப் பயணங்களில்
ஓசியாய் கிடைக்கின்ற
அனுப்பீடுகளில் களிக்கின்ற
மூன்றாம் உலகத்துக் குஞ்சுகள்
இரத்தம் உறைய நிலத்தினில்...

நாகதீபம் நோக்கிய
தம்பகோளம் நாடிய
பாசிக்குடா மெச்சிய
சுற்றுலா கேந்திரங்கள்
கோலம் செய
பாதைப் பயணங்கள்
ஊருறை மக்களின்
பொருட்டெனக் கொள்ளா
உயிர்களைக் காவுகொள்ள

கடன் பொறிக்குள் நாடும்
கடனில் மாழும் வீடும்...

சாவுக்குக் கட்டியம் கூறிடச்
சாராயத்துள்
நஞ்சுக் கலவைகள்
விஞ்சிடக் கஞ்சா அபினென...

அயல் மேவிடத் தமது
நுகர்வின் நலன்வேண்டித்
தம்மையே நுகர்வுக்காய்
கொடுத்துத்
தீய்ந்திட
இளமைகள் தாமழியச்
சூழும் சுற்றுலா மையங்கள்
நச்சுப் பொதிகளாய்...

வீழும் உடலங்களில் எங்கும்
சர்வ நாசக்
கொல் நெறியென
உலகப்பன் விட்டபடி
உலகமயமே
இயலாமையின் நகர்வாய்
பயங்கர வாதமாய் மேலெழும்.

அழ. பகீரதன்



இந்த வாய்த்தர்க்கம் நடந்துக் கொண்டிருக்கும் போதே ஆட்கள் அந்த இடத்திற்கு வந்து குமிந்துவிட்டனர். அந்த ஆலமரத்தடியில் இருந்த முனி யாண்டி சாமிக்கு ஒன்று நடக்க வில்லை. முக்கோண வடிவில் உயர்ந்த கற்சிலை அப்படியே இருந்தது.

# முனியாண்டி

சு. தவச்செல்வம்

சரமாரியாக கருப்பந்தேயிலை மரங்கள் அறுந்து விழுந்து கொண்டிருந்தது. பதினொன்று வரக்கட்டில் அறுத்து தள்ளிய ஒரு மரம் சரிந்து வரும் இராட்சச சத்தத்தில் பக்கத்தில் குடி யிருந்த ஆட்கள் எல்லோரும் வெளியே ஓடி வந்துவிட்டனர். அந்த கருப்பந்தேயிலை காட் டுத்துண்டில் அதுதான் பெரிய வெள்ளை மரம். கண்களை அந்தப் பக்கம் மேறுவிடும் யாரும் முதலாவதாக பார்ப்பது அந்த மரத்தைத் தான். ஆனால் இந்தமுறை மரம் அறுக்க வந்தவர் களின் கண்களிலிருந்து அது தப்பவில்லை. "வாதுகள் மட்டும் நாப்பது கட்டு வெறகு இருக்கும்." என்று சொல்லிக் கொண்டிருப்பான் பழனி. அவ்வளவு பெரிய மரம். எந்த தேயிலை மலை மூலையிலிருந்து பார்த்தாலும் வெள்ளை வெளேறென்று பட்டைகள் உரிந்து தெரிந்த அந்த மரம் மண்டு இரண்டு நிமிடங்கள் தான்.

அதுவரையில் படுக்கையில் தலைமாட்டில் கைகளைக் கட்டியபடி படுத்திருந்த முனி யாண்டி மனதில் ஏதோ பீறிட்டது. திடுக் கென்று வெளியே ஓடி வந்தார். அந்த இராட்சச வெள்ளை மரம் விழுந்து சரிந்து வந்ததில் அதற்கு கீழே நின்ற சிறிய சாணிக்கறுப்பற் தேயிலைமரங்கள் குறிஞ்சாச் செடிகள் இன்னும் பிற காட்டுச் செடிகள் எல்லாம் அதன் வேர்கள் பிடித்திருந்த மண் பிதுங்கி வெளியே தெரியுமளவு துப்பரவாகிக் கிடந்தது. சில கல்லுப்பாறைகளும் உருண்டு வந்திருந்தன. இதுவெல்லாம் முணியாண்டி யின் கண்ணைக் குத்தியிருந்தாலும் மரத்துக்கு பக்கத்தில் இருந்த காட்டு ஆழமரத்தின் பெரிய கிளையொன்றும் பிளந்து வெள்ளை நிறமாகத் தெரிந்தது. ஒரு மனிதனை இரண் டாய் பிளந்தது போன்ற அந்த தோற்றம் முணியாண்டியின் மனதைக் குத்தியது. அதைப் பார்த்த அவரது கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் விழுந்தது. மிகுந்த வேதனையுடன் உள்ளே வந்தவர் தனது பழைய கருங்காலி கைக்கம்பை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அறுவத்தி ஏழு வயதிலில்லை அவரது மிடுக்கு.

மேலே கேபல்களை மரத்தில் கட்டியபடி பல சிறிய மரங்களையும் மரம் அறுப்பவர்கள் வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தார்கள். கீழே கரத்தை ரோட்டில் மரம் ஏற்றும் லொறிகள் வரிசையாக நின்றுக் கொண்டிருந்தன. வெட்டி வீழ்த்திய மரங்களை மூன்று லொறிகளில் துண்டு துண்டாக அறுத்து ஏற்றி பெல்ட் போட்டு கட்டியிருந்தார்கள். சில லொறிகள் இன்னும் மரங்களை ஏற்றுவதற்கு காத்திருந்

தன. பெரிய கருப்பந்தேயிலை தோப்பு அது. பலரது கண்களை அது உறுத்திக் கொண்டிருந் தது. இன்று பொட்டல் வெளியாய் மாறிக் கொண்டிருக்கிறது.

முனியாண்டி மெதுவாக ரோட்டோடு நடக்காது குறுக்கு பாதை வழியாக போய் தண்ணிக்கானைத்தாண்டி வரக்கட்டில் ஏறிக் கொண்டிருந்தார். அவரது வேகம் பல்வேறு மனக்கொதிப்புகளை உணர்த்தியது. அவருக்கு பின்னே அடுத்த வீட்டுப் பழனியும் போனான். அவர் வரக்கட்டை கடந்து முடிப்பதற்குள் ஒன்றிரண்டு சிறிய மரங்களே நின்றன. மற்றதெல்லாம் துண்டுபோட்டுக்கொண்டிருந் தார்கள். வரக்கட்டில் ஏறிய முனியாண்டி தூறு அறுத்துக் கிடந்த வெள்ளை மரத்தை நெருங்கிப் பார்த்தார். கீழே பார்த்தவர் திடுக்கிட்டார். "கொலதெய்வத்த சாச்சிடாய்ங்களே" என்று பொங்கினார். மரத்தை துண்டாக்கி கொண் டிருந்த சிங்கள தொழிலாளிகளிடம் சென்றார். "மே கஸ்வலிங் இட்டியே அப்பேவுங் தெய் யோமினி மரண்ணே விதியட மே கா ஒக்கோம வஞ்சாவ கரல்லா கெனியண்ணே ஒகொல்லோ! நேத?" என்று கடுமையாக பேசினார். வயதான முனியாண்டியின் குரலிலிருந்து இப்படி கணத்த வார்த்தைகளை அவர்கள் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

அதிர்ச்சியில் உறைந்தவர்கள் வாளை கீழே போட்டுவிட்டு அவர் வார்த்தைகளை கவனித் தார்கள். பழனி அவரைப் பற்றி அவர்களிடம் சொன்னான். இவர் தான் இந்த தோட்டத்தைப் பார்த்த 'காவற்காரன்' முனியாண்டி 'ஓ ஏமத' என்று அவர்கள் மேலும் அவரிடமிருந்து எதிர் பார்த்தார்கள். "லக்ஷ காணட்ட ஓ கொல்லே கஸ் ஒக்கோம கெனியனவா விக்குனவா, ஏசல்லி மே வத்தே இன்னே ஜனதாவட தெனவதா? நெத்தாங் ஏ சல்லி உலிங் மே ஜனதாவட மொக்கக் ஹரி கரணவத?" என் றார். உணர்ச்சி பொங்கும் வரிகளில் கண்ணம் சிவந்தது.

இந்த சூழ்நிலையை கேள்விபட்டு உடன டியாக மலையிலிருந்த ஆட்கள் எல்லோரும் இறங்கிவிட்டனர். "ஏக்க நாங் அப்பிட தன்னே. நே டிக்க அபி கரனவா எச்சராய்" என்று தப்பித்துக் கொண்டான். இந்த வாய்த்தர்க்கம் நடந்துக் கொண்டிருக்கும் போதே ஆட்கள் அந்த இடத்திற்கு வந்து குமிந்துவிட்டனர். அந்த ஆலமரத்தடியில் இருந்த முனியாண்டி சாமிக்கு ஒன்று நடக்கவில்லை. முக்கோண வடிவில் உயர்ந்த கற்சிலை அப்படியே இருந்தது. அதற்கு பக்கத்தில் இருந்த வேலில் அவர் கடைசியாக சொருகி வைத்துவிட்டு போயி ருந்த தேசிக்காய் காய்ந்து சுருண்டிருந்தது. உண்மையிலேயே அவர் அவ்வளவு வேகமாக வந்தது அதைப் பார்க்கத்தான். "இந்தா பாருங்கடா இந்த மரக்கன்றுகள நீங்கதான் நட்டிங்க பராமிச் சிஸ்க ஓரம் போட்டீங்க வளர்த்தீங்க வளர்ந்து பெருசா வந்தோன கேட்டு கேள்வி இல்லாம அறுத்து கொண்டு லொறி லொறியா ஏத்திக் கொண்டு போறாய்ங்க லெச்சோ லெச்சோமா விக் கிறாய்ங்க காசு கொம்பனிக்கா? தொரைக்கா? ஒங்களுக்கு வெறகு கொட கெடைக்காது. எப்புடியாச்சும் போஸ்கடர் நீங்க எதையும் கேட்டுக்க மாட்டீங்க" என்று உணர்ச்சி வசப் பட்டு பேசியவர் குறுக்கு பாதையில் இறங் காமல் ரோட்டோடு விருட்டென்று நடக்கத் தொடங்கினார். அவருக்கு பின்னாலேயே பழனியும் நடந்தான்.

"இந்த மரங்கள வெட்டி தள்ளுறத பாத் தோன ஏ ஒடம்பெல்லாம் எப்புடி கொதிக்குது தெரியுமா பழனி? எனக்கு இத பாத்து கிட்டிருக்க முடியாது. அதுனாலதான் அந்த லெக்கவிட்டு வந்துட்டேன்." என்றார். "ஆமாங்க காவல் ஒங்களுக்கு இத பாத்துக் கிட்டிருக்க முடியாது" ஒரு கருப்பந்தேயில வாதவெட்டி டாவே 'தெண்டம்' போடுற ஆளு இல்ல நீங்க?" என்று முனியாண்டியின் காவல் தொழிலை பறைசாற்றினான்.

"பழ.....னீ, நா இந்த தோட்டத்துல காவ வேல செய்யிற நேரோ தோட்டம் எப்புடி இருந்திச்சினு நா சொல்லித் தெரிய தேவை யில்ல, இப்ப தோட்டம் போற நெலம நீங்க பாக்குறீங்கதானே!" "காவல் அன்னைக்குஞ்சரி இன்னைக்குஞ்சரி ஒங்கமாரி காவவேல செய் றதுக்கு ஆள் இல்ல இப்ப காவலண்ற பேருல தோட்டத்த கூட்டி கொடுக்குறவிய்ங்கதான் இருக்காய்ங்க" என்ற பழனியின் வார்த்தையில் காவல் வேலை இப்போ எப்புடி இருக்குனு இருவருமே உணர்ந்து கொண்டார்கள்.

"பழனி ஒனக்கு தெரியுமா? னுப்பது வருஷ காவல் வேலைல இந்த கோவிலுக்கு நா வராத நாளே இல்ல" பழனிக்கும் அது தெரிந்தாலும் "ம்ம்... சரிங்கண்ணே" என்றான்.

முனியாண்டி பென்சன் வாங்கி எழு வருசங்கள் ஆனாலும் இன்னுமே தான் ஒரு 'தோட்டத்து காவல்காரன்' என்ற கம்பீர

உணர்வுடனேயே வாழ்ந்து வருகிறார். அந்த தோட்டத்தில் காவலுக்கு பேர் போனவர். முணியான்டி என்ற அவரது பெயர் பொது வாக யாருக்குமே தெரியாது. எல்லாருமே 'காவல்' என்றே அவரை கூப்பிடுவர். சிங்க மலை தோட்டத்தின் நானூறு ஏக்கரில் உள்ள தேயிலை முதல் முருங்கை மரங்கள் வரை அவரது விரல் நுனியில் என்றே கூற வேண்டும். எந்த காட்டில் எத்தனை கருப்பந்தேயிலை மரங்கள், தேயிலை நிரையில் ஒரு சவுக்கை மரத்தை வெட்டிபுட்டு கூட முணியாண்டியின் பார்வையிலிருந்து தப்ப முடியாது.

வாட்டசாட்டமான உயரமான பளிச் சென்ற வெள்ளை உடம்பு இருபக்கமும் மீசை வளைந்து நிற்கும் அரைக்காட்சட்டையும் நீல நிற கோட்டுடன் ஒரு தொப்பியும் அணிந் திருப்பார். விடியல் முதல் இருட்டும் வரை யிலும் சில நேரங்களில் இருட்டியும் அவர் டியூப் கையில் பழைய பொண்டியா கடிகாரம் ஒன்று கட்டியிருப்பார். டியில் இருப்பதால் அநேகமாக அவரது தோற்றம் இப்படியே தான் இருக்கும். வலது கையில் காவல் கம்பும் கண்டர் கோடாலியும் சேர்த்து பிடித்துக் கொண்டுதான் நடப்பார். அவர் வருவதை அறிவிக்கும்படி அவரது 'டைகர்' நாய் முன்னே ஓடி வந்துக் கொண்டிருக்கும். துரைக்கு முன னுக்கு அந்த தோட்டத்தாளுக காவல்காரனுக் குத்தான் பயம். அவரைக் கண்டவுடனே பயந்து ஒளியும்.

காலையிலிருந்து அந்திவரைக்கும் வேட்டை நாயுடனேயே காவல் புரியும் அவரை நேரடி யாக காண்பது ஆவுடம். மிகவும் உயரமான தேரிகள் அல்லது மலைக்குன்றுகளில் உட் கார்ந்திருப்பார். காவல் நேரங்களில் ஒவ்வொரு நாளும் அந்த முணியாண்டி கோவிலுக்கு வருவது கண்டு அவரது காலத்தில் விறகுக்கு மரங்களை வெட்டுபவர்களை ஒளிந்திருந்து கையுடன் பிடித்துவிடுவார். கம்புகள் வெட்ட வருபவர்கள் இருட்டுபட்டதுமே வருவார்கள் என்று முணியாண்டிக்கு தெரியும். அதனால் அவர் யாருக்கும் தெரியாமலே நடமாடிவிட்டு நாலு மணிக்கு பிறகு போய் ஒரு கறுவைமரத்து உச்சியில் உட்கார்ந்து கொள்வார். முன்பு தேயிலை மலைகளில் நிரைநெடுகிலும் கருவை மரங்கள் வளர்ந்துருக்கும். மரத்தின் அரை வாசிக்கு மூடி படர்ந்திருக்கும் அதன் கிளை களில் யாரும் அமர்ந்திருந்தாலும் தெரியாது. காட்டுக்கு போய் கம்புகள் வெட்டி கட்டி தூக்கும் போது "போடுங்க கீழ கத்தி கோடாலி யெல்லாம் கொண்டாங்க நடங்க ஒப்பீஸ்க்கு" என்று அவர் மடக்கி பிடித்திடுவார். அவரது அந்த அதிகார தொனிகளுக்கு கட்டுப்படாதவர் யாரும் இருக்க முடியாது.

மாட்டுக்கு தட்டைப்பில்லு வெட்டுபவர் கள், ஆட்டுக்கு முருங்கை குலை வெட்டுப வர்கள், வீடுமெழுக 'வெள்ளை மண்ணு' வெட்டுபவர்கள் எல்லோரும் அவருக்கு பயந்து தெரியாமல் திருடுவார்கள். "அந்தாளு என்னாடி வெள்ளமண்ணு குழியெல்லாத்துல யும் போய் அசிங்கம்பண்ணி வச்சிபுடுறது இல்லாட்டி போன மூத்தரோம்பேஞ்சி வச்சிர்றது"

ஒருமுறை அண்ணமாக்கா பொம்பளை யாளு மலையில பேசிக்கிட்டிருந்ததையும் காவல் பொருட்படுத்தவில்லை. அவர் தொடர்ந்தும் பண்ணையும் மரங்களையும் காவல் பார்த்து வந்தார். காவல் வேலைக் காலத்தில் அவரைத் திட்டாத ஆட்களே இல்லையென்றாலும் தோட்டத்திலிருந்து பென்சன் வாங்கியதும் "இப்புடியா கெத்தா காவக்காரேன் இந்த தோட்டத்துக்கு இனி வரமாட்டான்" என்று பெருமையாக பேசினார்கள்.

ரோட்டோடு ரெண்டு மொடக்கு தாண் டியதும் "காவல்! கருப்பந்தேயிலை மரங் கல்லாம் இப்ப வெட்ட சொல்றாங்கதானே, அதுனாலதான் தண்ணி இல்லாம போவுதுனு சொல்றாங்களே காவல்?". "பழனி...னீ அது உம்மதான் அது எனக்கு தெரியும். நம்ப ஆளுகல தொரவெட்டஉடுரானா? நாங் காவல் வேல செய்ற நேரமு அவேன் மரத்த நம்பாளுக வெட்டாமதானே பாக்க்க சொன் னான். இப்ப இவ்வளோ மரத்த வெட்டி கோடி கணக்குல கொண்டுபோய் விக்கிறான். கம்பனிக்கிதானே லாபம் தேலைல நவுடோம் சம்பளம் கூட்ட முடியாதுனு கொம்பேனி காரேன் சொல்றானே இந்த மரத்துல வார வருமானத்த எந்த கணக்குல சேக்குறான் பழனி...னீ"

"ஆமாங்க காவல் அதுனா உம்மைதான் அந்த வருமானம் நமக்குதானே வரனும் பத்தாதுக்கு நம்ப குடிக்கிற தண்ணியதானே இந்த மரோ உறிஞ்சி வச்சிருக்கு?"

"ஆமா கருப்பந்தேயில நம்ம தண்ணிய உறியிது கம்பேனிகாரன் நம்ம ரெத்தத்தை உறிஞ்சிகிறான்." "ஆமா பழனி முந்தியெல்லாம் தேயில மலையெல்லாம் கறுவமரோம், சவுக்கு மரோம், வாக மரோம் எல்லாம் ஒவ்வொரு

பௌண்டிரியிலும் போட்டிருப்பான். நெரவாக்குலயும் முருங்க மரோம் நட்டிருப்பாங்க மண்ணுல உள்ள தண்ணிய பாது காத்துச்சி இப்ப இந்த மரமெல்லாம் எங்கயாச்சுந்தான் காங்குரோம். ஒங்களுக்கு தெரியாது பழனி முருங்க பட்டய உரிச்சதுக்கு எனக்கு முன்னுக்கு இருந்த காவக் காரேன் வேல நிப்பாட்டியிருக்கான். மரங்கள உசுருமாதி காவபாத்த தோட்டத்த இன்னக்கி பாரு. இனி தோட்டத்த காப்பாத்த அந்த முணியாண்டியுமுல்ல இந்த முணி யாண்டியு முள்ள. என்ன பண்ண போராங் களோ!"

பேசிக்கொண்டு இருவரும் முணி யாண்டி கோயில் தேரியிலிருந்து ரொம்பதூரம் வந்துவிட்டார்கள். தொழிலாளர்களின் சிறுசலசலப்பு மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த கோவிலில் பொங்களுக்கு அடுத்த நாள் சிவப்பு சேவல் கொண்டுபோய் காவக் கொடுத்துவிட்டு வருவார் முணி யாண்டி. அவரது அப்பா காலத்திலிருந்து அதை செய்து வருவதாக அவரது தந்தை வேலு சொல்லியிருக்கிறார். அதே முணியாண்டி கோவிலுக்கு பக்கத்தில் தான் ஒரு முறை காட்டுசவுக்கை கேஸ் ஒண்றை பிடித்ததாக பிரபல்யமாக பலர் சொல்லுவார்கள். மரத்துக்கு கோதுவைத்து ஒரு துண்டை கொண்டு வந்து அந்த மரம் களவெடுத் தவர்களை புடித்தாரென்று!

பழனியும் காவலும் பேசிக் கொண்டே வீட்டுக்கு வந்துவிட்டார்கள். வீட்டுக்குள் போய் நடந்து வந்த களைப்பில் சாயத் தண்ணியை குடித்து கொண்டிருந்தார். 'காவல்...காவல்' என்று பழனியின் குரல் ஒலித்தது. மீண்டும் வெளியே வந்தவரிடம் பழனி முணியாண்டி கோயிலை நோக்கி கையை காட்டினான். லொறிகளிலுள்ள மரங்கள் இறக்கப்பட்டு வெறும் லொறிகள் மட்டும் திரும்பிக் கொண்டிருந்தன. தொழிலாளர்களின் சத்தம் பெரும் சலசலப்பாக இருந்தது. மெல்லிய புன்னகையொன்றுக்காக முணியாண்டியின் வாய் அசைந்துக் கொண்டிருந்தது.

# புரியாப் பாடல்

புரியாத பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள்
எல்லோரும்.
வார்த்தைகள் மாறுகின்றன
வியாக்கியானங்கள் மாறுகின்றன
அவரவர் நோக்கில்
பாடிக் கொண்டிருக்கிறார்கள்.
என்ன நடந்தது?
ஏன் நடந்தது?
யாருக்கும் புரியவில்லை.
ஒரு சாரார்
தங்கள் மதங்கள் கக்கியதை
மீள வியாக்கியானப்படுத்தி
பாடிக் கொண்டிருக்கிறார்கள்.
மறு சாரார்
தங்கள் அரசியலுக்குப் பொருத்தமான
வார்த்தைகளைக் கோர்த்து
பாடிக் கொண்டிருக்கிறார்கள்
புரியாத பாடலை
புரிந்து கொண்ட தோரணையில்.
அவர்களது பாடல்
மதுவாய் ஊறி
எல்லோரிலும் நிறைகிறது.
எல்லோரும் பாடுகிறார்கள்
ஒவ்வொரு சுருதியிலும் ஸ்தாயியிலும்.
நாரசமாய் ஒலிக்கும் பாடலில்
கட்டி வைத்த இழைகள்
ஒவ்வொன்றாய் அவிழ்கின்றன.

இயல்வாணன்



# கூடைச்சுமை

செம்மலர் மோகன்

**கா**லையில் ஆறரைமணிக்கெல்லாம் பாட சாலைக்குப் போய்விட இனி பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றது அவனின் மனம். கார்க்கி ஆசிரியர் நேரத்திற்கு வந்து தன் வேலைகளைத்தொடங்கியிருப்பார். பின் தான் 'லேட் ஆகி' போகக்கூடாது என்பதே அவனின் எண்ணம். வழமையாகவே ஏழரை மணிக்கு போகும் அவனில் ஓர் மாற்றம்.

அவன் போகும் போது கார்க்கி சேர் சென்ற கிழமை வைத்த மரக்கன்றுகளுக்கு அங்குநின்ற மாணவர்களுடன் நீர் மேற்பார்வையில் இருந் தார்.

"குட் மோனிங் சேர்"

"வெரி குட் மோனிங் நீ சொன்னதுக்கு மாறா பத்து நிமிடம் லேட் ?"

"சொரி சேர் அம்மா சாப்பாடு கட்ட கொஞ்சம் சொனங்கிரீச்சி சேர்"

"ஓகே சீக்கிரம் இங்கே ஓடி வா. ஒன்னோட கூட்டம் பார்த்துக்கிட்டு இருக்கும்."

அவன் உடனே விரைந்து புத்தகப்பையை யும் தண்ணீர் போத்தலையும் மேசையில் வைத்துவிட்டு ஓடி வந்தான். அவன் கைகளால் கொண்டு வந்த இன்னோர் போத்தலின் நீரை எதிர்பார்த்து நின்ற கன்றுகளுக்கு ஊற்றினான்.

அது இலைகளை தாழ்த்தி நன்றி தெரிவிப் பதாய் அசைந்தாடியது.

அவற்றை ஒவ்வொன்றாய் பார்த்துப் புன் முறுவலை கொட்டினான். பின் புதிதாக வெட்டப்பட்ட குப்பை குழியிருக்கும். இடத்திற்கு விரைந்துப்போனான். அங்கு சிதறிக் கிடந்த குப்பைகளை ஒழுங்குப்படுத்தி ஓரிடத்தில் குவித்தான்.

"இது தான் இவனுக்கான முதலாவது பொறுப்பு"

"கமல் இங்கு ஓடிவா"

"சேர்"

"மரக்கன்றுகளை பார்த்து ஏ சிரிச்ச?"

"நீங்கதானே சேர் சொன்னீங்க நம்ம நேசிக்கிறவங்கள பார்த்தா சிரிக்கனும். அதா சேர்"

தயக்கத்துடன் கூறிய அந்த வார்த்தைகளில் இருந்த குழந்தையின் முதிர்ச்சியை தலை யாட்டி ரசித்தார்.

"இல்ல சேர் மரம் எம் உயிருன்னு சொன்னீங்களே சேர்"

"உண்மதா அதாலதா அத கஷ்டப்பட்டு வளர்க்கனு புரியுதா?"

"புரியுது சேர்"

இந்த சம்பாஷணையோடு அவன் மனம் இன்னும் மலர்ச்சியடையவும் ஏழரை மணி முதல் மணி ஒலிக்கனும். அன்றைய சூழலியல் குழு தன் கடமையை முடித்துக் கொண்டு வேகமாக காலை கூட்டத்திற்குச் சென்றது.

இன்று தரம் ஆறிலும் தரம் ஒன்றிலும் கற்கும் இரண்டு மாணவர்களின் பிறந்த தினம் வழக்கப்படி இருவரும் இரண்டு சிறிய பூச்சட்டிகளில் எடுத்து வந்த பூக்கன்றுகளை அதிபரிடம் ஒப்படைத்துப் பாராட்டுகளைப் பெற்றனர்.

கமலுக்கு கார்க்கி ஆசிரியரின் வருகையின் பின் ஏதோ ஓர் புத்துணர்ச்சி வந்ததாய் தெரிந்தது. அவர் மாணவர்களை மலர் களாகவும், மலர்களை மாணவர்களாகவும் பார்க்கும் பார்வை மிகவும் சிலிர்ப்பானது. இரண்டுமே பூத்தால் பலன் எனும் பக்குவம் அவரிடம் குடிக்கொண்டிருந்தது.

தாறுமாறாய் கிடந்த பாடசாலை சூழலை மூன்று மாதத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிவிட்டார்.

“இயற்கை எமக்குக் கிடைத்தைத விட அடுத்த சந்ததிக்கு நன்றாய் சென்றடைய வேண்டும். அதற்கான பங்கு புவியில் பிறக்கும் ஒவ்வொரு உயிரினதும் பொறுப்பும் விருப்பு மாகும்”

என்ற அவரின் வாசகம் மிகவும் பயனுள் ளது. அதில் எத்தனை ஆழ விசாலம் உள்ளது.

அவர் பாடசாலைக்கு வந்தவுடன் எல் லோரும் அவரை சற்று கடுமையான ஆசாமி என்று சிடுசிடுத்தனர். மாணவர்கள் அவரிடம் பேசக்கூடப் பயந்தார்கள். ஆனாலும் அவரின் எண்ணமும் செயலும் பலரை அவர் பக்கம் ஈர்த்தது. அப்படி ஈர்க்கப்பட்டவர்களில் கமலும் ஒருவன்.

வழமையான சோம்பல் தனம் அவனி டமிருந்து வெளிக்கிளம்பியது. காலையில் நேரத் தோடு எழும்புவதால் அவன் உடல் உயிர் பெற்றது. மூளை சுறுசுறுப்படைந்ததையும் முழு நாள் வேலையும் மலர்ச்சியடையும் சிரிக்கும் சூரியனாய் விரிவதையும் அவன் கொஞ்சம் கொஞ்சமாய் உணர்ந்தான்.

இந்த மாற்றங்கள் அவனில் புதுத்தெம்பை தந்தது. ஒருமுறை கார்க்கி ஆசிரியர் கமல் கற்கும் தரத்திலுள்ள வகுப்பு மாணவர்களை களச்சுற்றுலா ஒன்றிற்கு ஆயத்தப்படுத்தினார்.

அது ஒரு தேயிலை மலை. அங்குப் போன போது அன்று அந்த மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த உழைப்பை மட்டுமே நம்பி வாழும் தாய்மாரை காட்டினார். அவர் கள் கொழுந்து பறிக்கும் முறையையும், கூடையையும், கூடையின் பாரத்தையும் தூக்கிப் பார்க்க சொன்னார். பாதணிகளை கழற்றி விட்டு தேயிலை செடிகளுக்கிடையில் ஒவ் வொருவரையும் கூடையை மாட்டிக் கொண்டு நடக்கச் சொன்னார்.

“பிள்ளைகள் இன்று நீங்க பார்த்த விஷயத் தையும் அனுபவங்களையும் நாளக்கி எழுதிக் கிட்டு வாங்க.” என்றார்.

ஒருநாள் அவர் சுரேசுடன் கமலின் வீட்டுக்கு அந்திப் பொழுதில் வந்தார். கமல் மைதானத்தில் விளையாடுவதாக கூறி அவன் தாய் ஏசத் தொடங்கினார். விளையாட் டெல்லாம் மாறிவிட்டது. இவர்களாவது அதற்கு உயிரூட்டட்டும் எனக் கூறி கமலின் தாய்கு புரிய வைத்தார்.

“சேர் நீங்க இருங்க கமல் கூட்டிட்டு வாரே”

எனக்கூறி ஓடினான். சுரேஸ் ஓர் சில நிமிடங்களில் இருவரும் வந்தனர். அவர்கள் வரும் போது கமலின் தந்தையும் வீடு நோக்கி வந்துவிட்டார்.

கார்க்கி ஆசிரியர் கமலின் தந்தையின் வேலைகள் பற்றியும் தோட்ட நிலைமைகள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார். வெளியார் உற்பத்தி முறைபற்றியும் அதன் பாதிப்புக்கள் பற்றியும் நிறையவே பேசினார். அன்றுதான் ‘அவுட் குரோவிங் சிஸ்டம்’ என்பது தமது இருப்புக்கே ஆபத்தானது. என்று அவர் களுக்குத் தெரியும்.

பேசிமுடித்து தேநீரையும் பருகிவிட்டு வெளியேறும் போது கமலின் அப்பா ‘டோர்ச் லைட்டை’ எடுத்து கொண்டு வெளியில் வர இருட்டுப்பட்டு விட்டது.

“நீங்க கவனமா போங்க சேர் நா தவரணைக்கு போகனு காவ வேல சேர்” என்று கூறி தன் காவல் வேலை தயாரானார்.

அடுத்த நாள் வழமை போலவே காலைக் கூட்டம் இடம்பெற்றது. தரம் பத்து மாணவி ரேகா பிறந்த தினப் பரிசாக “கருப்பன் தேயிலை மரக்கன்று” ஒன்றை ஆசிரியரிடம் ஒப்படைத்தாள். உடனடியாக அந்த மாண வியை கன்று கொண்டுவந்ததற்காகப் பாராட் டினார். பின் “இந்த மரம் எமக்கு பயன் தராது” என்ற தலைப்பில் பேச்சை நிகழ்த்தினார்.

“கறுப்பன் தேயில் மரம் நாம் நடுறது நல்ல மரத்துக்கு நடுவில் நச்சுமரம் அது வளர வளர நாம தளர்வோம். நம்ம அழிக்கத் திட்டமிட்டு

உருவாக்கும் இந்த மரங்களை நாம நடக் கூடாது.

“இவ்வாறு கறுப்பன் தேயிலை மரத்தின் தீமைகளையும் அது நடப்படுவதால் நிலக்கீழ் நீர் குறைந்து இன்று தேயிலை, நிலம் வரட் சியாவதையும், தேயிலைத் தொழில் இல்லாமல் போவதையும், மலையகம் இல்லாமல் போவு தால் நம்ம பரம்பரை திட்டமிட்டு அழிக் கப்படுவதையும் விளக்கமாக கூறினார்.

இந்த விடயங்களில் உள்ள பாதிப்புகள் பற்றி கூறிவிட்டு ரேகாவை கூப்பிட்டார். “நாளைக்கு வாரப்போ நல்ல கன்று கொண்டு வாங்க நடலாம். என்ன” என்று கூறினார்..

இடைவேளையின் போது உணவை முடித்துக் கொண்டு கார்க்கி ஆசிரியர் வெளியில் வரவும் கமலும் சுரேசும் அவரைச் சந்திக்கவும் சரியாய் இருந்தது.

“சேர் கருப்பன் தேயிலை மரம் அவ்வளவு மோசமா சேர்”

“அந்த மரத்தைவிட அத நம்ப கையில் கொடுத்து நம்மளயே அழிக்க நினைக்கும் எண்ணம் தா ரொம்ப மோசம்.”

“சேர் அடுத்த கெழம நம்ம ஏழா நம்பருல ஆயிரம் கண்ணுக நடுறாங்களா சேர். அதுகடுதா அப்பா காவல் என்ன பண்ணுறது?”

“நீங்க போய் ஒங்க அம்மா, அப்பா கிட்ட எடுத்து சொல்லுங்க நாம இன்னு நெறய பரம்பரை இந்த மண்ணுல இருக்கணும். தேயிலையால இந்த சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை. அத அழிச்சா நாமலும் செதஞ் சிறுவோ.. எண்ணு போய் சொல்லுங்க.”

அவர்கள் இருவரும் இதை கேட்டுகொண்டு நின்றனர். அதில் உள்ள தீவிரம் அவர்களுக்கு புரிய ஆரம்பித்தது.

அடுத்த கிழமை ஏழாம் நம்பர் மலையில் மரக்கண்னு நடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து லயக் கோடிகளில் போஸ்ட்டர்கள் ஒட்டப் பட்டிருந்தன. அதப்பற்றி தோட்டமே பேச ஆரம்பித்தது.

கார்க்கி ஆசிரியர், சுரேஸ், கமல் மூவரும் அடுத்தநாள் காலையில் மலர்ச்சியுடன் ‘குட் மோனிங்’ சொல்லிக்கொண்டனர்.

கா்லை சூழலியல் குழுவின் வேலை முடிவதற்கும், முதல் மணி ஒலிப்பதற்கும் பழகி விட்டது.

அடுத்தநாள் மாணவர்கள் ஒவ்வொருவரை யும் தான் எழுதிவந்த எல்லாவற்றையும் வாசிக் கும்படி கூறினார். அனைவரும் வாசித்தனர். கூடையின் பாரமும், செடி களுக்கு மத்தியில் போவதிலுள்ள கஷ்டங் களும் அனைவரின் எழுத்துக்களிலும் வெளிப் பட்டது. அதில் சுரேஸின் வரிகள் மிகவும் உருக்கமாக இருந்தது. “அந்த மலையில் என் அம்மாவும் வேலை செய்தாள். அவர் என்னை சுமந்ததிலும் கூடையை சுமந்த பாரம் அதிகம். அது மனச்சுமையை விட பெரியது. என்னை ஒரும்முறை சுமந்த பிரசவ வேதனையை என்தாய் ஒவ்வொரு நாளும் சுமக்கின்றாள் அவள்...”

என்னை வயிற்றினுள் வைத்து பாதுகாக்க எத்தனை தடவை கீறல்களை தாங்கி யிருப்பாள்...”

இந்த வரிகள் சிலரின் கண்களை கலங்கச் செய்துவிட்டது. சுரேஸின் கண்களில் வெளிப் பட்ட கண்ணீரில் ஒரு சுமை தென்பட்டது. அது ஏனைய பொழுதுகளில் அழுவதை விட கனமானதாய் இருந்தது. அது கண்களிலிருந்து சிந்திய பின் மனம் கூட சிறகாய் பறந்தது.

ஆசிரியர் எழுந்தார். கரும்பலகை அருகில் சென்றார்.

“இந்த வேதனையின் பிரசவம் எப்படி இருக்கவேண்டும். நாம் துரோகிகளாகலாமா?”

என எழுதிவிட்டு சென்றுவிட்டார். அன் றைக்கு பிறகு பலர் தன் தாய்மாரின் கஷ்டங் களை உணர்வதாய் பேசிக் கொண்டனர். கார்க்கி ஆசிரியர், பிள்ளைகளுக்காக செய்து வைத்த சுவர் பலகை ஆக்கப்பூர்வமாய் நிரம்பியது.

இப்படி வித்தியாசமாக எமது கஷ்டம், வரலாற்று பின்னணிகளைப் பற்றி சொல்லி பேசுவார். அதன் மூலம் “நல்ல உணர்வுகளை விதைப்பார்.” நாம் அடிமைகளாகவே வந்தோம். அடிமைகளாகவே இறப்போமா? அவரின் பேச்சில் வேதனை உணர்வும் விடுதலை உணர்வும் மேலிடும்.

அன்று காலையும் கார்க்கி ஆசிரியர் பாட சாலைக்கு முதலில் வந்து பூத்துக்குலுங்கும் மரஞ்செடிகளுக்கு மாணவர்களுடன் இணைந்து நீரூற்றிக் கொண்டிருக்கிறார்.த

தூரத்தில் உள்ள பச்சை மலைகளில் கூடைச்சுமைகளோடு ஆங்காங்கு பெண்கள் தென்படுகின்றனர்.

# பின்நவீனத்துவ இலக்கியம் : உள்முகமயக்கங்கள் -சில குறிப்புகள்

அநாதரட்சகன்

> ஒருவரது இலக்கியத் தரிசனம்/பார்வை, இலக்கிய இரசனை எனபவற்றினை அவரது வாழ்வியல் சூழலும், சமூகப்பின்புலமும், கல்வியும், அனைத்துக்கும் மேலாக, அவனுடைய கருத்துச் சார்புகளும்தான் உருவாக்குகின்றன என்பதே உண்மையாகும். பொதுவில், அரசியல், இலக்கிய, பண்பாட்டு விடயங்களில் ஒருவர் கொண்டிருக்கும் வர்க்கப் பார்வையே அவைகுறித்த உண்மையான தரிசனத்தை ஏற்படுத்திவிடுகிறது

இன்றைய தமிழ்ச்சூழலில் பல்வேறு நிலைப் பட்ட பின்நவீனத்துவக் கொள்கையினர் செயற் பட்டுவருகின்றனர். அவர்கள் தம்மிடையே முரண்பாடான கருத்துக்களைக் கொண்டவர் களாகவும், எதிரெதிரானவர்களைப் போலத் தோற்றம் காட்டினாலும், சாராம்சத்தில் 'மார்க் சியத்தை மறுப்பது' எதிர்ப்பதில் ஒன்றிணைந்து செயற்பட்டுவருகின்றனர். அவர்களது பொது வான செயற்பாட்டுத்தளம் கட்டுடைத்தல், கூறு படுத்தல், சிதைத்தல் என்பனவே, மார்க்சி யத்தை இவர்கள் 'பெருங்கதையாடல்' எனக் குறித்துரைப்போதோடு, மார்க்சியத்தின் அடிப் படைக் கருத்துக்களை மறுத்துரைத்து வரு கின்றனர்.

மக்களின் நாளாந்த வாழ்வில் உலகமயமாகி விட்ட முதலாளித்துவ கருத்தியல் எனும் பெருங்கதையாடலை இவர்கள் எதிர்ப்பதில்லை. அதனை ஒன்றிணைந்து எதிர்க்கும் போது மக்களைக் கூறுபோடும் அரசியலாக்கி துணை போகின்றனர்.

இயங்கியல் பொருள்முதல்வாதத்தை பெருங் கதையாடல் என மறுக்கும் இவர்கள் அதற்கு மாற்றாக, தலித்தியம், பெண்ணியம், சுற்றுச் சூழலியம், எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் விளிம்பு நிலை மனிதர்கள் ஆகியோரின் வாழ்க் கையைப் பற்றித் தனித்தனியாகப் பேசவேண் டும் எனக் கூறுகின்றனர். இதனைப் பெருங் கதையாடல்களுக்கு எதிரான சிறுகதையாடல் எனக் கூறுவதுடன், எதிலும் செயற்பாட்டுக்கு அவசியமான ஒருமித்த பார்வைக்கு மாறாக, 'பன்முகப்பார்வை' வேண்டும் என்பதை வலி யுறுத்தி வருகின்றனர். இதற்காக, பல்வேறு கருத்துமுதல் தத்துவவாதிகளது கருத்துக்களை உள்வாங்கி மார்க்சியத்தின் போதாமை குறித்தும் பேச முன்வருகின்றனர். இவ்வாறு பன்முகப்பட்ட பார்வைகளும் கோட் பாடுகளும் கொண்ட குழுக்களாகத் தமிழ்ச் சூழலில் செயற்பட்டுவருகின்றனர்.

இலக்கியத்திலும் கூட யாருக்கும் எட்ட முடியாத உன்னத இலக்கியச் சொர்க்கம் ஒன்று இருப்பதாகவும், அவ்வகை இலக்கித் தரிசனத்தின் ஞானக்கண் தங்களிடமே வசப் பட்டுள்ளதாகவும் கூறி சாதாரண வாசகர் களை அச்சுறுத்தவும் விளைகிறார்கள்.

ஒருவரது இலக்கியத் தரிசனம்/பார்வை, இலக்கிய இரசனை எனபவற்றினை அவரது வாழ்வியல் சூழலும், சமூகப்பின்புலமும், கல் வியும், அனைத்துக்கும் மேலாக, அவருடைய கருத்துச் சார்புகளும்தான் உருவாக்குகின்றன என்பதே உண்மையாகும். பொதுவில், அரசி யல், இலக்கிய, பண்பாட்டு விடயங்களில் ஒருவர் கொண்டிருக்கும் வர்க்கப் பார்வையே அவைகுறித்த உண்மையான தரிசனத்தை ஏற் படுத்துகிறது. மாறாக, இவர்கள் கூறுவது போல, எவ்வித சித்தாந்தமுமின்றி அழகியல் பார்வை, மற்றும் படைப்பு அனுபவத்தின் வழி உண்மையைத் தரிசனம் கொள்ள இயலும் என்பது சாத்தியமற்றது.

மேலும், பின்நவீனத்துவ வாதிகள் படைப்பாளிக்கும், படைப்புக்கும் இடையிலான உறவு குறித்துத் தருகின்ற விளக்கமும் நகைப்புக்குரியதாகவே உள்ளது.

"நான் வேறு– படைப்பின் பரசவநிலையிலிருக்கும் நான் வேறு. ஆகவே நான் வேறு, என்படைப்பு வேறு"– என்பதே இந்த உறவு குறித்து முன்வைக்கும் விளக்கமாகும். இது இலக்கியத்தின் மீதுகொண்ட அக்கறையின் பாற்பட்டதன்று. மாறாக, இதில் இவர்களது சுயநலமும், காரிய வாதமும்தான் வெளிப்பட்டு நிற்கிறது. தமது சுயநல நாட்டத்தினை இயல்பானதொன்றெனவும், பொதுநல நாட்டம் என்பது பொய் எனவும் பிரகடனம் செய்கின்றனர். இதனால், பொதுநலனுக்காகத் தம்வாழ்வை அர்ப்பணித்த மனிதர்களை நேர்கொள்ளத் தயங்குகிறார்கள். இந்த மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்படுத்தக் கூடிய இயலுமை மார்க்சியத்திடமே உள்ளது. இதனாலேயே, இத்தகையோர் இயல்பாகவே மாக்சிய எதிர்ப்பாளர்களாக உள்ளனர். தமது கருத்துக்களைத் தம்நிலை சார்ந்து நியாயப்படுத்த முடியாதவர்களாக இருப்பதால்தான், அழகியல் முகமூடியினை அணிய முற்படுகின்றனர். இன்னும் ஒருபடி மேலேசென்று, 'இலக்கியம் வேறெந்த (அரசியல்) நோக்கத்திற்குமானதல்ல; இலக்கியத்தின் நோக்கம் இலக்கியமே' என்று தம்மைத் தூய இலக்கிய வாதிகளாகக் காட்டவும் விளைகின்றனர். இதன் அடிப்படையிலேயே, தனிமனித இன்பமூட்டக்கூடிய இலக்கியத்தையும் முன்னிறுத்த Pleasure of the Text என்பதனை வலியுறுத்துகின்றனர். அதாவது தனிமனிதனுக்கு இன்பமளிக்கக் கூடியதே பிரதி எனக் கூறுகிறார்கள். இந்த இரசனைவாதத்தினைப் பாரதி முதல் பேராசிரியர் க. கைலாசபதி வரை அம்பலப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

பொதுவாக, பின்நவீனத்துவப் பார்வையில் இலக்கியம் என்பது, புனிதமானது; அந்தராத்மாவின் பரசவ நிலையில் பிறப்பது; வர்க்கங்களுக்கும், அரசியலுக்கும் அப்பாற்பட்டது எனச் சுட்டப்படுகிறது. இதனையே எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய நியதியாகவும் நிறுவ முயல்கிறார்கள். உண்மையில் இலக்கியம் என்பது சமூகத்தின் முன்னோக்கிய முன்னேற்றத்திற்கான போர்வாளாகும். தவிர, மனித விடுதலை நோக்கிய பயணத்துக்கான திசையைக் காட்டும் உள்ளடக்கம் கொண்டதாகவும் இருக்கவேண்டும். இதுவே மக்கள் இலக்கியத்தின் சாரமாகும்.

மேலும், வர்க்கங்களுக்கப்பாற்பட்ட கலை இலக்கியமோ, எல்லாக் காலத்திற்கும் பொருந்திவரக்கூடிய தார்மீக நியதிகளோ இருந்ததில்லை. கலை இலக்கியங்களில் அதன் அழகியல் நிர்ணயிப்புகளும், மொழியும், வடிவங்களும் மாறிவரும் சமூகச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றமுற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன என்பதே மார்க்சியப் பார்வையாகும்.

பின்நவீனத்துவப் படைப்புக்கள் சாதாரண வாசகனுக்கு விளங்காத இருண்மைத் தன்மையானவை. இப்படைப்புக்கள் அணிந்துள்ள அறிவார்ந்த முகமூடி வாசகனை நெருக்கடிக்குள் தள்ளிவிடுகிறது. இலக்கியத்தின் பரசவ நிலையையும், இரசனையின் நுண்திறன்களையும் தங்களது படைப்புக்களில் கொண்டு வந்துள்ளதாக வேறு சாதிக்கமுயல்கிறார்கள். அத்துடன் தீவிர வாசிப்பு என்பதனையும் அந்தஸ்தின் மேன்மையான அடையாளமாகக் கருதுகின்றனர். எல்லாவற்றையும் உடை இந்த உடைப்புத்தான் சரியான இலக்கியத் தடம் என்கிறார்கள். உடைப்புக்குப் பின் அடுத்தது என்ன என்ற கேள்விக்கு இவர்களிடம் பதிலில்லை. அத்துடன், தனிமனித வாதத்தைத் தூக்கிநிறுத்தும் வகையில் இவர்களது படைப்புக்களின் உள்ளடக்கங்கள் உள்ளன.

சமூக உறவுகளின் ஒட்டுமொத்தமாகவே, சாராம்சத்தில் சமூகமனிதனாகவே மனிதனை மார்க்சியம் அணுகுகிறது. தனிமனிதனின் சிறப்புத்தன்மைகள் எதுவும் இந்தப் பொதுத்தன்மை என்ற உயிரோட்டத்தில்தான் வெளிப்படுகிறது. தனிமனிதன் கலை, இலக்கியம், அரசியல் என பலவற்றையும் படைப்பதற்கு முன் அவன் உயிர்வாழ்வதற்கான பொருளாகிய உற்பத்தியை மேற்கொள்வது அவசியம். இந்த உற்பத்தி நடவடிக்கையின் அம்சமாக இயற்கையோடு இயைந்து வாழவும், சகமனிதர்களோடு உறவுகளைப் பேணவும் ஆன வரலாற்றுப் போக்கின் விளைச்சலே மனிதன். தனிமனிதனின் உருவாக்கம் என்பது இதனைக் கடந்து நிற்க முடியாது.

வர்க்கப் பார்வை கொண்ட முற்போக்கு மக்கள் இலக்கியத்தில் இன, மத, சாதி, பாலின அடையாளங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டினையும் பின்நவீனத்துவ வாதிகள் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் அடையாள அரசியலை முன்னிலைப்படுத்தி நிற்கும், தனிமனித வாதத்தை முன்வைக்கும் அகநிலை கருத்துமுதல்வாத சித்தாந்த வாதி களாகவே உள்ளனர். மிகச் சிக்கலான உற்பத்தி உறவுகளினூடேதான் அடையாளங்கள் செயல் படுகின்றன என்பதை மறுக்கின்றனர்.

தனிமனித சுதந்திரம் என்ற பெயரில் தனிமனிதத்துவம் என்ற சிதைவினை பின் நவீனத்துவப் படைப்புக்கள் கொண்டிருக்கின்றன என்பதும் முக்கியமானது. இவை சமூகத்தின் இருப்பையே மறுத்து தனிமனித வாதத்தினை நிலைநிறுத்த முயல்கின்றன.

இன்றைய தமிழ்ச்சூழலில் பின்நவீனத்துவம் பற்றிக் கட்டியெழுப்பப்பட்ட மாயைகள், மயக்கங்கள் பெருமளவில் கலைந்து வருகிறது. தமிழ கத்தில் இதனை வலியுறுத்திச் செயற்பட்ட தலித்தியமும் சிதைந்து அதன் முகத்தை இழந்து நிற்கிறது. இதன் விளைவு என்னவெனில், குழப்பமான கருத்துக்களும், விளக்கமின்மையுமே எஞ்சியுள்ளது.

நிறைவாக, நுகர்வுக் கலாசாரம், கிராமங்களின் தற்சார்பின்மை, பெருகும் வன்முறை மனோபாவம், இயற்கையழிப்பு, ஊழல்கள், மத மொழி மேலாதிக்கம், பொதுநலன் சாரா சமூக அரசியல் வெளி போன்றவை அச்சுறுத்தல்களாக நிலவுகின்ற இன்றைய சூழல், மார்க்சியத்தின் தேவையையும், அதன் அறம்

# பணம் பறிக்கும்
# மண மண்டபங்கள்

*காணுமிடமெங்கும்*
*மழைக்கால காளான்களாய்*
*மண மண்டபங்கள்*
*முளைப்பதை பாரீர்!*

*கோடி கோடியாய்*
*பணம் கொட்டி*
*கோலாகலமாய் கொண்டாடும்*
*மணநாள் கொண்டாட்டங்களை பாரீர்!*

*ஏழைகள் பசித்திருக்க*
*எட்டிக்குப் போட்டியாய்*
*வீண்செலவில் நடந்தேறும்*
*திருமணங்களைப் பாரீர்!*

*பந்தல் போட்டு*
*பந்தி போட்ட மானிடரெல்லாம்*
*உணவுதனை சுயமாக போட்டுண்டு*
*புகைப்படத்திற்காய் மட்டும்*
*புன்னகைக்கும் புதிய பண்பாடு பாரீர்!*

*பணம் மெத்தி*
*குணம் செத்து*
*மணம் முடிக்கும்*
*மானிடரின் துயர் பாரீர்!*

*மண்டபங்கள் முளைத்திருக்கு*
*மணமகனும் நிறைந்திருக்கு*
*பணமின்றி ஏழைப் பெண்கள்*
*ஏங்கிக் கிடக்கும் அவல நிலை பாரீர்!*

*ஆடம்பர கொண்டாட்டம்*
*அழிவுதனை தந்திடுமே*
*எதுவும் அளவோடு இருந்திட்டால்*
*அழிவில்லை கேளீர்!*

எளிமைக்கவி புன்னாலைக்கட்டுவன்



# இப்சனின் 'ஒரு பாவை வீடு'

கவிஞர் சோ. பத்மநாதன்

இப்ஸனை, "காலத்தின் குரல்" என்று சொல்வதுண்டு. அவர் நோர்வேயில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றியவர். ஐரோப்பா அந்த நூற்றாண்டில் பாரிய மாற்றங்களைக் கண்டது. 1848இல் ஒரு புரட்சி, 1867இல் சர்வஜன வாக்குரிமை. 1859இல் டார்வின் தம்முடைய கூர்ப்புக் கோட்பாட்டை முன்வைத்தார், 1867 இல் கார்ல்மாக்ஸ் தம்முடைய "மூலதனத்தை" வெளியிட்டார். பின் கூறப்பட்ட இரண்டும் உலகை உலுப்பிய இயக்கங்கள். டார்வின், பைபிள் காலங்காலமாகச் சொல்லி வந்த சிருஷ்டிக் கதையை ஒதுக்கினார். மார்க்ஸ் வர்க்கத்தின் அடிப்படையில், ஆள்வோர் — ஆளப்படுவோர் என்ற உறவு, விதியால், பரம் பரையால் வருவது என்ற சமூக பொருளாதார முறைமையைத் தட்டிக் கேட்டார். இவ்வாறு அதுவரை கேள்விக்கிடமின்றி ஏற்றுக் கொள ளப்பட்டு வந்த சமூகக் கட்டமைப்பு விரிசல் காணத் தொடங்கிய நிலையிலும், குடும்பம் என்ற அமைப்பு உறுதியாகவே இருந்தது. அதை "பாவை வீடு" என்ற நாடகத்தின் மூலம் உலுக்கிப் பார்த்தவர் தான் இப்ஸன்.

"ஷேக்ஸ்பியர் மேடையில் எங்களை ஏற்றி னார்; ஆனால் எங்கள் சூழ்நிலைகளையல்ல. இப்ஸனோ எங்களை மட்டுமல்ல, எங்கள் சூழ் நிலைகளையும் மேடையேற்றினார்" என்பார் பேனாட்ஷோ.[1] மக்களுடைய உள்ளார்ந்த பிரக் ஞையை வைத்துக்கொண்டு ஷேக்ஸ்பியரால் வேலை செய்ய முடிந்தது. அவருடைய காலத் தில் அடிப்படை உறவுகளெல்லாம் தளம் பாமல் இருந்தன. ஷேக்ஸ்பியர் சமூகத்தின் மையத்திலிருந்து தொழிற்பட்டார். இப்ஸனோ சமூகத்தின் ஓரத்தில் நின்றபடி அதைப் பார்த்தார்; விமர்சித்தார். 19ஆம் நூற்றாண்டின் போலி விழுமியங்களை வெளிக்கொணர்ந்தார். அடிப்படை மனித உறவுகள் சரிந்து விட் டதைச் சுட்டிக் காட்டினார். தனிமனிதன் தான் வாழும் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு விட்டான் என்பதை மிக வலுவாக அடித்துச் சொன்னார். மனிதன் தன்னை உணர்வதற்குச் சமூகம் தடையாக இருப்பதைக் கோடிட்டுக் காட்டினார்.

அவல நாடகத்தின் வளர்ச்சியைப் பின் வருமாறு மதிப்பீடு செய்யலாம்:

மனிதன் விதியோடு போராடுவது- கிரேக்க நாடகம்
மனிதன் கடவுளோடு போராடுவது - எலிஸபெத் கால நாடகம்
மனிதன் சமூகத்தோடு போராடுவது - இப்ஸனில்
மனிதன் தன்னோடு போராடுவது - 20ஆம் நூற்றாண்டில்

முரண்பாடு நாடகத்திற்கு இன்றியமையா தது. இப்ஸனுடைய Public , Enemy இல் ஒரு மருத்துவர் சமூகத்தோடு முரண்படுகிறார். Master builders இல் ஒரு கட்டிடக் கலைஞர் ஒரு பெண்ணுடன் முரண்படுகிறார். When we dead Awaken இல் ஒரு சிற்பி, தன் மொடலுடன் முரண்படுகிறார்.

மிகையுணர்ச்சி (Romantic) மரபை உடைக்க இப்ஸன் பிரக்ஞை பூர்வமாக முயற்சி செய் கிறார். என்றாலும் மிகையுணர்ச்சி நாடகத்தின் பல அம்சங்களை அவர் நாடகங்களிற் காண லாம். ஒழுங்கான கதையமைப்பு, இலட்சிய பாத்திரங்கள், பாத்திர வளர்ச்சி, உச்சக் கட்டம், உணர்ச்சி வடிதல்— எல்லாம் இருக்கும்.

பாத்திரங்களைப் பொறுத்த மட்டில் கள்ள மறியாத குழந்தையுள்ளம் கொண்ட மனைவி, அவளைப் புரிந்து கொள்ளாத தன்முனைப்புக் கொண்ட கணவன், விசுவாசமான நண்பன், வஞ்சம் தீர்க்க முனையும் வில்லன் — இவை வகை மாதிரிகள் எனலாம்.

சூழ்நிலைகளிற் கூட இப்ஸன் பெரிய புதுமைகள் செய்துள்ளார் என்று சொல்ல

முடியாது. குற்றம் சார்ந்த ரகசியம், கடிதம், தபாற் பெட்டி, சஸ்பென்ஸ் குடும்பத்தின் மகிழ்ச்சியைக் குலைக்கும் வில்லன்– இவை Intrigue Drama வுக்குரிய அம்சங்கள். ஆயின் "பாவை வீடு" ஒரு தற்புதுமையான நாடகம் என்று கொண்டாடப்படுவது ஏன்? "பாவைக் கூத்தில் வரும் பாத்திரங்கள் போல் இருப்ப வர்கள் திடீரென உயிர்பெற்று இயங்கத் தொடங்கிவிடுகிறார்கள்"[2] என்கிறார் றேமண்ட் வில்லியம்ஸ். மிகையுணர்ச்சிக் கால நாடக மரபுப்படி இந்நாடக அனுபவம் எமக்குத் தரப்படுகிறது. அச்சட்டகத்தினுள்ளே ஒரு திருப்பம் ஏற்படுத் தப்படுகிறது. ஏற்றுக் கொள் ளல் என்ற வரையறைக்குள் ஒரு மறையான முடிவு தரப்படுகிறது. ("A partial negative within an essential acceptance") இந்நாடகத்தில் இப்ஸன் பிரயோ கிப்பது "கலந்துரையாடல்" என்பார் *(Discussion)* ஷோ. அல்ல, அது "பிரகடனம்" *(Declaration)* என்பர் வேறு சிலர்.

"பாவை வீடு" இரு வகை உறவுகள் மீது கட்டியெழுப்பப் படுகிறது.

01. கணவன் மனைவிக்கிடையில் எழும் முரண் பாடு
02. பெண்ணுக்கும் அவள் வாழும் சமூகத் துக் குமிடையில் எழும் முரண்பாடு

## கதைச் சுருக்கம்

குடும்பத் தலைவர் ஹெல்மர் ஒரு கண் ணியம் மிக்க குடிமகன்; வங்கி முகாமையாளர். மனைவிக்கு நல்ல கணவர்; பிள்ளைகளை நேசிக்கும் தந்தை. இனிய இல்லம், பெண்மை நலம் மிக்க மனைவி. ஓர் இலட்சியக் குடும்பம். மனைத்தக்க மாண்புடையாளாக, தான் வாழ் வதாய் மன நிறைவு கொண்டிருக்கிறாள் நோறா. அவசியம் நேர்ந்தால் ஹெல்மருடைய விரிந்த சிறகு தன்னைப் பாதுகாக்கும் என்று நம்புகின்றாள்.

சில ஆண்டுகளுக்கு முன் ஹெல்மர் கடும் நோய்வாய்ப்பட்டார். அவர் உடல் தேற வேண்டுமானால் ஓர் ஆரோக்கிய வாசஸ்தலத் துக்கு அவர் விடுமுறையிற் செல்லவேண்டும் என்பது மருத்துவர் கருத்து. ஆனால் ஹெல் மரிடம் பணமில்லை. அவர் கடன் படவும் மாட்டார். கணவனைக் காப்பாற்றும் முனைப் பில் நோறா வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒருவனை நாடுகிறாள். ஆனால் அவனோ அவளுடைய தந்தை பிணையாளியாக ஒப்ப மிட்டால் மட்டுமே கடன் தரமுடியும் என் கிறான். ஆனால் தந்தை சாகக் கிடக்கிறார்; அவரைப் போய் பிணை நிற்கும்படி கேட்க முடியாது. நோறா ஒரு குறுக்கு வழியைக் கையாள்கிறாள் தந்தையின் கை யொப்பத்தை தானே இடுகிறாள். கடன் பெற்றுக் கணவ னைக் காப்பாற்றி விடுகிறாள். அதன் பிறகு வேலை செய்து கடனை அடைக்கிறாள்.

இந்நிலையில் ஹெல்மர் பதவி உயர்வு பெற்று முகாமையாளராகிறார் நோறாவுக்குக் கடன் தந்த க்றொக்ஸ்ரட் அதே வங்கியில் வேலை செய்கிறவன். நேர்மையற்றவன் என்று அவனைப் பதவி நீக்கம் செய்கிறார் ஹெல்மர். "அவனோ என்னை மீள வேலைக் கமர்த்தும் படி உன் கணவனுக்குச் சொல்; இல்லாவிட்டால் நீ பொய்க் கையொப்ப மிட்டதை அவருக்குத் தெரிவிப்பேன்!" என்று நோறாவை மிரட்டுகிறான். அந்த ரகசியத்தை ஹெல்மருக்கு எழுதி தபாற் பெட்டியில் போட்டும் விடுகிறான். கடிதத்தைப் பார்த் ததும் ஹெல்மர் நடந்து கொள்ளும் முறை நோறாவின் எதிர்பார்ப்புக்களைத் தகர்த்து விடுகிறது. மோசக்காரி என்றும் அவளைக் குற்றஞ் சாட்டுகிறார். அதற்கும் மேலே போய் நேர்மையின்மை அவளுடைய குடும்பத்தின் இயல்பு என்று வைகிறார். அந்த நிலையில் தான், தான் இதுவரை ஒரு மாய உலகில் வாழ்ந்து விட்டதாகவும், கணவனுடைய மகிழ்ச்சியின் பொருட்டு தன் அடையா ளத்தை அழித்துக் கொண்டதாகவும் நோறா உணர்கிறாள். தந்தைக்காக, கணவனுக்காக, பிள்ளைகளுக்காக, வாழ்வதையெல்லாம் விட்டு, தனக்காக ஒரு முறை வாழவேண்டும் எனத் துணிகிறாள். அவள் நிலைப்பாட்டை முத லில் புரிந்து கொள்ளாது எல்லாக் கணவர் களையும் போல, அவளோடு சமரசம் செய் யும் முயற்சியில் ஹெல்மர் ஈடுபட்ட போதும், ஈற்றில் அவளைப் புரிந்து கொள்கிறார்.

நோறா தன்னுடைய நிலை பற்றிச் சிந்திக்க – அதாவது, பெண் என்ற வகையில் தன் நிலை பற்றிச் சிந்திக்கவும், சமூகத்தில் ஓர் உறுப்பினர் என்ற வகையில் தன் நிலை பற்றிச் சிந்திக்கவும்– வீட்டை விட்டு வெளி யேறுகிறாள். வாணாள் முழுவதும் தன்னு டைய தனித்துவம் மறுக்கப்பட்டு வந்திருக் கிறது என்று அவள் குமுறுகிறாள்–பிள்ளை யாக வளர்கையில் தன் தந்தை யாரால் வளர்ந்த பெண்ணான பின்பு தன் கணவ னால். "உங்களுக்காக வித்தை காட்டும் பெண்ணாக நான் வாழ்ந்து வருகிறேன்"

என்கிறாள் நோரா. "தந்தையின் கருத்துக்களை வேத வாக்காக ஏற்பதே மகளின் கடமை எனக் கொண்டு ஒழுகினேன். திருமணத்திற்கு பின்பு கணவனுக்குப் பிடித்தது, கணவனுக்கு வேண்டியதை எல்லாம் விரும்புவதும், சுவைப் பதும், ஏற்பதும் என் கடமையாயிற்று!"

சமயம், சட்டம், மண உறவு என்ற நிறு வனங்கள் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன.

"போதகர் ஹன்ஸெல் எனக்குப் போதித்த தெல்லாம் சரியா என நான் ஆராய வேண்டும்!"

## பெண்ணிய நாடகமா?

"பாவை வீடு" ஒரு பெண்ணிய நாடகமா? அதை எழுதத் தொடங்குகையில் இப்ஸனுக்கு இருந்த சிந்தனையோட்டம் என்ன? அதை அறிய 19.10.1878 இல் அவர் எழுதிய குறிப்பு உதவுகிறது. "இரண்டு விதமான அறம், இரண்டு விதமான மனச்சாட்சி உண்டு– ஒன்று ஆணுக்கு, மற்றது பெண்ணுக்கு. அவர்கள் ஒருவரை ஒரு வர் புரிந்து கொள்வதில்லை. நடைமுறை வாழ் வில் பெண் ஆணுக்குரிய சட்டத்திற்கமைய தீர்ப்புக்குள்ளாகிறாள் — ஏதோ அவள் பெண் அல்ல, அவள் ஓர் ஆண் என்பது போல!.[3]

நவீன சமுகத்தில் பெண் பெண்ணாக இருக்க முடிவதில்லை. அஃது ஓர் ஆண் மைய சமூகம். ஆண்கள் இயற்றிய சட்டங்களுக்கமை வாக, ஆண் வழக்குத் தொடுநர்களும் நீதிபதி களும் பெண்ணுடைய நடத்தையை தங்கள் கோணத்தில் மதிப்பீடு செய்யும் ஒரு சமூகம் அது.

"அவள், தான் போலிக் கையொப்பமிட்டது பற்றிப் பெருமைப்படுகிறாள் — கணவன் மேல் தான் கொண்ட அன்பால், அவர் உயிரைக் காப்பாற்றவே அதைச் செய்ததால்! ஆனால் அந்தக் கணவன் அவள் செய்கையை, சட்டம் எப்படி நோக்குமோ அப்படியே நோக்கு கிறான். அச்சூழ் நிலையை ஓர் ஆணின் கண்கொண்டே பார்க்கிறான்".[4]

அறம்சார் குழப்பத்திற்கு அவள் உள்ளா கிறாள். தன் ஒழுக்கத்தின் மீதே பிள்ளைகளை வளர்க்க தனக்குள்ள தகுதி மீதே அவள் நம்பிக்கை இழக்கிறாள். தவிர்க்க முடியாதபடி, ஈவிரக்கமில்லாத அவலம் அவளை நெருங்கு கிறது.... ஆற்றாமை, குழப்பம், தோல்வி.... அவள் செய்த மோசடியை, நோறாவின் தோல்வியை, திரையிட்டு மறைக்க இப்ஸன் முயலவில்லை.

உண்மை என்னவென்றால், தன்னுடைய ஆண் பாத்திரங்களை எப்படிச் சித்திரித் தாரோ அதேயளவு மனிதாபிமானத்தோடு இப்ஸன் தன் பெண்களையும் சித்திரித்தார். மற்றவர்கள் போல அவர்களுடைய பால் நிலையை அவர் முன்னிறுத்தவில்லை. இந் நாடகத்தின் ஒரு பெண் சமூகத்தை எதிர்த்து நிற்கிறாள்; அவ்வளவே. மீடியாவையும் எலெக்ற்றாவையும் இஃபிஜீனியாவையும் வார்த்த யூரிபிடீஸ் பண்டைய அதென்ஸ் மக்களால் ஒரு பெண்ணிய வாதியாக நோக்கப்பட்டார். "பாவை வீடு" பெண்ணிய நாடகம் என்ற வியாக்கியானத்தை முன் வைத்தவர் ஷோ. இப்ஸனுடைய பெண் பாத்திரங்கள் ஆண் களை விட சக்தி மிக்கவர் களாக வாழ்க் கையில் ஒரு குறிக்கோள் உள்ள வர்களாக விளங்குகிறார்கள். ஒப்பீட்டளவில் அவர்கள் ஆற்றல் மிக்கவர்களாக விளங்குவதால், அவர் கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்பதும் சரியானதே.

"எவ்வாறு Ghosts வெட்டை நோய் பற்றிய தென்றோ An Enemy of the people பொதுச் சுகாதாரம் பற்றியதென்றோ கூற முடியாதோ Doll House பெண்ணுரிமை பற்றியதென்று முடிவுகட்ட முடியாது" என்பார் மைக்கல் மெயர்.

ஆனால், M.C. ப்றாட்புறூக் அதை 19ஆம் நூற்றாண்டில் கடைக் கூறில் ஐரோப்பா அடங்கலும் இலக்கியம் வரித்துக் கொண்ட தொனிப்பொருளின் நோர்வீஜிய வடிவம்— அதாவது, "ஓர் ஆண்மைய உலகில் பெண் அனுபவிக்கும் உத்தரிப்பு" என்கிறார்.

சுதந்திரமாக வாழவும் தத்தம் ஆளுமையை விருத்தி செய்யவும் எல்லா மனிதருக்கும் உரி மையுண்டு. ஆனால், பெண்களைப் பொறுத்த வரையில் இந்த உரிமை திரும்பத் திரும்ப மறுக்கப்படுகிறது. ஒரு தனியாளுடைய வளர்ச்சி எவ்வாறு சமூகத்தால் கட்டுப்படு த்தப் படுகிறது என்பதற்கு நோறா உதாரணமா கிறாள். சமூகம் குற்றம் என்றும், தனிநபர் அசௌகரியம் என்றும் கருதும் ஒரு நட வடிக்கை எடுக்க அவள் நிர்ப்பந்திக்கப் படுகிறாள்.

உலகத்திலேயே அவள் மீது அதிக அன்பு பாராட்டியோர் இருவர்: அவள் தந்தையும் கணவனும். "நான் அப்பாவோடு வாழ்ந்த காலத்தில் தம் அபிப்பிராயங்களை அவர் எனக்குச் சொல்லுவார். அவர் அபிப்பிராயம் என் அபிப்பிராயம் ஆயிற்று. நான் வேறு விதமாகச் சிந்தித்தால் அவருக்கு பிடிக்காது.

என் கருத்தை நான் மறைப்பேன்." ஆக, அவள் அப்பாவின் கைப்பாவையாகவே இருந்தாள்.

## துணைப் பாத்திரங்கள்

திருமதி லிண்டா, டொக்ரர் றாங் ஆகிய இரு பாத்திரங்களை நோக்கலாம் நோறா தன் அந்தரங்கத்தைப் பகிர உதவும் ஒரு தோழியாக லிண்டா பங்காற்றுகிறாள். அவளுடைய நிலைமை நோறாவின் நிலைமையை ஒத்தும் சில அம்சங் களில் அதனுடன் மாறுபட்டும் உள்ளது. லிண்டா— க்றொக்ஸ்ரட் உறவு ஒரு துணைக் கதையை வழங்குகிறது. நோறாவில் ஒரு விழிப் புணர்வை ஏற்படுத்துபவள் லிண்டா. க்றொக்ஸ்ரட் மீதுதன் செல்வாக்கை பிரயோகித்து நோறா செய்த மோசடியை மூடி மறைக்க அவளால் முடியும். அவள் ஏன் அதைச் செய்ய முன் வரவில்லை? ஹெல்மரும் நோறாவும் நடத்தும் போலிவாழ்க்கை அவளுக்கு அருவருப்புத் தரு கிறது. அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று கருதுகிறாள். டொக்ரர் றாங் தன் தந்தை வாழ்ந்த ஒழுக்கங் கெட்ட வாழ்க்கை யால் பாதிக்கப்பட்டவர். இன்னொரு விதத் தில் நோறாவும் தன் தந்தையின் வளர்ப்பு முறையால் பாதிக்கப்பட்டவள். றாங்கின் தனி மையும் சோகமும் ஹெல்மர் குடும்பத்தின் குதூகலத்துக்கு முரண் மேலும் றாங் சாவை எதிர் நோக்கி வாழ்கிறவர். நோறாவும் மரணம் பற்றிய எண்ணங்களால் அல்லற்படுகிறாள்.

ஹெல்மரோடு வாழ வந்த பின் நிலைமை மேலும் மோசமாயிற்று. "உங்கள் ரசனைக்கு ஏற்ற விதத்தில் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தீர்கள். உங்கள் ரசனை என் ரசனை ஆயிற்று; அல்லது ஆனதாக நான் நடித்தேன்.. உங்களுக்காக, நான் ஒரு வித்தை காட்டு பவளாக வாழ்ந்தேன். நீங்கள் அதைத் தான் விரும்பினீர்கள்.... அப்பாவும் நீங்களும் செய்த பாதகம் இது...." என்கிறாள் அவள். ஆக, அவ ளுடைய ஆளுமை தனித்துவம்— அவ்விருவ ராலும் மறுக்கப்படுகிறது. இதுவே அவளுடைய குறை— குற்றச்சாட்டு.

## இப்ஸனுடைய அரங்கு

இனி, இப்ஸனுடைய அரங்கு பற்றி நோக் கலாம். "வாழும் பாத்திரங்கள்" "யதார்த்தமான பாத்திரங்கள்" ஆகிய இரு வகைகள் பற்றி ஒரு குழப்பம், இரண்டும் ஒன்றெனும் மயக்கம்— உள்ளது. "வாழும் பாத்திரம்" ஒன்று யதார்த் தமாக இல்லாது இருக்கலாம்— லீயர் மன் னன் போல. யதார்த்த நாடகத்தில், யதார்த்த மான பாத்திரம் ஒன்று வாழும் பாத்திரமாக இல்லாது இருக்கலாம். இப்ஸனுடைய சிறப்பு என்ன வென்றால், அவருடைய பாத்திரங்கள் யதார்த்தமான பாத்திரங்களாக இருக்கும் அதே வேளையில், வாழும் பாத்திரங்களாகவும் இருக்கின்றன.

இப்ஸன் தனது கருத்துக்களை எளிமை யான மொழியில் வெளியிடுவார். இப்ஸனு டைய வசனம்— அதைப் 'பேசும் பாத்திரம் பற்றிய, யாரை விளித்துப் பேசப்படுகிறதோ, அந்தப் பாத்திரம் பற்றிய, யாரைப் பற்றிப் பேசப் படுகிறதோ, அவரைப் பற்றிய விளக் கமாக அமைகிறது".

'அது முரண் நகையாகத் தொழிற்பட்டு, பாத்திரங்களுக்குக் கொடுக்கும் செய்தியை விட வித்தியாசமான ஒன்றைச் சபைக்குக் கொடுக்கிறது.

'அது முழு நாடகத்தின் லயக் கோலத்தில் ஓர் அங்கம் ஆகிறது.

என்கிறார் எறிக் பென்ற்லி[5] , உதாரணமாக ஒன்று: நோறா ஆவேசமாக ரறென்ரலா (நடனம்) ஆடுகிறாள்.

ஹெல்மர்: என்னப்பா! ஏதோ சீவன் போற மாதிரி ஆடுகிறீர்!

நோறா: ஓம் அப்படித்தான்!

ஹெல்மர் பேசுவது ஆட்டத்தை மட்டும் வைத்து, ஆனால் அவையோருக்குத் தெரியும் நோறா தபால் பெட்டியை நோக்கி அவர் செல்வதை தடுக்கவே ஆவேசமாக ஆடுகிறாள் என்பது.

இப்ஸனுடைய உரைநடை ஏதோ எழுத வேண்டும் என்பதற்காக எழுதியதல்ல| அது நாடகத்தில் தொழிற்படுவது.

"நோர்ஸ் (மொழி) இல் இப்ஸன் எய்திய செறிவை வேறு யாரும் எய்தியதில்லை. அவரு டைய உரைநடை பாவை வீட்டில் உயிர் பெறுகிறது" என்கிறார்; ஆ.ஊ ப்றாட்புறுக்.

## உத்திகள்

நாடகத்தின் தலைப்பே ஒரு படிமம். அது நாடகத்தின் உட்பொருளைச் சொல்கிறது. இப் ஸனுடைய உரையாடலையும் அரங்கக் குறிப் பையும் ஆய்வு செய்த ஜோன் நோர்த்ஹம் விளக்கு ஏற்ற / அணைக்கப்படுவதாயினும், திரை விலக்கப்படுவதாயினும் நாடக சூழ் நிலையில் பொருள் தருவதாக, அல்லது குறியீ டாக அன்றி, ஏதும் சொல்லப்படுவதில்லை

என்று நிறுவுகிறார். உதாரணமாக, கதவு வகிக்கும் பங்கைப் பார்க்கலாம். கதவு சாத்தப் படுதல் பதற்றத்தை அதிகரிக்கிறது. பாத்திரம் அந்நியப்படுத்தலைக் காட்டுகிறது. நாடகத்தின் தொடக்கத்தில், நாலு கதவுகள் அமைந்த, வசதி யான அறை எமது கண்ணிற்படுகிறது. மகிழ்ச்சிகரமாக, பாட்டொன்றை முணுமுணுத் தபடி நோறா உள்ளே வருகிறாள். முதன்முறை யாக, கதவைச் சாத்திவிட்டு, மெதுவாக, தன் கண வனுடைய கதவுக்கு நடந்து போய் உற்றுக் கேட்கிறாள். நோறாவும் பிள்ளைகளும் ஆரவாரமாக விளையாடிக் கொண்டிருக்கையில் பாதிக் கதவு திறக்கிறது. க்றொக்ஸ்ரட் தென் படுகிறான். நோறா பிள்ளைகளை வெளியில் அழைத்துப் போய் விட்டு விட்டுக் கதவைச் சாத்துகிறாள். ஆக, நோறா தனிமைப்பட்ட, பதற்றமான நிலையில் க்றொக்ஸ்ரடை எதிர் கொள்கிறாள்.

ஹெல்மர், கடிதக் கட்டைத் தன் அறைக் குள் கொண்டு செல்லும்போது கதவைச் சாத்துகிறார். பரிதாபமான நிலையில் நோறா பேசுவது கதவு திறக்கப்படுவதனால் தடை செய்யப் படுகிறது. எது நடக்கக் கூடாது என்று நோறா அஞ்சினாளோ அது நடக்கப் போகி றது. அந்தப் பயங்கரத்தை அவள் எதிர் கொள்ள வேண்டும். அந்த பயங்கர விழிப்பும் அவள் தன்னை உணர்தலும் நிகழப் போகின் றன. நாடகத்தின் உச்சக் கட்டம். ஓர் அற்புதம் நடக்கப் போகிறது. நடந்தவற்றை மறந்து இருவரும் மீள இணைதல் நிகழப் போகிறது என்று ஹெல்மர் காத்திருக்கிறார். அவருடைய ஆண்மை (முனைப்பு) யின் மீது அந்த அடி விழுகிறது. நோறா, யதார்த்தத்தை— உலகை எதிர்கொள்ளப்போகிறாள்.

கடிதம் மற்றொரு குறியீடு. அது பதற்றத்தின் குறியீடு. க்றொக்ஸ்ரடின் கடிதம் தபாற் பெட் டிக்குள் விழுகிறது. நோறா பதற்றமடை கிறாள். நடன நிகழ்ச்சி முடியும் வரை ஹெல்மர் கடிதங்களைப் பார்க்கக்கூடாது என்று பிடி வாதம் செய்கிறாள். நோறா— ஹெல்மர் உறவை வாழ்க்கையை மாற்றப் போகிற ஒன்றாக இந்தக் கடிதமே வரப் போகிறது.

ரறென்ரெலா (நடனம்) ஓர் அரங்க உத்தி. அது பொருளில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. சபையினர் ஏற்கனவே அறிந்த— ஆனால் ஹெல்மர் அறியா— ஒரு சூழலை அது மேலும் இறுக்கமடையச் செய் கிறது. ரறென்ரெலா ஓர் உணர்ச்சிகரமான விறுவிறுப்பான நடனம். சிலந்தியின் நஞ்சு தலைக்கேறிக் கொண்டிருக்க, அதை வெளி யேற்ற வேண்டி அவள் வேகமாக ஆடுகிறாள். க்றொக்ஸ்ரட் விரித்துள்ள வலையிலிருந்து விடுபட நோறா ஆடுவதால், இது குறியீடாகிறது.

நோறா வீட்டை விட்டு குடும்பத்தை விட்டுப் போக எடுத்த முடிவு சரியா? என்ற கேள்வி நீள விவாதிக்கப்பட்டு வந்துள்ளது. நாடகத்தின் முடிவில், நோறா வெளியேறு முன்னே, அவள் வாழ்வில் முக்கிய முடிவு எடுக்கப் பட்டு விட்டது. உலகின் சட்ட திட்டங்கள், மரபுகள் ஒத்துவராத சூழலில் தன் நிலை என்ன வென்று சிந்திக்க வேண்டும். பின்பு நடக்கும் எதுவும் அந்த முடிவை மாற்றப் போவதில்லை.

கணவனையும் பிள்ளைகளையும் நோறா போல் வேறெந்தப் பெண்ணும் நேசித்திருக்க முடியாது. அத்த வகையில் ஒருத்தி ஏன் வீட்டை விட்டு வெளியேறத் துணிகிறாள்? கணவன்மேற் கொண்ட காதலால் தான் அவள் போலி ஒப்பமிடுகிறாள். அவ்வுணர்வு —நல்லெண்ணம் அவனால் புரிந்து கொள் ளப்படவில்லை. க்றொக்ஸ்ரடின் கடிதத்தைத் திறந்த பின்தான் அவன் சுயரூபம்— தன்னை மையமாகக் கொண்டே சிந்திக்கும் சுயநலங் கருதும் ஒருவன் அவன் என்ற உண்மை— அவளுக்கு தெரிகிறது. "அட, இப்படிப் பட்ட மனிதனோடா எட்டு வருடம் வாழ்ந்தேன்" என்ற அதிர்ச்சி— விரக்தி— அவளை வெளியேற வைக்கிறது.

## இப்ஸன் புகுத்திய புதுமை

ஷேக்ஸ்பியர் எங்களை அரங்கில் உலவ விட்டார், எங்கள் சூழ்நிலைகளை அல்ல"[6] என்ற ஷோவின் கூற்றை விளக்க வேண்டும் எங்கள் சிறிய தந்தையர் எங்கள் தந்தையரைக் கொலை செய்வதில்லை; செய்தபின் எங்கள் அன்னையரை மணஞ்செய்வதில்லை. எங்கள் மன்னர்கள் குத்திக் கொலை செய்யப்படுவ தில்லை; செய்த பின் கொலையாளிகள் அரி யணை ஏறுவதில்லை. எங்கள் உடலில் ஒரு றாத்தல் தசையை அரிந்து தருவதாக பிணை நின்று நாம் உடன்படிக்கை எழுதுவதில்லை. நாம் சூனியக் காரிகளைச் சந்திப்பதில்லை. ஆக, ஷேக்ஸ்பியரில் உள்ள இடைவெளிகளை இப்ஸன் நிரப்புகிறார்.[7] எங்களை எங்கள் சூழலில் அரங்கில் நடமாட விடுகிறார்

ஒரு சில வரிகளை நீக்கிவிட்டு இப்ஸ னுக்கு முந்திய காலகட்டத்தில பிரபலமா யிருந்த ஃப்ரெஞ்ச் மாதிரிக்கு 'பாவை வீட்டை' எளிதில் மாற்றியிருக்கலாம் ஆனால் இப்ஸனு டைய நோறா என்ன செய்கிறாள்? உச்சக் கட்டத்தில், "இஞ்சை பாருங்கோ, எங்களுக் கிடையில் என்னதான் நடக்குதென்று ஒரு கால் இருந்து கதைக்க வேண்டியிருக்கு"! என்கிறாள். தொடரும் பத்து நிமிடத்தில் செப்பமான நாடகம், ஆகவேண்டிய பாவை வீடு, கலந்துரையாடல் நாடகமாகிறது புதிய நாடக அரங்காக ஐரோப்பாவில் கொடி நாட்டுகிறது.

### நிறைவு

இப்ஸனுடைய நாடகங்களில் அதிகம் பேசப்பட்டதும், சர்வதேசப் புகழ் பெற்றதும் பாவை வீடே. ஐந்து நாடக ரசிகர்களில் நால்வர் இப்ஸன் என்றால் பாவை வீட்டைப் படைத்தவர் என்றே அறிந்து வைத்திருக்கின் றனர்" என்கிறார் ப்றையன் டௌன்ஸ். இப்ஸன் நாடகங்களில் பாரிஸில் வர்த்தக ரீதியில் அரங்கேற்றப்பட்ட முதல் நாடகம் "பாவை வீடு" 19ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் அது ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் அரங்கேற்றப்பட்டு விட்டது.

1. Shaw, Bernard, 1913, The Quintessence of Ibesenisn, London, p.202,
2. "The novelty is that these deliberate romantic puppets are suddenly jerked into life" – Raymond Williams, *Drama from Ibsen to Brecht*.
3. "There are two kinds of moral laws, two kinds of conscience, one for men, and one quite different, for women. They don't understand each other: but in practical life woman is judged by masculine law, as though she weren't a woman but a man" - Ibsen's *Note for a Modern Tragedy*.
4. Ibsen's *Note for a Modern Tragedy*
5. An Ibsenite sentence performs four or five functions at once. It sheds light on the character speaking, on the character spoken to and the character spoken about ... It functions ironically in conveying to the audience a meaning different from that conveyed to the characters .. It is a part of the rhythmic pattern which constitutes the whole act" – Eric Bentley, *The Playwright as Thinker*. P.97
6. Shaw, Bernard :*The Quintessence of Ibsenism*, p 202
7. Ibid, p,202

## குழந்தைகள்

இந்த உலகத்தின் தெருக்களில்
அன்றாடம் குழந்தைகள்
தொலைந்த வண்ணம் இருக்கிறார்கள்

கேளிக்கை நிகழ்வுகள்
திருவிழாக்காலங்கள்
நெரிசல் மிகுந்த சந்தைச் சாவடி
பேரூந்து நிலையம்
ரயில் நிலையம்
இப்படி எங்காவது ஓரிடத்தில்
குழந்தைகள் தொலைந்து போகிறார்கள்

குழந்தைகளை தொலைத்த பெற்றோர்
கண்ணில் படுவோரிடமெல்லாம்
விசாரிக்கிறார்கள்
அங்காடிகளில் தேடுகிறார்கள்
போலிசில் முறைப்படுகிறார்கள்
பதைபதைப்புடன் தேடித்திரிகிறார்கள்

இந்த உலகத்தின் தெருக்களில்
அன்றாடம் குழந்தைகள்
தொலைந்த வண்ணம் இருக்கிறார்கள்

போர்கள் நடக்கும் தெருக்கள்
அமைதியற்ற தெருக்கள்
இடிபாடுகளின் தெருக்கள்
அகதிகளின் தெருக்கள்
அழுகைகளின் தெருக்கள்
குருதி தோய்ந்த தெருக்கள்
மலர்கள் நசிந்து கிடக்கும் தெருக்களிலும்
குழந்தைகள் தொலைந்து போகிறார்கள்

அவர்களிற் பலர்
தேடுவதற்கு யாருமற்ற குழந்தைகள்

.........................

சி. கிருஷ்ணப்பிரியன்

*அது மீண்டும் உயிர்பெற்றுவிட்டால், சுற்றியிருப்பவர்கள் இடம்பெயர்வது தான் ஒரேவழி. அப்படி நேர்ந்தால் அவர்கள் எங்கே போவது. சிறுகச்சிறுகச் சேகரித்துச் சொந்தமாக வாங்கிய குடியிருப்பு நிலங்களை விட்டு விட்டு எங்கே போவது...*

# கடைக்குட்டி செல்லம்

கொற்றை பி. கிருஷ்ணானந்தன்



"இஞ்சாருங்கோ... உங்கடை செல்லம் இண்டைக்கு ரியூசனுக்குப் போகமாட்டா வாம். எவ்வளவு சொல்லியும் கேட்கிறா ளில்லை. இண்டைக்குச் சனிக்கிழமை பள்ளிக் கூடமில்லையெண்டவுடனே எட்டுமணியாகியும் போர்த்துக்கொண்டு படுத்திருக்கிறாள்."

"சரி விடப்பா... காரணமில்லாமல் பிள்ளை போகாமல் நிற்காது. உடம்பு ஏலாதாக்கும்"

"நீங்கள் குடுக்கிற இடம்தான் எல்லாம். போன வருஷம் உப்பிடித்தான் செல்லம் குடுத்து, கடைசியிலை கட்டவுட்டுக்கு மேலால ஒரு புள்ளிதான் கூட எடுத்து அருந்தப்பிலை பாஸ் பண்ணினவா. படியாததுகளின்ரை பிள்ளைகள்கூட எவ்வளவு மார்க்ஸ் கூட எடுத்ததுகள்."

இதைக் கேட்டதும் பரமேஸ்வரன் மாஸ்ரருக்குப் பயங்கரக் கோபம் வந்துவிட்டது. மனைவிக்குக் கிட்ட வந்தார்.

"எத்தனை முறை சொல்லிப்போட்டன் இந்த மாதிரி ஒரு நாளும் குத்தல் கதை கதையாதையெண்டு. இனியும் பிள்ளைக்குக் கேட்கத்தக்கதாக இப்பிடிக் கதைச்சியெண்டால் நான் சும்மா இருக்கமாட்டன்."

"கடைக்குட்டி எண்டு செல்லம் குடுத்துக் குடுத்து பிள்ளையைப் பழுதாக்கப்போறார்."

ஈஸ்வரி முணுமுணுப்பது பரமேஸ்வரன் மாஸ்ரருக்கு விளங்கினாலும், மௌனமாக அந்த இடத்தை விட்டு விலகிக்கொண்டார்.

அர்ச்சனா அந்த வீட்டின் ஐந்தாவது பெண்பிள்ளை. ஐந்தாவது பெண் பிள்ளையென்றால் ஐந்தாவது பெண்பிள்ளையேதான். கலப்பு கிலப்பு என்று ஒன்றுமில்லாமல் சுத்தமாகவே பரமேஸ்வரன் மாஸ்ரருக்கு ஐந்தும் பெண்பிள்ளைகள்தான்.

"ஐஞ்சாங்கால் பெம்பிளைப் பிள்ளை மாஸ்ரருக்கு அள்ளிக் குடுக்கப்போகுது.

பலர் அவருக்குச் சொன்னார்கள். அவர் அதை நம்பவுமில்லை. அப்படியொன்றும் நடக்கவுமில்லை.

ஐந்து பிள்ளைகளைப் பெத்தவன் வாழ்க்கையில் மனம் சோர்ந்துவிடக் கூடாது என்ற உயர்சிந்தனையில் சொல்லப்படுகின்ற ஆறுதல் வார்த்தையாக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டார்.

"ஐந்து பெண்பிள்ளைகள் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" இதுவும் அவர் கேள்விப்பட்ட வாக்கியம்தான்.

அவர் அரசனாகவும் இருக்கவில்லை. அதே சமயம் ஆண்டியாகவும் ஆகமாட்டார் என்பதில் அவருக்கு பூரண நம்பிக்கை.

நீண்ட காலத்திற்குப் பிறகுசந்திக்கின்ற நண்பர்கள் கேட்கின்ற முதல் கேள்வி "எத்தனை பிள்ளைகள்?"

ஐந்து என்றதும் இந்தக் காலத்தில் கூட

ஐந்தா?" என்ற வியப்பு அவர்களின் முகத்தில் படர்வதை மாஸ்ரர் அவதானிப்பார்.

அடுத்த கேள்வி "எத்தனை ஆண் எத்தனை பெண்?"

ஐந்தும் பெண்பிள்ளைகள்தான் என்றதும் "அடக்கடவுளே" என்று அனுதாபம் வேறு. அப்போது அவர்கள்மீதுதான் பரமேஸ்வரன் மாஸ்ரருக்கு அனுதாபம் பிறக்கும்.

ஆரம்பத்தில் அவருக்கும் ஒரு மாதிரித்தான் இருந்தது. இப்போது ஒரு ஆண்பிள்ளையாவது இருந்தால் தனக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு துணையாக இருப்பான் என்ற கவலை கொஞ்சம் இருக்கிறதே தவிர இந்த ஐந்து பெண் பிள்ளைகளும் தங்களுக்குக் கிடைத்த பொக்கிஷங்கள் என்ற மனப்பூரிப் போடுதான் இருக்கிறார். மனைவியும்தான்.

ஐந்து பெண்பிள்ளைகளையும் நடப்பாக துணிச்சல் மிக்கவர்களாக ஆண்பிள்ளைகள் போலத்தான் வளர்கிறார்கள்.

முதல் நான்கும் சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்காக தங்களுக்குள் தனகுப்படுவார்கள். ஆனால் ஒருத்திக்கு சிறு காய்ச்சல் என்றாலும் துடித்துப்போய்விடுவார்கள்.

ஆனால் ஐந்தாவதோடு அதாவது அர்ச்சனாவோடு ஒரு சின்னதாகக்கூடப் பிரச்சினைப்படத் தயாரில்லை. அந்தளவுக்கு எல்லோருக்கும் செல்லம். அர்ச்சனாவின் பிடிவாதத்திற்கு ஒத்துப்போவதுதான் எல்லோரதும் இயல்பு. அவளை அழவைத்துப் பார்ப்பது யாருக்குமே இயலாத காரியமாகத்தான் இருந்துவருகிறது.

தகப்பனுக்குத்தான் ஆகக்கூடிய செல்லம். இத்தனைக்கும் அர்ச்சனாவின் பிறப்புக்கு சின்ன வரலாறு ஒன்று இருக்கிறது.

பரமேஸ்வரன் மாஸ்ரருக்கு மூன்றாவதும் பெண்பிள்ளையாக யாழ்—பெரியாஸ்பத்திரியில் பிறந்தது. உடனே கணவன் மனைவி இருவரும் மனமொத்துக் கதைத்து கர்ப்பத் தடை ஒப்பரேசன் செய்வதற்கு முடிவு செய்து கொண்டார்கள். இந்த முடிவை குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்குத் தெரிவிக்காமல் சகல ஏற்பாடுகளும் செய்து முடித்துவிட்டார்கள். பகல் பத்துமணிக்குச் சத்திரசிகிச்சைக்கு தயாராக இருக்கவேண்டும் என்று ஏற்பாடு இருக்க சரியாக எட்டு மணிக்கே அதற்குத் தடை விதிக்கப்பட்டுவிட்டது.

தடைவிதிக்கப்பட்டது யாரால்...? பரமேஸ்வரன் மாஸ்ரரின் தாய் தகப்பனாலும் சிறியதாய் சிறிய தகப்பனாலும்தான்.

ஏதோ ஒரு வகையில் பரமேஸ்வரன் மாஸ்ரரின் தமக்கைமாரின் காதுகளுக்கு விஷயம் சென்றடைந்து, அவர்கள் சிறியதாய் சிறிய தகப்பனுக்கு காதில் போட, வந்தது வினை. வாடகைக் கார் பிடித்து தாய் தகப்பன் உட்பட நாலுபேரும் வந்து பெரியாஸ்பத்திரியில் இறங்கினார்கள்.

"நீ இப்ப பெரியாளாகிவிட்டாய். என்ன? எங்களோடை இதெல்லாம் கலந்து ஆலோசிக்கமாட்டியோ.... நீயே சகல முடிவையும் எடுத்துவிடுவாயோ...?"

இது சிறிய தாய் தகப்பன்.

"நாங்கள் பத்துப்பேர் சகோதரங்கள். உனக்குத் தெரியும்தானே... யாராவது கீழை போய்விட்டமோ... அ... அதோடை எங்கடை குடும்பத்துக்கை ஆருக்காவது ஒரு ஆண் குஞ்சாவது பிறக்காமல் விட்டிருக்கோ..."

இது தகப்பன்.

"எல்லாம் பெட்டைக் குஞ்சுகளாகவே பிறந்தாலும் பிறக்கட்டும். உனக்கென்ன காணி பூமி இல்லையோ. சொத்துப்பத்து இல்லையோ ஏன் மூண்டோடை தடை செய்ய வேணும். நாங்கள் இதுக்கு ஒருக்காலும் சம்மதிக்க மாட்டம்" இது தாய்.

பிறகென்ன...? நோ அப்பீல். எல்லாவற்றையும் அப்படியே நிறுத்திவிட்டு வீட்டுக்குத் திரும்பியதுதான் நடந்தது.

விடுதலைப்புலிகள் தமிழர்களின் இன விகிதாசாரம் குறைந்து விடக்கூடாது என்பதற்காக தங்களது கட்டுப்பாட்டுக்குள் இருந்த வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளுக்கு தடை விதித்திருந்தார்கள். அதற்குரிய மருந்து ஊசி வகைகளும் எளிதில் கிடைக்க வாய்ப்பிருக்கவில்லை.

நான்காவது தடவையும் மாஸ்ரரின் மனைவி கர்ப்பமடைந்தாள். பெண் பிள்ளையையும் பெற்றெடுத்தாள். வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் இம்முறை எல்லோருக்கும் ஒரு மாதிரியாகத்தான் போய்விட்டது.

இனியும் இதற்குத் தயாரில்லை என்ற முடிவுடன் பெரியாஸ்பத்திரியின் மகப்பேற்று நிபுணரை அணுகினார் மாஸ்ரர்.

"இப்ப நாட்டிலை என்ன நடக்குது...? கடலிலிருந்தும் பலாலியிலிருந்தும் எந்த நேரமும் ஷெல் அடிக்கிறாங்கள். பொம்பர்கள் வந்து எந்த நேரமும் குண்டு போடுது. சனங்கள் எந்த நேரமும் பங்கருக்குள்ள ஓடுறதும் வெளியிலை வாறதுமாக இருக்குதுகள். இந்த நேரம் ஒப்பறேசன் செய்துபோட்டு பங்கருக்குள்ள இறங்கி ஏறுவியளோ... போங்கோ... நிலைமை ஓரளவு சீரடைந்த பின்னை வாங்க... நான் செய்துவிடுகிறன்."

டொக்டர் திருப்பியனுப்பிவிட்டார்.

ஒரு வருஷம் சென்றது. தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி – ஒரு ஆண் பிள்ளைக்காக – என்றில்லாமல் இயல்பாகவே மீண்டும் ஈஸ்வரி கர்ப்பமுற்றாள்.

மாஸ்ரர் முடிவெடுத்துவிட்டார் இதைக் கர்ப்பத்திலேயே கலைப்பது என்று.

மனைவி மறுத்துவிட்டாள். எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். மாஸ்ரர் கேட்கவேயில்லை.

மாஸ்ரரோ மனைவியோ முந்தைய நான்கு பிள்ளைகளும் பிறந்த உடனே பெண்பிள்ளை என்றதும் மற்றவர்களைப் போலல்லாமல் சந்தோஷமாகத்தான் ஏற்றுக்கொண்டார்கள். நாட்செல்லச் செல்ல அவர்களது குறும்புகள் விளையாட்டுக்கள் எல்லாவற்றிலும் தங்களை மெய்மறந்து சிலிர்த்துப்போய்விடுவார்கள். அவர்களில் பாசத்தைப் பொழிந்து வளர்த்தார்கள்.

ஆனால் இப்போது ஐந்தாவதுக்காகக் கர்ப்பம் தரித்தபோது சட்டத்திற்கு ஏற்காத முறையிலாவது அதைக் கலைத்துவிடுவது என்று மாஸ்ரர் உறுதியாகத்தானிருந்தார். ஐந்தாவது பிள்ளை தேவையில்லை. அதுவும் பெண்பிள்ளை என்றாகிவிட்டால் நிலைமை மோசமாகிவிடும் என்பது அவர் கருத்து. மனைவி கெஞ்சிக் கேட்டும் அவர் முடிவை மாற்றவேயில்லை.

"ஒரு ஆம்பிளைப்பிள்ளை இருந்தால் நல்லதுதான். ஆனால் இதுவும் பெம்பிளைப் பிள்ளையென்றால்... இந்தியாவிலை தமிழ்நாட்டிலை சிலபேர் செய்யிறதுபோல அரளி விதையை அரைச்சுக்கொடுத்து அல்லது கள்ளிப்பால் குடுத்துக் கொல்லுற ஆட்களே நாங்கள். இப்ப... என்ன இது ஒண்டரை மாதந்துத் தூமைக்கட்டி. உலகத்திலை எவ்வளவோ நடக்குது. இப்பவே இதை அபோஷன் செய்யிறது பிரச்சினை இல்லை."

வேறு வழியில்லாமல் ஈஸ்வரியும் ஒத்துக் கொண்டாள். முதலில் ஒரு டொக்டரிடம் போனார்கள். அவர் முன்னரே நல்ல பழக்கமான டொக்டர்தான். அடுத்தநாள் வரச் சொல்லி ஒரு ஊசி போட்டு விட்டார்.

இரண்டு கிழமை சென்றது. ஆனால் ஒரு பலனும் கிடைக்கவில்லை. இப்போது இரண்டு மாதமாகிவிட்டது. வேறு ஒரு டொக்டரிடம் போனார்கள். அவரும் முதலே அறிமுகமான டொக்டர்தான். அவரும் கருக் கலைப்புக்கான ஊசி போட்டார். மேலும் இரண்டு கிழமை சென்றது. ஒரு பிரதிபலிப்பும் இல்லை. இப்போது ஈஸ்வரிக்கு வயிற்றில் இரண்டரை மாதங்களாகிவிட்டது.

இப்போது மூன்றாவது டொக்டரிடம் போனார்கள். அபோஷனைத் தவிர்க்குமாறு அவர் கொஞ்சம் புத்திமதி சொல்லிப் பார்த்தார். மாஸ்ரர் சம்மதிக்கவில்லை. வேறு வழியில்லாமல் அவரும் ஊசி போட்டார். ஒரு பிரயோசனமும் இல்லை. இப்போது மூன்று மாதங்களாகிவிட்டன. ஈஸ்வரியின் வயிற்றில் பிள்ளையின் வளர்ச்சி வெளித் தெரிந்தது.

நண்பர் ஒருவர் ஒழுங்குசெய்தபடி பருத்தித் துறைக்கு அருகில் உள்ள ஒருகிராமத்தில் இருக்கின்ற ஒரு பாட்டியிடம் அழுகைக்கு மத்தியில் வலுக்கட்டாயமாக ஈஸ்வரியை அழைத்துச் சென்றார். இது ஊசி போடுகிற விஷயமல்ல. வேறுவிதமாகக் கர்ப்பங்கலைக்கின்ற சமாச்சாரம். கிழவிக்கு இது ஒரு குடிசைக்கைத்தொழில் மாதிரி.

கிழவி சொன்னாள்

"தம்பி... இப்ப மூண்டுமாசம் கடந்திட்டுது. சிசு வளர்ச்சியடைஞ்சிட்டுது. சில சமயம் தாய்க்கும் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். அதாலை எனக்கும் ஆபத்து வரும். இந்த எண்ணத்தை இனி கைவிடுகிறதுதான் நல்லது. பிள்ளை பிறந்து அது பெம்பிளைப்பிள்ளை யெண்டால் உங்களுக்கு வேண்டாட்டி என்னட்டைக் கொண்டுவந்து இரகசியமாத் தாருங்கோ. நான் பிள்ளையில்லாத ஆருக்கும் குடுக்குறன்".

மனைவியின் உயிருக்கு ஆபத்தாய்ப் போய் விடலாம் என்ற அபிப்பிராயம் மாஸ்ரருக்குப் பயத்தை ஏற்படுத்திவிட்டது. பிறந்ததும் அது

பெண்பிள்ளையென்றால் அது விருப்ப மில்லையென்றால் பிள்ளையில்லாத யாருக்கா வது வாங்கிக்குடுக்கிறன் என்று சொல்லப் பட்டது மாஸ்ரருக்கு ஆத்திரத்தையும் தன்மானத்தையும் ஏற்படுத்திவிட்டது. "இது என்ரை இரத்தத்தின் இரத்தம் அதைப் பெத்து வளர்க்கிறதுதான்" என்ற முடிவுக்கு வந்து விட்டார். அதன்பிறகுதான் மனைவியின் முகத்தில் ஒரு மலர்ச்சி தோன்றியதையும் மாஸ்ரர் அவதானித்தார்.

ஆணோ பெண்ணோ... பெத்து வளர்க்கிறது தான் என்ற முடிவுக்கு வந்தபின்னர் மாஸ்ரரும் சந்தோஷமாகத்தான் இருந்தார்.

ஐந்தாவதும் பெண்ணாகப் பிறந்தது. ஊரே அனுதாபப்பட்டது. ஆனால் இவர்கள் அந்த அனுதாபத்தை ஏற்கவில்லை. எங்களுக்கு என்ன குறை என்ற மாதிரியே பிள்ளைகளை வளர்த்தார்கள். ஐந்தும் எங்களுடைய செல் வங்கள் என்று கூறிக்கூறிச் செல்லம் பொழிந்து வளர்த்தார்கள்.

பத்து வருஷ கால எல்லைக்குள்ளேயே மாஸ்ரருக்கு ஐந்தும் பிறந்துவிட்டன. மாஸ்ர ருக்கு நாற்பது வயது. ஈஸ்வரிக்கு முப்பத்தாறு. இப்போது ஈஸ்வரிக்கு உயர் இரத்த அழுத்தம். இடையிடையே நெஞ்சு முட்டு.

நிரந்தரமாகக் கர்ப்பத்தடை செய்வதுபற்றி யோசித்தார் மாஸ்ரர். அதை மனைவிக்குச் செய்வதைவிட தனக்குச் செய்வதுபற்றி ஆலோ சித்தார். இதன்மூலம் தனது ஆண்மைச் சக்திக்கு எதுவித பாதிப்பும் இல்லை என்ப தையும் உறுதிப்படுத்திக்கொண்டார். மனை வியை வைத்தியத் தேவைக்காக கொழும்புக்கு அழைத்துச் சென்ற சமயம் "வாசக்டமி" என்ற இந்தக்கர்ப்பத்தடை முறையைச் செய்து கொண்டார்.

ஐந்து பெட்டைக் குஞ்சுகளும் சிறுசுகளாக இருக்கும் போது ஒரு நாள் வல்லிபுரக்கோவில் கடல் தீர்த்தத்திருவிழா. பக்தர் கூட்டம் கோயிலிருந்து கடற்கரையை நோக்கி அலை மோதிக்கொண்டு சென்றது. மாஸ்ரரும் குடும் பமாக கடைக்குட்டியை தோளிலும் நாலா வதை கையில் பிடித்துக்கொண்டும் மற்ற மூன்று பேரும் சனக்கூட்டத்திற்குள் கலந்து காணாமல் போய்விடக்கூடாது. என்ற கவனத் துடன் தன்னுடன் நெருக்கமாக அணைத்துக் கொண்டு மனைவி பின்தொடரப் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு இளைஞர் குழாம் இவர் களைக் கடந்து வேகமாகச்சென்று கொண் டிருந்தது. அவர்களில் ஒருவன் இவர்களைக் கவனித்தான்.

"அங்கபாருங்கோடா..... அந்த அண்ணை படுகிற கரைச்சலை.... உங்களுக்கும் இது தேவையோ...."

கூறிக்கொண்டு சென்றான். அந்தப் பையன் கூறியதில் தொனித்தது பரிதாபமா? பரிகாசமா? என்று மாஸ்ரரால் பிரித்துப்பார்க்க முடிய வில்லை.

கொஞ்சம் வளர்ந்ததும் மூத்தவளும் இரண்டாவதும் அப்பாவை நக்கல் அடிக்க வேண்டிய தருணங்களிலும் இதைத்தான் சொல்லிக்காட்டிச் சிரிப்பார்கள். அப்பா தங்களில் வைத்திருந்த அக்கறையையும் பாசத் தையும் பெருமைப்படுத்திக் கதைக்கும் போதும் இதைத்தான் சொல்லிக்காட்டு வார்கள்.

இப்போது கடைக்குட்டி அர்ச்சனாவுக்குப் பன்னிரண்டு வயதாகிறது. தமக்கைமார் நால்வருக்கும் செல்லக்குட்டிதான். ஆனால் தகப்பனுக்குச் செல்லமோ செல்லம். ஒரு சின்னப்பிரச்சினைக்குக் கூட அவளைச் சினக்க அனுமதிக்கமாட்டார்.

"தங்கைச்சி எங்களுக்கு என்ன பிழை செய்தாலும் அப்பா எங்களிலைதான் பிழை பிடிப்பார்"

இது அவர்களுடைய செல்லமான குற்றச் சாட்டு. இப்போதும் தாய் அல்லது தகப்பன் கதிரையில் உட்கார்ந்துவிட்டால் அருகில் கதி ரைகள் வெறுமனே இருந்தாலும் அர்ச்சனா ஓடிப்போய் அவர்களின் மடியில் தான் உட்காருவாள்.

மாஸ்ரருக்கு இப்போது மூத்தவள் பேராத னைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் முதலாம் வருடம் கற்கிறாள். இரண்டாவது பொறியியல் கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப் பட்டு அழைப்புக்காகக் காத்திருக்கிறாள். மூன்றாவது O/L இல் ஒன்பது பாடங் களிலும் A எடுத்து A/L விஞ்ஞானப் பிரிவுக்குச் சேர்ந்திருக்கிறாள். நான்காவதும் ஐந்தாவதும் தங்கள் தங்கள் வகுப்பில் முன்னுக்கு நிற்கிறார்கள்.

இது இப்படியிருக்க ஒருநாள் தாயும் தகப்பனும் அர்ச்சனாவுடன் அன்பைப் பொழிந்து பேசிக்கொண்டிருக்க யாரும் எதிர்

பார்க்கா வண்ணம் அர்ச்சனா ஒரு கேள்வியைக் கேட்டாள்.

"இப்ப இப்பிடி என்னோடை நடிக்காதையுங்கோ. வயிற்றிலை வைச்சே என்னைக் கொல்லப் பார்த்தனிங்கள்தானே நீங்கள் இரண்டு பேரும்....?"

திடீரென அர்ச்சனா போட்ட இந்த வெடிகுண்டினால் மாஸ்ரரும் மனைவியும் அதிர்ந்து போய் நின்றார்கள்.

"ஆரம்மா இப்பிடி ஒரு நச்சு விதையை உன்ரை மனசிலை விதைச்சது...?"

தன்னைச் சுதாகரித்துக்கொண்டு மாஸ்ரர் கேட்டார். ஆனால் அர்ச்சனா பதில் சொல்ல மறுத்துவிட்டாள்.

ஏதோ ஒரு விதத்தில் தங்கள் குடும்பத்தில் உள்ள யாருக்கோ அந்தநேரம் தெரியவந்து பின்னர் அவர்களுடைய பிள்ளைகளில் யாராவது அர்ச்சனாவின் வயதில் உள்ள ஒருவருக்குத் தெரியவந்து அர்ச்சனாவுக்குத் தெரிய வந்திருக்க வேண்டும் என்று மாஸ்ரர் ஊகித்துக் கொண்டார். அதன்பின் அர்ச்சனாவுக்குப் பலவிதமான நியாயங்களையும் சமாதானங்களையும் கூறிச் சமாளித்துக் கொண்டார்கள்.

இன்று அர்ச்சனா ரியூசனுக்குப் போக மறுத்ததும் இப்படியான நேரங்களிலெல்லாம் தகப்பன் அவளைக் கண்டிக்காமல் செல்லம் கொடுத்துக் கெடுத்துக்கொண்டிருக்கிறார் என்ற குற்றச் சாட்டை ஈஸ்வரி வழமை போலவே முன்வைக்க மாஸ்ரரும் விட்டுக் கொடுக்காமல் ஈஸ்வரியோடு வாக்குவாதம் பண்ணினார்.

அர்ச்சனா படுக்கைவிட்டு எழும்பி வந்து தகப்பனின் மடியில் உட்கார்ந்தாள். ஈஸ்வரி கொஞ்சங்கூடக் கோபப்படாமல் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"இஞ்சாருங்கோ பன்னிரண்டு வருஷத்துக்கு முந்தின ஒரு உண்மையை இண்டைக்கு நான் உங்களுக்குச் சொல்லப்போறன். இனிச் சொல்லுறதாலை ஒரு பிரச்சனையும் வராது. ஆனால் உங்களுக்குத் துரோகம் செய்து போட்டன் எண்டு மனதிலை வைச்சு அறுக்க மாட்டியள் எண்டு சத்தியம் செய்தால்தான் உண்மையைச் சொல்லுவன்"

"சரியடியப்பா... நான் உன்னை அப்பிடியெல்லாம் நினைப்பனே.... நீ சொல்லு"

"அர்ச்சனா வயிற்றிலை உண்டாகியிருக்கேக்கை இரண்டரை மாதத்திற்குள்ள அபோஷனுக்காக மூண்டு டொக்டர்மாரிட்டை என்னைக் கூட்டிக்கொண்டு போனனிங்களல்லே...?'

"ஓமோம்.... இப்ப அது பிள்ளைக்கும் தெரிஞ்ச விஷயமாகிப்போச்சுதுதானே. இப்ப அதுக்கென்ன...?"

"மூண்டு டொக்டர்மாரும் ஊசிபோட ஆயத்தப்படுத்துகிற சமயத்திலை "இந்தநேரம் நீங்கள் உள்ளே இருக்க எனக்கு ஒரு மாதிரிக்கிடக்கு. நீங்கள் வெளியிலை போய் இருங்கோ" எண்டு சொல்லி மூண்டு தடவையும் உங்களை வெளியே அனுப்பினனான் அல்லோ.... ஞாபகமிருக்கே....?"

"ஓ.. ஓ... இப்ப ஞாபகம் வருகுது"

"உண்மையிலை கர்ப்பம் அழிக்கிறதுக்கு ஊசிபோட நான் விடேல்லை. "டொக்டர் உங்களைக் கும்பிட்டுக்கேட்கிறன். இந்த ஊசியை எனக்குப் போடவேண்டாம். நான் இந்தப் பிள்ளையைப் பெத்து வளர்க்கிறதுக்குத்தான் விரும்புறன். எனக்கு ஊசி போட்டது மாதிரித்தான் என்ரை அவரிட்டை நடிக்க வேணும்" எண்டு கெஞ்சிக்கேட்டனான். அவையளும் சந்தோஷமாகத்தான் சம்மதிச்சவை. அவையளிலை ஒரு டொக்டர் இப்ப உயிரோடை இல்லை. மற்ற இரண்டு பேரும் பருத்தித்துறையிலும் நெல்லியடியிலும் இப்பவும் இருக்கினம்தானே. சந்தேகமிருந்தால் போய்க் கேட்டுப்பாருங்கோ..."

மாஸ்ரருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

"அடிக்கள்ளி... நல்ல பூனைமாதிரி இருந்து கொண்டு இப்பிடிக் காரியஞ் சாதிச்சிருக்கிறாய். அதை இவ்வளவு நாளும் மறைச்சும் வைச்சிருந்திருக்கிறாய்."

கூறிக்கொண்டே மனைவியின் காதைச் செல்லமாகத் திருகினார்.

அப்பாவின் மடியிலிருந்தபடியே தீராத ஒரு வாஞ்சையுடன் புன்னகை தவழ பார்வையாலே தாயை ஸ்பரிஷித்தாள் அர்ச்சனா.

# அம்மா

நான் கதறும் சத்தம் கேட்க வில்லையா
என் தனிமையின் வேதனை புரியவில்லையா
எழுந்து வா!
அம்மா!!

சுட்டெரிக்கும் வெயிலைக் கூட
பொருட்படுத்தாமல் நீ
பறித்துக் கொடுத்த கள்ளிப்பழத்தில்
இன்னும் வீசுதம்மா பால் வாசம்.!

உன் கன்னக்குழியில்
என் சிவந்த உதட்டால் புன்னகையுடன்
முத்தமிட்ட
வடுக்கள் கூட இன்னும் இருக்கு

நாள் முழுதும் களைவெட்டி
நாற்றுநட்டு சிறுக சிறுக
சேர்த்த சில்லரைகளுக்கு
புத்தாடை வாங்கி தருவாய்
உன் முந்தானை கிழிசலை முடிச்சுக்கிட்டு.!

நாட்கள் கடந்து கல்லூரி விடுமுறைக்கு
வரும் எனக்கு அறுசுவை விருந்தளித்து
மகிழ்வாய்

தாலியை அடகு வச்சி கொடுத்த காசெல்லாம்
கண்ணீரா போகுதம்மா

கிழிந்த கம்பளத்தில் படுத்துக் கொண்டு
பறக்கும் கம்பளத்தை பற்றிய கதை
சொன்னாயே

உன் ஆசை முகம் காண
காஞ்சிபுரம் பட்டு வாங்கி
கண் நிறைய நீர் சுமந்து
ஓடோடி வருகிறேன்
எழுந்து வா அம்மா
உன் மெல்லிய குரலில்
ஆராரிரோ பாடு
உன் சூட்டு கதகதப்பில்
என்னை அணைத்து கொள்
இல்லை, நீ இருக்கும் இடத்திற்கே
என்னை அழைத்துக் கொள்

பறக்கும் கம்பள கதைகள்
நிறைவேறிடிச்சு
அம்மா

கை நிறைய காசு இருக்கு
வாய் நிறைய சிரிப்பு இருக்கு
மனசு நிறைய நீ இருக்க
பால் வாசமட்டுமில்லை
அம்மா

ஒருமுறை கண் திறந்து பாரம்மா
ஊர் மெச்சும் உம் பிள்ளையை
ஓடோடி வருகிறேன்
ஒட்டு துணி வாங்க
பத்து பாத்திரம்
நீ தேச்ச காலம் போச்சு
வண்ண சிங்கார பட்டு வாங்க
காலமெல்லாம் கை கூடிடிச்சு

கோடி துணி உடுத்தி
ஊர் வாய் பிளக்க
ஆயிரம் பறை முழங்க
ஆறடி தேராய் அசைப் போட்டு
போரியம்மா
கடைசியில எம்முகத்த பார்க்காம

இன்னும் நினைவிருக்கு
நான் தூங்க ஊஞ்சல் கட்டிய
ஊதாப்பூ போட்ட வெள்ளை சீலையும்
ஆராரிரோ பாட்டும்

நான் கத்தும் சத்தம்
உன் செவி வந்து சேரலையோ
நான் செய்த துரோகம் தான் என்னவோ
வந்திடு அம்மா

எழுந்து வா!
எழுந்து வா.!
அம்மா..!!

மகிழ்ச்சி ஆ.ராம்குமார்



நீ எல்லாம் என்ன படிச்சு பெரிய கலெக்டர் ஆவுலாம்னு நெனப்போ. கடவுள் முடிவு பன்னி வச்சிருக்கா யார் யார் என்ன வேலை செய்யனும்னு"

# லாண்டரிக் கடை

மகிழ்ச்சி ஆ.ராம்குமார்

**எ**த்தனை நாட்களுக்கு தான் இந்த கழுதையோடு வாழ்க்கையை நகர்த்தப் போகிறோம் என்று மன குமுறலுடன் ,சதீஷ் தனது வாழ்க்கையை நகர்த்தினான். மாடு கூட தனது உணவை வாயின் பக்கவாட்டில் வைத்துக் கொண்டு ரசித்து, ருசித்து மென்று அசைப்போட்டு உண்ணுகிறது. ஆனால் எனக்கு வாழ்க்கை என்பது அப்படி அல்ல. அது முற்றில் மாறுபட்டதாகவே இருக்கிறது.

சதீஷ் பன்னிரண்டாவது படிக்கும் போது தான் அவனுடைய அப்பா முருகன் இறந்து போனார். .அம்மா உடம்பு முடியாதவள். சாப்பாட்டுக்கு என்ன செய்வதென்று தெரியாத பட்சத்தில் தான் அவனும் அவன் அப்பா செய்த தொழிலை செய்ய தொடங்கினான். என்ன தான் பன்னிரண்டாவது வரை படித்திருந்தாலும் அவன் வண்ணான் மகன் தான் என்று முத்திரை குத்தப் பட்டுள்ளது.

அவனைப் பார்த்து, பட்டு "நீ எல்லாம் என்ன படிச்சு பெரிய கலெக்டர் ஆவுலாம்னு நெனப்போ. கடவுள் முடிவு பண்ணி வச்சிருக்கா யார் யார் என்ன வேலை செய்யனும்னு" என்று அடிக்கடி சொல்லி மனதை வார்த்தைகளால் நொருக்கி விடுவாள். பட்டு கிழவி பண்ணையாருடைய அம்மா. அவள் சொல்வது தான் ஊரின் வேத வாக்கும் கூட.

வாய் நிறைய வெற்றிலை பாக்கும், கூழாங் கல் போல் மின்னிக் கொண்டு காதின் ஓரத்தில் தொங்கும் தந்தட்டி, பட்டுசீலை உடுத்திக் கொண்டு தெருவில் நடக்கும் எல்லோரையும் பார்த்து ஏதாவது வேலை சொல்வது தான் பட்டு கிழவியின் வேலை.

காலையில் எழுந்து கூரை வேய்ந்த வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்தான். அம்மா, "இன்னையோட மாத்திர மருந்து தீந்து போய்டும். சாயங்காலம் வரும் போது பண்ணையார் வீட்ட காசு ஏதாவது வாங்கிகிட்டு வாப்பா. மருந்து வாங்கனும்" என்று இருமலை புதை மண் போல் தனக்குள் அடக்கி கொண்டாள்.

அவன் அம்மா, பழைய சோற்றில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி சின்ன வெங்காயத்தை அதன் உள்ளே போட்டு தூக்குச் சட்டியை கொடுத்து விட்டாள். பங்குனி, சித்திரை மாத வெயிலுக்கு சின்ன வெங்காயமும் சோளச் சோற்று கஞ்சியும் தான் உடம்புக்கு குளிர்ச்சியை தரும். அதை விட ஒரு அமிர்தத்தை யாரும் கண்டுபிடிக்கவில்லை. அதை வாங்கி

கழுதை மேல் இருந்த துணி மூட்டையின் ஓரத்தில் முடிச்சுப்போட்டு கட்டினான்.

ஏரிக்கு பழைய துணியுடன் காலையில் சென்றால் மாலையில் துணியெல்லாம் காய்ந்த பிறகு தான் வீடு திரும்ப முடியும். அவனுடைய அப்பா, சதீஷை நன்கு படிக்க வைக்க வேண்டும். அவனை பெரிய ஜவுளிக் கடை ஓனராக்க வேண்டும் என்பது தான் ஆசை. எவ்வளவு நாள் தான் துணியை வெளுப்பதிலே காலத்தை போக்குவது.

ஒவ்வொரு முறையும் பண்டிகையின் போது பெரிய தெருவில் இருந்து அவர்கள் ஏற்கனவே பயன்படுத்திய துணியை முருகன் வீட்டிற்கு கொடுத்து அனுப்புவார்கள். அதை வாங்கும் போதெல்லாம் முருகன் நினைப்பான். எவ்வளவு நாட்களுக்கு தான் "இவனுங்க கொடுக்குர துணிய வாங்கி போட்ரது. நாம கொடுத்து அவனுங்க போடனும்" என்று யோசிப்பார்.

அதனால் என்னவோ சதீஷை ஒரு ஜவுளிக் கடை ஓனராக்கி பார்க்க வேண்டும் என்று நினைத்தார்.

கழுதையை ஓட்டிக்கொண்டே பெரிய தெரு பக்கம் நடக்க ஆரம்பித்தான். அதற்கு முன்பு இரண்டு மூன்று முறை தான் பெரிய தெருவிற்கு வந்திருக்கிறான். அதவும் அவனுடைய அப்பாவிற்கு ஒரு நாள் உடம்பு சரியில்லாத போது பண்ணையார் வீட்டு துணியை வாங்குவதற்கு வந்திருந்தான். பண்ணையார் வீட்டிற்குள் இரண்டு வீடு தள்ளி தான் கண்மணி வீடு. கண்மணியும் அவனும் ஒரே வகுப்பில் ஒன்றாக படித்து கொண்டிருந்தாள். அவள் ஆரஞ்சு தோல் நிறமும் அல்லாமல் ஆரஞ்சு சுளை நிறமும் அல்லாமல் ஒரு நிறத்தில் இருந்தாள். அவளுக்கு மட்டும் கடவுள் தனியாக மெனக்கிட்டு உருவாக்கியது போல் இருக்கும். அவளை பார்ப்பதற்காகவே அன்று சென்றிருந்தான்.

அவள், பள்ளிக்கூடத்தில் வாத்தியார் பாடம் நடத்தும் போது வாத்தியாரை கவனிப்பதைக் காட்டிலும் அவனை மட்டும் தான் கவனிப்பாள். அடிக்கடி அவனுக்கு ஒரு சந்தேகம் வரும். கருப்பா இருக்குர நம்மை உண்மையில் தான் அவள் காதலிக்கிறாளா? என்று.

காதலுக்கு தான் நிறம் கிடையாதே. நிச்சயமாக அவள் அவனை காதலிக்கிறாள் என்பதை, நெஞ்சை துளைக்கும் தோட்டாவினைப் போல, பார்வையால் துளைக்கும் அவள் கண்களில் தெரிந்தது.

அப்பாவின் இறப்பிற்கு பிறகு பள்ளிக்கு போகாததால் அவள் மனம் நொந்து, கண்ணீர் கொண்டு போக்கினாள். அவளுடைய ஆற்றமையை.

அதற்குப் பிறகு இப்போது தான் செல்கிறான். பெரிய தெருவின் உள்ளே நுழையும் போதெல்லாம் தன்னுள் ஏதோ ஒரு மிருகம் உருவாவதைப் போல் தோன்றியது.

முத்து பண்ணையார் வீடு அடையும் முன், வரும் வழியில் உள்ள வீட்டில் துணிகளை வாங்கி வர, கொஞ்சம் நேரமாகி விட்டது. பட்டு கிழவி தன் குரலை அடிவயிற்றில் இருந்து எடுத்து "தொரைக்கு இப்ப தா நேர கொடைச்சுதோ. வர வர வண்ணா பயலுக்கு கூட மவுசு அதிக மாயிடிச்சு" என்றாள். பண்ணையார் வீட்டு துணிகளை வாங்கி கொண்டு போகும் முன், அம்மாவுக்கு உடம்பு சரியில்ல, அப்பா இருக்கும் போது முன்னாடி துணி வெளத்த காசு தரனு சொன்னாங்க. கொடுத்திங்கனா மருந்து வாங்கிட்டு போவ என்று சொன்னான். சரி, சாயங்காலம் வா தரனு சொன்னாள் பட்டு கிழவி.

நான்கு அடி தள்ளி நடந்து போகும் போது ரத்தம் கசிந்து, சிவந்த மண்கள் தென்பட்டன். அந்த ரத்தம் இன்னும் சூடாக தான் இருக்கிறது.

அது யாருடைய ரத்தம்னு தெரியுமா, எங்க அப்பாவுடைய ரத்தம்.• முத்து பண்ணையாருடைய கல்யாணத்தில் எடுத்த, அவருடைய பட்டு சட்டையை வெளுக்கும் போது கிழிந்ததாள். வாழை மட்டையை உரித்து அடித்து, கால்களினால் எட்டி உதைக்கும் போது, உயிர் நாடியில் (பிறப்புறுப்பில்) அடிப்பட்டு உயிரிழந்தார். அவருடைய இறப்பு, எங்க குடும்பத்தின் ஒட்டு மொத்த கனவையும் சிதைத்து போட்டது . ஆனால் அந்த இறப்பு அவர்களின் மனதை சிறிது உமி அளவு கூட வருத்தம் அளிக்கவில்லை. இறப்பு எனக்கு மட்டும் தானே என்று நினைத்து கதறி அழுதான். கண்மணி வீட்டை கடக்கும் போது, அவள் ஜன்னல் வழியாக எட்டி பார்த்தாள். அவன் முகம் அவளை நோக்கி திரும்பவே இல்லை.

மெல்ல ஏரிக்கரையை அடைந்தான். கழுதையை கட்டி விட்டு துணிகளை எடுத்து தண்ணீரில் நனைத்து வெளுக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு துணியாக வெளுத்தான். சமதளம் கொண்ட பாறையில் அடித்து வெளுத்தான்.

வேகம் அதிகரித்து துணியை அடித்து நார் நாராக பிய்த்து எறிந்தான். அவன் நினைத்து பார்க்கவேயில்லை. அந்த வேகத்தை, மதியம் சாப்பிட்டு விட்டு காய வைத்து துணிகளை சுருட்டி எடுத்து கொண்டு பெரிய தெருவை அடைந்தான்.

ஒவ்வொரு வீட்டில் துணியை கொடுத்து விட்டு, முத்து பண்ணையார் வீட்டை அடைந் தான். எதுவும் பேசாமல் நின்றான். கிழவி துணிய கொண்டாடா என்று கேட்டாள். அவன் அசைவதாக தெரியவில்லை. ஏதோ ஒரு மிருகம் அவனை திசை மாற்றிக் கொண் டிருக்கிறது. கிழவி, ஓ! காசு கேட்டல்ல என்று சொல்லி விட்டு பழைய பாக்கியை கொடுத்தாள். துணி எங்கடா என்று கேட்டாள். கிழிந்த சட்டையையும் வேட்டியையும் எடுத்து கொடுத்தான். அதை பார்த்த கிழவி "துணி வெளுக்குர நாயிக்கு கொழுப்ப பாத்தியா, என்று திட்டி விட்டு முத்து பண்ணையாரை அழைத்தாள். அவர் அதை பார்த்தவுடன் கோபப்பட்டு, தனது இடுப்பில் இருந்த தோல் பெல்ட்டை அவிழ்த்து அடிக்க ஆரம்பித்தார். அவனுக்குள் இருந்த மிருகம் சீரிட்டு எழுந்தது. பண்ணையாரின் கையில் இருந்த பெல்ட் இடம் மாறியது. பண்ணையாரை அடித்து நார் நாராக பிய்த்து எரிந்தான். புயல் அடித்து ஓய்ந்தது போல் ஊரே அமைதி நிலவியது. அந்த மிருகம் கொஞ்சம் கொஞ்சமாக சாந்தமானது.

மிருகத்தின் சத்தம் குறைந்ததும் ஊரே கொந்தளித்தது. அன்று இரவே சதீசும், அவ னது அம்மாவும் ஊரைவிட்டுப் போய் விட்டார்கள்.

அடித்த அடியில், முத்து பண்ணையார் தற் போது பேச்சற்று நடைப்பிணமானார்.

அவர்கள் இந்த ஊரை விட்டு போய் பத்தாண்டுகள் முடிந்து விட்டது. இன்றும் அவர்களை நினைத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். காதில் இருந்து தோள்ப் பட்டை வரை தொங்கிய தந்தட்டி ஓய்வு பெற்றது.

"இந்தாடா சோலை எங்கடா போர, லாண் டரிக்கு துணி வாங்க போர என்று சோலை சொல்லிவிட்டு "இருந்த வண்ணா குடும்பத்த ஊரவுட்டே தொரத்திட்டிங்க இப்ப என்ன பண்ணுரது நாம தா அலையரதா இருக்கு"

என்று புலம்பிக் கொண்டே முத்து பண் ணையாருடைய மகன் ரகுவின் பட்டு லாண்டரிக் கடையை நோக்கி சென்றான் அழுக்கு துணியுடன்.

## கர்ம யோகம்

கண்முன் காணும் உலகத்தைக் காய்தல் உவத்தல் இன்றிச் சித்தரிப்பது மட்டுமல்ல. உலகினை மாற்றி உன்னதமாகிய உறைவிடமாக்க உதவுவதும் உயரிய இலக்கியங்களின் ஓர் பணியாகும். அதுவும் ஒருவிதமான இலட்சியவாதந்தான். ஆனால் கற்பனையில் மட்டும் இன்பம் காணாது. கனவை நனவாக்கும் வீறாந்த கர்ம யோகத்தின் பாற்பட்டது. அறத்தை நிலைநாட்டும் அருஞ் செயலின் பாற்பட்டது.

க. கைலாசபதி

# நுகர்வுப் பொருளாதாரச் சிந்தனை

## கூந்தல் அழகியும்

## பொய் பேசாத சிகையலங்கார நிபுணரும்

சிவசேகரம்



சிகையலங்கார நிலையத்துள் நுழைந்த கூந்தலழகியை அமருமாறு வேண்டிய வரவேற்பாளர் அவளிடம் என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டார்.
"எனக்குத் தெரியாது அதனாலேயே இங்கு வந்தேன்" என்றாள் அழகி.
"கொஞ்சம் பொறுங்கள் எங்கள் நிபுணரை அழைக்கிறேன்" என்றார் வரவேற்பாளர்.

*****

நிபுணர்: வணக்கம் அம்மணி
உங்களுக்காக என்ன செய்யலாம்?
அழகி: கூந்தலுக்கேதேன் செய்யவேண்டும்
நிபுணர்: அம்மணியுடைய எதிர்பார்ப்பென்ன?
அழகி: நிச்சயமில்லை என்ற போதும்
எதையோ செய்ய வேண்டுவதறிவேன்;
நிபுணர்: குறிப்பாய் எதுவும்?
அழகி: எதுவும் இல்லை
நிபுணர்: அப்படியானால்?
அழகி: உங்களால் என்ன செய்ய இயலும்?
நிபுணர்: முதலில் ஒன்று சொல்லவேண்டும்
அழகி: ஒன்றும் வேண்டாம்-
என்ன இயலும் எனபதைச் சொல்லும்
நிபுணர்: சொல்கிறேன்-
கூந்தலை வேண்டிய நீளங் குறைக்கலாம்
குறைந்த கூந்தலின் அளவைப் பெருக்கலாம்
நேரிய கூந்தலைச் நெளியாய்ச் சுருட்டலாம்
நெளிந்த கூந்தலை நேராய் மாற்றலாம்
வலம்புரியாகச் சுருண்ட கற்றையை
இடம்புரியாக மாற்றி வைக்கலாம்
இடம்புரியானதை வலம்புரியாக்கலாம்
கூந்தலை முழுதையோ அதிலோர் பங்கையோ
வேண்டிய மட்டில் வெளிறுவிக்கலாம்
ஆடைக்கமையவும் பருவங் கருதியும்
தனியொரு நிறத்திலோ பல நிறங்களிலோ
பட்டை பட்டையாகச் சாயம் பூசலாம்
பின்னி முறுக்கி அள்ளி முடிக்கலாம்
திவலை தூறிக் கல்லாய் மாற்றலாம்



பரட்டையான தோற்றம் தரலாம்
ஈரமாகக் காட்சிப் படுத்தலாம்
தலையின் வேண்டிய பரப்பைச் சிரைக்கலாம்
சிரைத்த பகுதியிற் சித்திரங் கீறலாம்
சித்திரத்துக்கு வண்ணந் தீட்டலாம்
விரும்பிய மொழியிற் பெயரைப் பொறிக்கலாம்
நீண்ட கட்டுரை ஒன்று வரையலாம்
பொய் மயிர்த் தோகை வேண்டின் வைக்கலாம்
இன்னும் என்ன என்னவுஞ் செய்யலாம்
சொல்லப் போனால்
நிறைவேற்றாற்றல் உள்ளவரான
சனாதிபதியார் செய்ய வல்லதின்;
மேலாய்ப் பலதும் செய்திட வல்லோம்
விரும்பிய பணியைச் சொல்லின் அதற்கு
உரிய விலையைச் சொல்வதன் முன்னம்
ஒன்று சொல்ல அனுமதியுங்கள்

அழகி: விரைவாய்ச் சொல்லும்

நிபுணர்: உங்கள் கூந்தல் அழகின் மிக்கது
அது போல் வாய்த்தல் எவர்க்கும் அரிது
உங்கள் கூந்தலின்
நீளம் நெளிவு நிறம் என எதையும்
மாற்ற எனக்கு மனம் வரல்லை
உள்ளபடியே விடுவது சிறப்பு

அழகி: சொல்வது சரியென அறிவேனாயினும்
சிகையலங்கார நிலையஞ் செல்லா
மாதரின் கூந்தலை மதிப்பவர் இல்லை
வந்து போனதன் சான்றாயேனும்
எனக்காய் ஏதேன்; செய்ய இயலுமா?

நிபுணர்: வாரம் ஒருமுறை வந்து போகலாம்
பரப்பிக் கிடக்கும் ஏடுகள் பார்க்கலாம்
விரும்பிய பானம் வாங்கிப் பருகலாம்
வந்தவரோடு கதைகள் பேசலாம்
என் ஆலோசனைப் பணிகட்காக
வேண்டுந் தொகைக்குக் காசு செலுத்திப்
பற்றுச்சீட்டைப் பெற்றுச்சென்று
பிறரிடங் காட்டிப் பெருமை கொள்ளலாம்.

**எலிசா ஆர் மூன் கோப்ரா கிங் ஆகியோர் அமர்ந்திருந்த இடத்தை சோதனை செய்தாள். போதை பொருட்களோ, துப்பாக்கியோ அல்லது வெடிப் பொருட்களோ எதையாவது பதுக்கி வைத்து விட்டு எலிசாவை காவல் நிலையத்தில் சிக்க வைக்க இவர்கள் அஞ்ச மாட்டார்கள்.**

# புரட்சிகர மனைவியின் வாக்கு மூலம்



**சை.கிங்ஸ்லி கோமஸ்**

வெண் பனியால் மூடப்பட்ட அழகிய பர்லின் நகரம் ஜெர்மனியர்களின் சுவர்க்க புரி. அழகியதும் பழமையானதுமான கட்டி டங்கள் இந்த அழகிய கட்டிடங்களுக்குள்ளும் எத்தனை ஆயிரம் வேதனைகள், கவலைகள், பிரிவுகள் எலிசபத் ஏசு பிள்ளையின் வாழ்க் கையிலும் தீர்க்கமான ஒரு நாள் இந்த நாள்.

சட்டத்தரணி கிங்தோர் என்னும் கருப்பு இன கணவனின் மனைவியான இலங்கைத் தமிழ்ப் பெண் திருமதி எலிசபெத் கிங்தோர் இன்றில் இருந்து வெறுமனே எலிசபெத் ஆக மாறப்போகும் நாள். அழகிய அந்த மிகப் பெரிய நீதிமன்றக் கட்டடத்திற்கு எதிரே இருக்கும் விடுதியில் வைத்துதான் எலிசபெத் என்னும் எலிசாவினதும் கிங்தோரினதும் பதிவுத் திருமணம் 09 வருடங்களுக்கு முன் நடந்தது. இன்று அந்த காகித சடங்கு விவாகரத்து என்னும் பெயரில் விடுதலை இசையாக இசைக்கப்படப் போகின்றது.

எலிசாவின் வாக்குமூலம் வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த வாக்கு மூலம் என்று சில இளம் சட்டத்தரணிகள் பேசிக்கொண்டதும் எலிசாவினதும், கிங்தோரினதும் காதுகளில் கேட்டுக் கொண்டே இருந்தது.

எலிசா கிங்தோர் ஆகிய இருவரும் மிகவும் பிரபலமான சட்டத்தரணிகள். எனவே தான் இவர்களது விவாகரத்து வழக்கு பலராலும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது.

கிஸ்தோரின் சார்பாக வழக்காடும் சட்டத் தரணி கப்ரியெல் குளோஸ் கேட்ட கேள்வி கள் எலிசாவை தர்ம சங்கடத்திற்கு ஆளாக் கியது. இத்தனை காலங்கள் கூண்டுக்குள் இருக்கும் மற்றோரை கேள்வி கேட்டு தனது வாத பிரதிவாதங்களால் துளைத்து எடுத்த தனக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலை சற்று சங்கடத்தை தந்துள்ளதனை உணர்ந்த எலிசா தனது முற்போக்கான கோட்பாடுகளின் திடத்தில் தன்னை சுதாகரித்துக் கொண்டாள்.

சட்டத்தரணி கப்ரியெல்:—

எலிசா என்னும் திருமதி எலிசபத் கிங்தோர் அவர்களே உங்கள் கணவரான

பெர்டினன்ட் கிங்தோர் அவர்களுக்கு எதிராக நீங்கள் வைத்திருக்கும் குற்றச்சாட்டு மிகவும் விசித்திரமானது. ஏனெனில் கிங்தோர் ஒரு சிறந்த சட்டத்தரணி. பாராளுமன்ற உறுப்பினர் ஜெர்மனியின் முதலாளித்துவ கட்சியின் முக்கிய உறுப்பினர். சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர். அவர் ஒரு மக்கள் துரோகி என்று தாங்கள் தாக்கல் செய்து உள்ள விவாகரத்து வழக்கு மிகவும் விசித்திரமானது, விவாகரத்திற்குதான் உடன் பாடில்லை எனவும் தங்களுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் வாழவே கிங்தோர் விரும் புவதாகவும் கூறுகின்றார். தாங்கள் விவாகரத் துதான் முடிவு என்று கூறுகின்றீர்கள். இது தொடர்பான உங்களின் வாக்குமூலத்தினை இன்னும் தெளிவாக வழங்க வேண்டியது உங்கள் கடமையாகும்.

எலிசபத் என்னும் எலிசா :—

சற்று நிதானித்து சிறு புன்முறுவலுடன் சட்டத்தரணியை நோக்கி பதில் கூறுகின்றாள், கிங்தோர் ஒரு சமூகத் துரோகி. சமூகத் துரோகி ஒருவனின் மனைவி என்னும் பெயருடன் வாழ்வது உடலை விற்று தொழில் செய்வதற்கு சமமாகும். எனவேதான் விவா கரத்து கேட்கின்றேன். அந்த நீதி மன்றமே சற்று சலசலத்து அமைதியானது. இதை கேட்ட நீதியரசர் அமைதி அமைதி அந்த வழக்கு தனி அறையில் இன்று மாலை 1.30 மணிக்கு விசாரிக்கப்படும் என்று கூறி எழுந்து சென்றார்.

சட்டத்தரணியும், பாராளுமன்ற உறுப்பின ருமான கிங்தோர் எதிர்த்தரப்பு குற்றவாளி கூண்டில் சிலையாகி நிற்பதனைப் பார்த்த எலிசா எந்த வித சலனமும் இன்றி நீதி மன் றத்தைவிட்டு வெளியேறுகின்றார். அனைவரும் எலிசாவை ஆச்சரியத்துடன் நோக்குகின்றனர்.

யார் இந்த எலிசா? இலங்கையின் யாழ்ப் பாணத்தின் புத்தூர் கிராமத்தின் ஏசுபிள்ளை அண்ணமாள் ஆகியோரின் மூத்த பிள்ளை எலிசபெத். உலக ஆயுத உற்பத்தியாளர்களின தும், ஆயுத தரகர்களினதும் வியாபார சந்தை யின் தேவைக்காகவும் உயர் வர்க்க அரசியல் வாதிகளின் தேவைக்காகவும் சிங்கள இனவாத அரசியல் ஸ்திரத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், இலங்கை மண் உள் நாட்டு யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம். இதனால் தாய் மண்ணை விட்டு வெளியேறி தலைநகர் வந்து அகதி அந்தஸ் துடன் ஜெர்மனியில் குடியேறிய பல்லாயிரம் தமிழ்மக்களில் எலிசாவும் ஒருத்தி. ஜெர்மன் நாட்டில் புளோரிடா பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்வி கற்றவள் எலிசா. பல்கலைக் கழக காலத்தில் ஆப்பிரிக்க இளைஞனான கிங்தோரை காதலித்து திருமணம் முடித்து தற்போது விவாகரத்திற்காக காத்துக் கொண் டிருக்கின்றாள்.

நேரம் 1.30 மணி விசேட வழக்குகளை விசாரிக்க தனியறை விசாரணை ஆரம்ப மாகியது

நீதியரசர்:—

ஏன் இந்த விவாகரத்து சட்டத்தரணி களான உங்கள் இருவரையும் குற்றவாளிக் கூண்டுகளில் நிறுத்தி அவமானப்படுத்துவது இந்த நீதி மன்றத்திற்கு அவமானம் எனவே தான் இன்று இங்கு இந்த ஏற்பாடு என்றார். திருமதி எலிசபெத் கிங்தோர் ஏன் இந்த விவாகரத்து சுதந்திரமாய் உங்கள் வாக்கு மூலத்தினை கூறுங்கள்.

எலிசா:— மைலாட் ஒரு மக்கள் துரோகி யுடன் வாழ நான் தயாரில்லை

வக்கீல் கப்ரியல்:— மை லாட் நாட்டின் அதியுயர் மக்கள் பிரதிநிதியும், சட்டத்த ரணியுமான எனது தரப்பு பிரதிவாதியுமான கிங்தோர் அவர்களை அவமானப்படுத்தும் குற்றத்திற்காக எலிசாவிற்கு எதிராக நட வடிக்கை எடுக்க வேண்டும். இவரது வார்த்தை பிரயோகம் மிகவும் அவமானமாக இருக்கின்றது.

எலிசாவின் சட்டத்தரணி பீட்டர் பெக்:— இதில் எந்த வித அவமானப்படுத்தலும் இல்லை மைலாட் எலிசாவின் வாக்கு மூலத் தினை ஆரம்பம் முதல் இந்த நீதி மன்றம் செவிமடுக்க வேண்டும்.

நீதியரசர் :— யஸ் பிரசீட்

எலிசா :— கனம் மதிப்பிற்குரிய நீதியரசர் அவர்களே 1995 ஆம் ஆண்டு புளோரிடா பல்கலைகழகத்திற்கு சட்ட கல்வி கற்பதற்காக உள் நுழைந்தேன். மாணவர் பேரவை தலை வனாக இருந்த ஒரு புரட்சிகர இளைஞனாக கிஸ்தோரைக் கண்டேன். புரட்சியும், போராட் டமும் அவனது வாழ்க்கையில் இரண்டு கண்கள் என்றான். கிழக்கு ஐரோப்பிய கருப் பின மக்களின் விடுதலைக்காக போராடிய குடும்பத்தில் பிறந்த கிங்தோர் தனது இலக்கி யங்களை அந்த மக்களுக்காக படைத்தவன்.

கருப்பின மக்களின் விடுதலைக்காக மாணவ போராட்டங்களை தலைமை தாங்கி சிறை சென்று வந்தவன். அவனது சிறுகதைகள், விடுதலை வேட்கையையும் பெண் விடுதலையையும் அடிப்படையாகக் கொண்டு படைக்கப் பட்டவை, பன்றி இறைச்சி பதனிடும் தொழிற்சாலையில் வேலை செய்த பெண்ணை கற்பழிக்க முயற்சி செய்த மேற்பார்வையாளனை இறைச்சி வெட்டும் கத்தியால் வெட்டி கொலை செய்ததாக சித்தரித்து இவனால் படைக்கப்பட்ட சிறுகதைக்கு பரிசும் கிடைத்தது. ஆனால் அந்த புரட்சியாளன் மரணித்து விட்டான்.

மக்கள் போராட்டம் மானுட வாழ்க்கைக்கு விடுதலை பெற்றுத்தரும் என்று அவன் பாடிய கவி வரிகளை கேட்க நான் சென்ற கவியரங்குகள் ஏராளம். பல்கலைகழக புற்தரையில் அமர்ந்து வர்க்க விடுதலை பற்றி கதைத்த மணித்தியாலங்களும் ஸ்டாலினின் புரட்சியும் ட்ரொஸ்கியின் மாற்றங்களும் பற்றி வாதாடி சண்டையிட்டு இறுதியில் விடைகள் இன்றி முத்தமிட்டு பிரிந்த அந்த நாட்கள் அனைத்துமே பொய்யாகி போய் விட்டது மை லாட்.

வக்கில் கப்ரியல்:— மை லாட் எலிசா தேவையற்ற விடயங்களையும் உணர்ச்சி வசமான விடயங்களையும் கூறி வழக்கினை வேறு திசைக்கு திருப்ப முனைகின்றார். வழக்கிற்கு தேவையானவற்றை மாத்திரம் முன் வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

எலிசா:— மன்னிக்க வேண்டும் மைலாட் நான் ஏமாற்றப்பட்ட வரலாற்றையே வாக்கு மூலமாக வழங்குகின்றேன்.

நீதியரசர் :— யூ பிரசீட்

எலிசா:— பெண் விடுதலையும் சிறுவர் பாதுகாப்பும் என்னும் தலைப்பில் கிங்தோர் எழுதிய பல்கலைக்கழக ஆய்வினைக் கண்டு நான் பிரமித்துப் போனேன்.

அவை அனைத்தும் வெறும் காகித புரட்சி என்பதனை கிங்தோர் நிரூபித்து விட்டான்.

மை லாட் இன்று அவர் இணைந்திருக்கும் முதலாலித்துவ கட்சியின் தலைவன் எத்தனைப் பெண்களை தனது காம இச்சைக்குட் படுத்தி மானபங்கம் செய்துள்ளான். அந்த கட்சியின் பிரபல அமைச்சர் ஒருவன் சிறுவர் துஷ்பிரயோக குற்றசாட்டுகளுக்கு உள்ளாகியவன். அந்த கட்சியின் வயது முதிர்ந்த உப தலைவன் தனது இரண்டு மனைவிமாரையும் விட்டு விட்டு தனது மகளின் வயதையொத்த யுவதியை திருமணம் முடித்து உள்ளான்.

மக்களின் சந்தா பணத்தையும் சொத்துக் களையும் மாத்திரம் பெற்று மக்களின் உரிமைகளை சிறு சலுகைகளுக்காக காட்டிக்கொடுத்தும் பிற்போக்கு கட்சியில் சேர்ந்த தினமே கிங்தோர் ஒரு சமூக துரோகி ஆகி விட்டான்.

நீதிபதி:— ஓடர் ஓடர்

எலிசா அதிக உணர்ச்சி வசப்பட்டு வாக்கு மூலம் வழங்குவதனால் அவள் மிகவும் களைப்படைந்துள்ளாள். எனவே இந்த வழக்கு நாளை மறுதினம் விசாரணைக்கு எடுக்கப்படும்

நீதி மன்ற வளாகத்தில் இருந்து வெளி வரும் எலிசாவை நோக்கி வக்கில் கப்ரியலுடன் கிங்தோர் நடந்து வருவதனை கண்ட எலிசா சற்று நிதானித்து அவர்களை நோக்கினாள்.

வக்கீல் கப்ரியல்:— எலிசா நான் கூறுவதனை சற்று நிதானத்துடன் கேளுங்கள் திரு கிங்தோர் உங்களையும் பிள்ளைகளையும் விட்டு பிரிய எந்த வித விருப்பமும் இல்லை என்பதையே மீண்டும் மீண்டும் கூறுகின்றார்.

உங்களுக்கு எதுவித கொடுமையோ தீங்கோ செய்யாத கிங்தோரை விவாகரத்து செய்வது நியாயமற்றது.

இதனை கேட்ட எலிசா சற்று கோபமாக வக்கிலைப் பார்த்து, "சட்டத்தரணி கப்ரியல் அவர்களே என்னிடம் இதைக் கூறுவதற்கு கூட கிங்தோருக்கு வக்கில் தேவை என்றால் இந்த விவாகரத்து நடந்தே தீரும்" என்று கூறி விட்டு வீட்டை நோக்கி நடக்கின்றாள்.

அவளது வாடகை வீடு தனியறையும் சமயலறையுமாக இருந்தது. இரண்டு பிள்ளைகளும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். கடுமையான குளிர் காரணத்தினால் பூட்டப் பட்டிருந்த கதவுகளை யாரோ தட்டினார்கள். கதவைத் திறந்த எலிசாவால் வந்தவர்களை முதலில் அடையாளம் காண முடியவில்லை. பின்பு அவர்களை அடையாளம் கண்ட பின் வரவேற்றாள். "வாருங்கள் திரு கோப்ரா கிங். திரு ஆர்முன் ஆகிய உங்கள் இருவரையும் இந்த குளிர்ந்த இரவில் நீண்ட நாட்களுக்கு பின் சந்திப்பது ஆச்சரியமாக உள்ளது. வாருங்கள் அமருங்கள். சூடாக தேனீர் கொண்டு வருகிறேன்" தேனீரும் பிஸ்கட்டும் பரிமாறிய பின் அவர்களுடன் அமர்ந்து இருவரும் வந்த காரணத்தினை வினவும்

முகமாக நோக்கினாள்.

ஆர்மூன் எலிசாவை பார்த்து, "உங்களிடம் நேரடியாகவே விடயத்திற்கு வருகின்றேன். இந்த உலகத்தில் கணவனுடன் வாழும் போதே பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எந்தவித பாதுகாப்பும் இல்லாத நிலையில் இரண்டு பெண் பிள்ளைகளுடன் தனித்து வாழ்வது உங்களுக்கு முடியாத காரியம். உங்கள் முடிவு மிக தவறானது எலிசா இந்த முடிவின் மூலம் நீங்கள் அதிக விபரீதங் களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் அதுவும் தேர்தல் நெருங்கும் காலத்தில் நீங்கள் எதிர் கட்சிகளிடம் பணம் வாங்கி இவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் என்று பலரும் பேசிக் கொள்கின்றார்கள்" என்றான்.

எலிசா மௌனமாக இருந்துவிட்டு, "திரு கோப்ரா கிங் நீங்கள் எதுவும் கூற இருந்தால் கூறுங்கள்" என்றாள்.

"யெஸ் திருமதி எலிசபெத் கிங்தோர் உங்க ளுக்கு தெரியும் நானும் ஆரம்பம் முதல் நீங்கள் இணைந்து செயற்படும் தொழிலாளர் கட்சியில் உறுப்பினராக இருந்துள்ளேன். அதிலும் தலைமைப் பீடம் வரை சென்றும் உள்ளேன். உங்கள் கட்சி போராடி போராடி புரட்சி செய்து மாண்டு போகும் ஒரு கட்சி. உங்களால் இந்த நாட்டை ஒரு பாட்டாளி வர்க்க ஆட்சிக்குள் கொண்டு வருவதும் சம தர்ம உலகை உருவாக்குவதும் பகல் கனவு. நாங்கள் இப்போது இணைந்துள்ள இந்த கட்சியும் அதன் தலைமையும் மிகவும் பலம் வாய்ந்தது. எமது மக்களுக்கு சிறப்பான சேவை களை செய்ய இந்த கட்சி தான் பொருத்த மானது. எமது கட்சி எந்த ஆளும் கட்சியுட னும் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைத்து அமைச் சுக்களை கைப்பற்ற முடியும். அதிலும் எமது அமைப்பின் மக்கள் பலமும் பண பலமும் அதிகார பலமும் வேறு எந்த கட்சியிலும் இல்லை. திரு கிங்தோர் அவர்களைப் பகைத்துக் கொண்டு உங்களால் இந்த நாட்டில் கூட இருக்க முடியாத நிலை ஏற்படப் போகின்றது. உங்கள் முடிவை மாற்றிக் கொள்வது நல்லது."

எலிசாவின் கண்கள் சிவந்து கோபம் தலைக்கேறியது. "என்ன நண்பர்களே நட்பிற் காக அழைத்து உபசரித்த என்னை அதிகார வர்க்கத்தின் அத்தனை அடக்குமுறைகளையும் பிரயோகித்து அச்சத்தை ஏற்படுத்தலாம் என நினைக்கின்றீர்களா? நீங்கள் இவ்வாறு அச் சுறுத்துவதும் சட்டத்திற்கு முன் குற்றம் என்று உங்கள் சிரேஸ்ட சட்டத்தரணி கிங்தோர் கூற வில்லையா மூடர் கூட்டத்தில் சேர்ந்து மூடனாகிய கிங்தோர் உங்களை இங்கு அனுப்பியது அவன் ஒரு கோழை என்பதனை நிருபிக்கின்றது" என்றாள்.

ஆர் மூன் இடையில் குறிக்கிட்டு "உணர்ச்சி வசப்படாதீர்கள் எலிசா உங்கள் நன்மைக்காகதான் கூறுகின்றோம்" என்றான்.

"சாரி நண்பர்களே கிங்தோர் புரட்சிகர மக்கள் கட்சியில் இருந்து ஐக்கிய முன்ன ணிக்கு தாவி, ஐக்கிய முன்னணியில் தொழில் சங்க தலைமை பதவி கிடைக்கவில்லை என்று உங்களின் முதலாளித்துவ கட்சிக்கு தாவி தேர்தலில் போட்டியிட்டு பாராளு மன்றம் சென்று அதில் இருந்து மீண்டும் ஐக்கிய முன்னணிக்கு தாவி மீண்டும் உங் களின் முதலாளித்துவ கட்சியில் இணைய தொழிலாளர் தினத்தன்று பர்லின் நகர கூட் டத் திடலில் மேடைக்கு வந்த போது உங்கள் கட்சியின் தலைவனின் ஏற்பாட்டில் பொது மக்கள் பாதணிகளை கிங்தோர் மீது வீசி எறிந்த போது முதலாளித்துவ கட்சியின் தலைவன் காப்பாற்றுவது போல் பாசாங்கு செய்த அன்றே கிங்தோர் அரசியலில் இருந்து வெளியேறி இருக்க வேண்டும். ஆனால் வெட்கம் கெட்டு வீடுகளில் காவல்காக்கும் ஜந்துவை போல் கேவலப்பட்ட அந்த தினம் நானும் எனது பிள்ளைகளும் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு தள்ளப்பட் டோம் அப்போது ஆறுதல் கூற நீங்கள் கூட வரவில்லை. இன்று ஏன் வந்தீர்கள் பர்லின் நகரில் வைத்து கிடைத்த அந்த பாதணி அபிசேகம் கிங்தோர் மீது மட்டுமல்ல கிஸ் தேரை கம்யூனிச பாதையில் இருந்தும் வர்க்க போராட்டத்தில் இருந்தும் பிரித்தவர்கள். ஒவ்வொருவரினதும் முகத்தில் விழுந்தது உங் கள் இருவரினதும் முகத்தில் கூட அந்த வடுக்கள் இன்னும் காணப்படுகின்றன. நானும் அந்த மக்களின் நிலைக்கு மாறி விடாமல் இருக்க வேண்டுமானால் தயவு செய்து இந்த இடத்திலிருந்து போய் விடுங்கள்" என்றாள்.

கோப்ரா கிங் ஒரு பள்ளிகூடத்தின் தலைமை ஆசிரியர் ஆர்மூன் விரிவுரை யாளர்களுக்கே விரிவுரை செய்யும் சுயநல கல்விமான். அவர்கள் இருவரும் ஒடுக்கப் பட்ட இரண்டு சமூகங்களின் மத்தியத்தர வர்க்க அடையாளங்கள் சுரண்டும் வர்க்கத்

தின் கை கூலிகள் ஜெர்மன் நாட்டின் சிறு பான்மையின கற்றவர்களின் அடையாளங்கள்.

அவர்கள் சென்று சில மணித்தியாலங் களில் எலிசாவின் வீட்டுத் தொலைப்பேசி அழைத்தது. எலிசா சென்று தொலைபேசியை கையில் எடுத்தாள். "ஹலோ மிஸிஸ் கிங்தோர் நான் முதலாளத்துவ கட்சியின் தலைவர் அமைச்சர் பேசுகின்றேன். நாளை நீங்கள் நீதிமன்றம் வருவதனை தவிர்த்துக் கொள்வது நல்லது. அடுத்த நகராட்சி தேர்தலில் உங்களை மேயர் பதவிக்கு எமது கட்சி தெரிவு செய்துள்ளது. துணிச்சல் மிகுந்த பெண் வேட்பாளர் ஒருவரை தேடிய பொழுது நீங்கள் பொருத்தமானவர் என்று பலரும் சிபாரிசு செய்துள்ளார்கள்" என்றான். அடக்க முடியாத ஆத்திரத்தினை அடக்கிய எலிசா மௌனித்து பொறுத்திருந்தாள். எதிர் முனை துண்டிக்கப்பட்டதும் தொலை பேசியை வைத் தாள். எதிர்த்து பேசியிருந்தாலோ, அவசரப் பட்டு துண்டித்திருந்தாலோ தனது வீடு தாக் கப்பட்டிருக்கும் என்ற பட்டறிவு பலரது அனுபவத்தில் எலிசா கண்டது

ஏதோ ஞாபகம் வந்த எலிசா ஆர் மூன் கோப்ரா கிங் ஆகியோர் அமர்ந்திருந்த இடத்தை சோதனை செய்தாள். போதை பொருட்களோ, துப்பாக்கியோ அல்லது வெடிப் பொருட்களோ எதையாவது பதுக்கி வைத்து விட்டு எலிசாவை காவல் நிலையத் தில் சிக்க வைக்க இவர்கள் அஞ்சமாட்டார் கள். பல புரட்சிகர செயற்பாட்டாளர்களை இவ்வாறான நிலைமைக்கு ஆளாக்கிய குறித்த கட்சி தொடர்பாக எலிசா தெரிந்து வைத் திருந்தாள்.

மூன்றாம் நாள்,

எலிசா நீதிமன்றம் வருவதனை தடுத்து விட்டேன் என்ற சந்தோசத்தில் கிங்தோர் தனது சொகுசு வாகனத்தில் இருந்து இறங்கி நீதி மன்றத்திற்கு சென்றான். அவனது கட்சி யின் குண்டர்கள் பலருடன் ஆர்.மூன் கோப்ராகிங் போன்ற அள்ளக் கைகளும் நொள்ளக் கைகள் என்போரும் நீதி மன்ற வளாகத்தில் இருந்தார்கள். சிறிது நேரத்தில் எலிசா வாடகை டாக்சி ஒன்றில் வந்திருந் தாள். நிமிர்ந்த நெஞ்சமும் நேர் கொண்ட பார்வையும் சீரான நடையுமாக நீதி மன்ற திற்குள் சென்றாள். இரண்டு மணித்தியாலங் களின் பின் திருமதி எலிசபத் கிங்தோர் வெறும் எலிசபத் ஆக வெளியே வந்தாள். அவளது நடையில் இன்னும் கம்பீரம் அதி கரித்து இருந்தது. அவள் டக்சியை நோக்கி நடந்து வந்தாள். கிங்தோர் அவளது பின் னால் ஓடி வந்தான். "எலிசா பிழையான முடிவு எடுத்து விட்டாய். இப்போது என் பிள்ளைகளுடன் எங்கே போகிறாய்" என்றான்.

"நான் எனது தாய் நாட்டிற்கு போகிறேன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அவர்களைத் தேடி நடாத்தும் போராட்டமும் 1000 ரூபா சம்பள உயர்விற் காக தோட்ட தொழிலாளர்கள் நடாத்தும் போராட்டமும் ஏழை சிங்கள விவசாயிகள் அவர்களின் நெல்லிற்கு சரியான விலை இல்லை என்று நடாத்தும் போராட்டமுமாக இருக்கும் எனது தாய் நாட்டில் அவர் களுடன் இணைந்து போராட என் பிள்ளை களை பயிற்றுவிக்க போகின்றேன். குட்பாய் மிஸ்டர் கிங்தோர்" என்று கூறிவிட்டு தனது பிள்ளைகளுடன் காத்திருந்த டாக்சியில் ஏறி விமான நிலையம் நோக்கி விரைகின்றாள்.

எலிசாவின் மூத்தமகன் ஜென்னி எலிசா விடம் கேட்டான், "அம்மா அப்பாவின் பெயருக்கு தமிழ் அர்த்தம் என்ன" என்று. முதலில் தெரியாது என்ற எலிசா அவனின் நச்சரிப்பு தாங்க முடியாமல் மொழிபெயர்ப்பு செய்தாள்.

கிங்தோர்

கிங் என்றால் அரசன், ராஜா, கோ,

தோர் என்றால் கதவு, வாசல்

அரசகதவு, அரசவாசல், அல்லது அரச துரை, இராஜதுரை, கோதுரை என்று எதை வேண்டுமானாலும் வைத்ததுக்கொள்ளலாம் மகனே என்றாள்.

எலிசாவின் பயணம் தொடர்ந்தது.

**வாசகர் கவனத்திற்கு**

தாயகம் இதழின் விலையை அடுத்த இதழிலிருந்து ரூ150 ஆக அதிகரிக்க உள்ளோம் என்பதை அறியத் தருவதில் வருந்துகின்றோம். தாள்களில் விலை யேற்றத்தை தொடர்ந்தும் நம்மால் சுமக்கமுடியாது என்பதைப் புரிந்துகொள்வீர்கள். இந்த இதழ் அதிகபக்கங்களுடன் 150 ரூபா விலையிடப் பட்டுள்ளது.

# ஏழு புத்தகங்கள்

## 2018இல் வெளியான அரசியல் நூல்களை முன்னிறுத்திய பார்வை


**தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ**

**காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம் எனக் கவலையுடனும் அச்சத்துடனும் ஒரு பக்கம் ஆய்வுகள் நடக்கையில், அதை எவ்வாறு இலாபமாக்கிப் பணமீட்டலாம் என்று இன்னொரு பக்கம் ஆய்வுகள் நடக்கின்றன. புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த இதுவரை காத்திரமான நடவடிக்கை எடாமைக்குச் சுவட்டு எரிபொருட்கள் இன்னமும் சர்வதேசச் சந்தையினதும் உலக அரசியலினதும் பிரதான சரக்காக உள்ளமையே காரணம்.**

(கடந்த இதழில் வெளியான கட்டுரையின் இரண்டாவது பகுதி)

கடந்த இதழில் இக்கட்டுரையின் முதலாவது பகுதி இடம்பெற்றிருந்திருந்தது. 2018ம் வெளியான அரசியல் நூல்களில் மிகவும் முக்கியமானது என நான் கருதுகிற நூல்களைப் பட்டியலிட்டு அதை அறிமுகப்படுத்தும் முயற்சியின் தொடர்ச்சியே இக்கட்டுரை. கடந்த கட்டுரையில் ஆசியாவின் இரண்டு பெரும் சக்திகளான சீனா மற்றும் இந்தியா குறித்த அவசியமான ஆய்வுகளை முன்வைக்கும் இரண்டு நூல்களை அறிமுகப்படுத்தியிருந்தேன். அதேபோல இன்று உலகெங்கும் ஜனரஞ்சக அலை முக்கியமான கருத்தேற்றமாக முனைப்புற்றுள்ள நிலையில் இந்த ஜனரஞ்சக அலை எவ்வாறு இலத்தீன் அமெரிக்காவின் இடதுசாரி அலைக்குச் சவாலாக உள்ளது என்பதையும் இரண்டு தசாப்தங்களுக்கு முன் இலத்தீன் அமெரிக்காவில் தோற்றம்பெற்ற இளம்சிவப்பு அலையின் நிகழ்நிலைகள் குறித்து ஆராயும் புத்தகமொன்றை அறிமுகப்படுத்தியிருந்தேன்.

அத்தோடு வலதுசாரித் தன்மையுடையாது உள்ள ஜனரஞ்சக அலையை எவ்வாறு இடதுசாரித் தன்மையுடையாதாக மாற்றுவது அல்லது ஜனரஞ்சக அலையை இடதுசாரி முற்போக்கு சக்திகள் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை விளக்கும் நூலொன்றையும் அறிமுகப்படுத்தியிருந்தேன்.




இப்பகுதியில் மூன்று நூல்களை அறிமுகப்படுத்தும் அதேவேளை அதற்கு மேலதிகமாக இலங்கை போன்ற நாடுகள் எதிர்நோக்கியுள்ள சர்வாதிகாரம் நோக்கிய நகர்வுக்கான சவால்களை விளங்க வாசிக்க வேண்டிய துருக்கி பற்றியதொரு நூலையும் இங்கு தந்திருக்கிறேன்.

### காலநிலை மாற்றம்: வணிகமா வாழ்க்கையா?

காலநிலை மாற்றத்தின் கோர விளைவுகளை எல்லோரும் அனுபவிக்கிறோம். இடைவிடா மழை, வெள்ளம், வறட்சி, நீர்ப் பற்றாக்குறை என எதிர்மறையான அனைத்தையும் நாம் ஒருசேர அனுபவிக்கிறோம். வானம் பொய்த்ததென்றோ, எதிர்பாராத மழை என்றோ புறந்தள்ளவியலாதபடி இவை தொடர்ந்து நடக்கின்றன. அதேவேளை சூழலை மாசாக்கல், புவி வெப்பநிலையை அதிகரிக்கும் செயல்கள் எனப் பூமிப்பந்தின் எதிர்காலத்தை உறுதியற்றதாக்கும் காரியங்களை நாம் விடாது செய்கிறோம். இதைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு, எமது எதிர்காலச் சந்ததிக்கு எவ்வகையான உலகை விட்டுப் போகிறோம் என்பன போன்ற கேள்விகள் முன்னிலையில் உள்ளன. இவ்வினாக்கள் தொடர்பான இரண்டு நூல்களைப் பரிந்துரைக்கிறேன்.

ஒன்று, காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம்

எனக் கவலையுடனும் அச்சத்துடனும் ஒரு பக்கம் ஆய்வுகள் நடக்கையில், அதை எவ்வாறு இலாபமாக்கிப் பணமீட்டலாம் என்று இன்னொரு பக்கம் ஆய்வுகள் நடக்கின்றன. அதில் பிரதானமானது 'வேளாண் எரிபொருட்கள் ((agrofuels) எனும் உயிர் எரிபொருட்கள் (Biofuels) பற்றிய அக்கறை. ஒக்பஸ்கீ யோகானஸிகால் (Okbazghi Yohannes) எழுதப்பட்ட 'உயிர் எரிபொருட்கள் ஏமாற்று: பச்சைக் காபன் பத்தியத்தில் பட்டினியிருத்தல்' (The Biofuels Deception: Going Hungry on the Green Carbon Diet) என்ற நூல் உயிர் எரிபொருட்களின் பெயரால் நடக்கும் மோசடிகளை அம்பலப்படுத்துகிறது.

புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த இதுவரை காத்திரமான நடவடிக்கை எடாமைக்குச் சுவட்டு எரிபொருட்கள் இன்னமும் சர்வதேசச் சந்தையினதும் உலக அரசியலினதும் பிரதான சரக்காக உள்ளமையே காரணம். எனவே அதன் பாவனையைக் கட்டுப்படுத்துவது கடினம். இந்நிலையில், சுவட்டு எரிபொருள்கட்கு மாற்றான சக்தி மூலங்களை உருவாக்குவதை ஒரு தீர்வாக முன்வைத்த நிலையில் உயிர் எரிபொருட்கள் ஒரு பயனுள்ள மாற்றாக முன்மொழியப்பட்டன. சோளம், சோயா, கரும்பு, செம்பனை எண்ணெய் போன்றவற்றிலிருந்து திரவ எரிபொருளை உருவாக்கி அதன்மூலம் போக்குவரத்து, கைத்தொழிற் துறை எரிபொருட் தேவைகளை நிறைவுசெய்வது புதிய வழிமுறையாகியுள்ளது. இதைச் சுத்தமான, வலுச் சிக்கனமான முறை என்பதோடு சூழலுக்குக் கேடற்றது என்றும் பாராட்டுவர். இது இன்று பல்தேசியக் கம்பெனிகளின் முக்கியமான முதலீடாகவுள்ளது.

ஆனால் உயிர் எரிபொருட்களின் உண்மைக் கதையை இந்நூல் கூறுகிறது. உயிர் எரிபொருட்களின் உற்பத்திச் சங்கிலியின் ஒவ்வொரு படிநிலையிலும் ஏராளமான நீர் செலவாகிறது. வேளாண் எரிபொருளைப் பயிரிட்டு உற்பத்தி செய்யப் பெருமளவு நீர் தேவை. அறுவடையைக் கழுவிச் சுத்தமாக்கவும் ஆவிப்பொருளைக் குளிரூட்டவும் வீணாகும் நீரின் அளவு மிக அதிகம். உதாரணமாக மதுசாரம் (எதனோல்) தயாரிக்கக் கரும்பு பயிரிடப்படுகிறது. ஒரு லீற்றர் எதனோலுக்கு 12 கிலோகிராம் கரும்பு தேவை. அதைப் பயிரிட்டு அறுவடைசெய்ய 7,000 லீற்றர் தேவை. எனவே உயிர் எரிபொருள் உற்பத்தி சிக்கனமானது என்ற மாயையை உருவாக்கித் தண்ணீர்க் கொள்ளை நடக்கிறது.

உயிர் எரிபொருட்களின் உற்பத்திச் சங்கிலியின் ஒவ்வொரு படிநிலையிலும் சூழலுக்கு மாசான, புவி வெப்பமடைதலைத் தூண்டும் செயல்கள் நடப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வேளாண் எரிபொருட்களுக்குப் பயன்படும் பயிர்கள் மிகக்குறைவாகவே காபனீரொட்சைட்டு வாயுவை உறிஞ்சுவதாகவும் இறுதியில் அவற்றை எரிக்கும் போது அவையும் சூழலுக்குள் காபனீரொட்சைட்டு வாயுவாக உமிழப்படுகின்றன. எனவே இவற்றால் அதிகமான பசுங்குடில் வாயுக்கள் வளிமண்டலத்துக்குள் வந்து சேர்கின்றன.

உணவுகளின் விலை உயர்வு பல்தேசியக் கம்பெனிகளினது இலாபத்தை ஓரளவு குறைத்துள்ளது. எனவே சர்வதேசச் சந்தையை நம்பியிராமல் பல்தேசியக் கம்பெனிகள் நேரடியாக விவசாய உற்பத்தியில் இறங்கின. அதற்காக மூன்றாமுலக நாடுகளிற் காணிகளைக் குத்தகைக்கு எடுப்பது அவர்களின் புதிய உபாயமாகும். அதே வேளை பயிர் நிலங்களில் உயிர் எரிபொருட் பயிர்களை விளைப்பதால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது. உலக சுகாதார நிறுவனம் பருவநிலை மாற்றங்களுக்கும் பட்டினிக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை ஆராய்ந்து பருவநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்வு கூறியிருக்கிறது. அதன்படி:

1. 2050ம் ஆண்டிற் பட்டினியால் வாடுவோர் தொகை 20% அதிகரிக்கும்.
2. 2050ம் ஆண்டளவில் 24 மில்லியன் மேலதிக குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்படுவர்.
3. 2025ம் ஆண்டளவில் ஆபிரிக்காவின் பயிரிடக்கூடிய நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பயிரிடமுடியாததாகும்.
4. 2030ம் ஆண்டளவில் உணவுப்பொருட்களின் விலைகள் மேலும் 60% அதிகரிக்கும்.

எனவே காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தப் பங்களிக்கிறோம் என்ற போர்வையில் பல்தேசியக் கம்பெனிகள் மக்களைப் பட்டினியில் தள்ளுகின்றன. அத்துடன், மேலதிக காபனீரொட்சைட்டு வாயுவை வெளியேற்றுகின்றன. ஆனால் காலநிலை மாற்றம் அவர்களுக்கு இலாபமீட்டும் புதிய வழியை

ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று இந்நூல் சொல்கிறது.

இதே சிக்கலுடன் தொடர்புடைய அடுத்த நூல் ஜெவ் மான் மற்றும் ஜோயல் வெயின்ரயிட் (Geoff Mann and Joel Wainwright ) ஆகியோர் எழுதிய 'காலநிலைத் திமிங்கிலம்: எமது கிரக எதிர்காலம் பற்றி ஒரு அரசியற் கொள்கை' (Climate Leviathan: A Political Theory of Our Planetary Future). இந்நூல் காலநிலை மாற்றம் எமது அரசியற் கோட்பாடுகளில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களை ஆராய்கிறது. மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ள இந்நூலின் முதலாம் பகுதி அடுத்த 50 ஆண்டுகளில் கால நிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய அரசியற் பொருளாதார மாற்றங்களை எதிர்வுகூறி அத னடிப்படையில் உலகம் எவ்வாறு அமையும் என்று கணிக்கிறது. இரண்டாவது பகுதி, அதன் பின்புலத்திற் காலநிலை மாற்றம் பற்றி எவ்வகையான நிலைப்பாடுகளை அரசும், மக்களும், நிதி மூலதனமும் எடுக்கும் என விவாதிக்கிறது. அதன்வழி, உலக அரசியல் எவ் வகையான பாதையில் நகரும் என விளக்க முற்படுகிறது. மூன்றாவது பகுதி, அப்பாதை எவ்வாறு மனிதகுல நலனுக்கு எதிராய் அமை யும் என்பதைச் சுட்டிக்காட்டி, மாற்றாக செய்யக்கூடிய விடயங்களை முன்னிலைப் படுத்துகிறது. இதன்வழி காலநிலை மாற்றத்தின் தவிர்க்கவியலாத தன்மையின் பின்னணியில் எவ்வாறு அரசியலைக் கோட்பாடாக்குவது எனவும் எத்தகைய எவ்வகையான கோட்பாட் டாக்கம் தகும் எனவும் விசாரிக்கிறது.

இதுவரை காலநிலை மாற்றத்திற்கு முன் வைத்த தீர்வுகளை இரு விதங்களில் நோக் கலாம் என இந்நூல் வாதிக்கிறது. முதலாவது, சந்தைவழித் தீர்வுகளை முன்மொழிந்து சந் தையே இதற்கு வழிகாட்டவியலும் என்ற கோட்பாடு. இரண்டாவது, நடப்பது நடந்தே தீரும் என்று சும்மாவிருப்பது அல்லது காலநிலை மாற்றம் என எதுவுமில் லையாதலால், அஞ்ச வேண்டிய தில்லை என்று மறுக்கும் வழியிற் செல்கிறது. இரண்டும் சரியான வழிகளல்ல. சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியவற்றை முன்னிறுதும் மக்கள் வயமான தீர்வுகளே வள மான எதிர்காலத்துக்கு வழிவகுக் கும். அதை முன்னெடுக்கும் வர லாற்றுக் கடமை இடதுசாரிகளுக்கும் முற்போக்கு சக்திகளுக்கும் உண்டு என்று இந்நூல் ஆணித்தரமாகக் கூறுகிறது.





## லெனின் என்ற கோட்பாட்டாளன்: நூற்றாண்டு கடந்து

இக்கட்டுரையின் நிறைவு நூலே கூறிய ஏழு நூல்களில் அதி முக்கியமானது எனக் கருதுகிறேன். உலகளாவிய ரீதியில் முதன் மையான பதிப்பு நிறுவனங்களில் ஒன்று பல்கிரேவ் மக்மிலன் பதிப்பகம் ((Palgrave Macmillan). அறிவுத்துறையில் மிகவும் முக்கியமான பதிப்பகமாகக் கருதப்படும் இது முதலாளிய நவதாராளவாத கொள்கைகளைப் பரப்பும் பணியை தொடர்ச்சியாகச் செய்து வருகிறது. அதே வேளை இடதுசாரி விரோதத் தையும் கம்யூனிச எதிர்ப்பையும் அதன் வெளி யீடுகளிற் காணலாம். இந்தப் பதிப்பகத்தின் முக்கியமானதும் பிரபலமானதுமான தொடர் களில் ஒன்று குறித்த விடயதானம் பற்றிய கையேடுகள். பண்டைய சிந்தனையாளர்கள் முதல் 1990களின் சிந்தனையாளர்கள், சிந்த னைகள் வரை பெரும்பாலானவை கையேடு களாக வெளியாகியுள்ளன. ஆனால் பல்கிரேவ் மக்மிலன் மார்க்சியம் சார்ந்த எந்தக் கையேட் டையோ மார்க்சிய சிந்தனையாளர்களின் கையேடுகளையோ வெளியிடவில்லை.

ஆனால் கடந்தாண்டு 'பல்கிரேவின்; லெனி னிய அரசியல் மெய்யியற் கையேடு' (The Plagrave Handbook of Leninist Political Philoso— phy) வெளியானது. இது இரு வழிகளில் முக்கியமானது. ஒன்று, தவிர்க்கவியலாமல் மார்க்சியச் சிந்தனையாளர்களின் நூல்களை வெளியிடும் நிலைக்குப் பதிப்பகம் தள்ளப் பட்டமை. மற்றது, இன்றைய காலத்தில் லெனினின் அரசியற் கோட்பாடுகளை வாசிப்பதற்கும் ஆராய்வதற்குமான ஆர்வம் இளந்தலைமுறையினரிடையே அதிகரித்துள் ளது.. இதில் விந்தை என்னவென்றால் ரஷ்யப் புரட்சியை லெனின் தலைமை யேற்று 100 ஆண்டுகளின் பின்னே அது சாத்தியமாகியிருக்கிறது. இப் புத்தகத்தின் அறிமுகக் குறிப்பில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது: '1990இல் சோவியத் யூனியனின் முடிவும் கெடுபிடிப்போரின் நிறைவும் மார்க்ஸியத்தை முடிவுக்குக் கொண்டு வந்தன. 1991 முதல் 2008 வரை லெனின் சுவடுகள் எதுவும் அற்றவராகப் புலப்படாதவராக

வாழ்ந்தார். ஆனால் அமெரிக்கப் பொருளா தார நெருக்கடியும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும் லெனினை மீண்டும் பொது வெளிக்கு மீட்டுள்ளன'.




இப்புத்தகத்தைத் தொகுத்த டொம் ரொக்மோர், நோர்மன் லிவயின் (Tom Rockmore, Norman Levine) ஆகியோரால் எழுதப் பட்ட மிக நீண்ட அறிமுக உரை லெனின் பற்றிய ஆய்வுகளின் சுருக்கத்தைத் தருகிறது. அதைத் தொடர்ந்த பகுதிகள் மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன. லெனினும் அரசியற் தத்துவங்களும் என்ற முதலாவது பகுதியில் லெனினின் தர்க்கமுறைமை, பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகியவற்றில் லெனினின் சிந்தனைகள் போன்றன ஆராயப்படுகின்றன. இரண்டாவது பகுதி லெனினுக்கும் ஏனைய மார்க்சிய சிந்தனையாளர்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றி ஆராய்கிறது. இதில் பிரெட்ரிக் ஏங்கெல்ஸ், ரோசா லக்ஸ்சம்போர்க், லியோன் ட்ரொஸ்கி, ஜோசெப் ஸ்டாலின், ஜோர்ஜ் லூக்காஸ் ஆகியோர் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தப் பகுதியின் சிறப்பு யாதெனில் இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ் வொரு சிந்தனையாளருக்கும் லெனினுக்கும் இடையிலான தொடர்பு நேர்கோட்டில் வைத்து நோக்கக் கூடியதல்ல. மூன்றாவது பகுதி லெனினின் முக்கியமான கோட்பாட்டு ருவாக்கங்களை அறிமுகம் செய்கிறது. குறிப்பாக ஏகாதிபத்தியம், புரட்சி பற்றி, பொருளாதாரக் கொள்கை பற்றிய கட்டுரைகளை உள்ளடக்கியது.

### நிறைவாக

குறிப்பிட்ட ஏழு நூல்களும் கவனிக்க வேண்டிய முக்கிய நூல்கள் என்பதாற் தெரியப் பட்டன. அவற்றை விட, மேலும் பல நூல்களைக் கடந்த ஆண்டு எமக்குத் தந்துள்ளது. குறிப்பாக இலங்கை போன்ற நாடுகள் ஏன் நீண்டகாலமாக மென்—சர்வாதி காரப் பண்புடன் (Soft—authoritisim) இருந்துள்ளன என்ற வினா என்னுள் பலகாலமாக உள்ளது. அதை விளங்க உதவிய நூல் ஒன்றும் கடந்தாண்டு வெளிவந்தது. அந் நூலை மட்டும் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன். 'துருக்கி ஏன் சர்வாதிகாரமாக இருக்கிறது: அட்டடுக் முதல் எர்டோகன் வரை'(Why Turkey is Au—thoritarian: From Ataturk to Erdoğan) என்று நூல் ஜனநாயகமாக்கலை நோக்கி நகரவேண்டிய இலங்கை போன்ற மூன்றா முலக நாட்டினர் வாசிக்க வேண்டிய நூல் என்பேன்.

வாசிப்பு அவசியமான ஒரு பணி, நாம் வாசிப்பது மட்டுமன்றி நமது அடுத்த தலைமுறையையும் நாம் வாசிப்பை நோக்கிக் கவரவேண்டும். சமூக மாற்ற அக்கறையுள் ளோர் அனைவரும் செய்ய வேண்டிய பணி இது.

## அஞ்சலி



தேசிய கலை இலக்கியப் பேரவையின் உறுப்பினரும் நடிகையும் சிறுகதை ஆசிரியருமான கலாலக்ஷ்மி தேவராஜா (செம்மனச்செல்வி) 28.03.2019 இல் மறைந்தமை கலை, இலக்கிய உலகிற்கும் தாயகம் இதழுக்கும் பேரிழப்பாகும்.

தாயகம் இதழில் செவ்வந்தி, அயிராமி, சிவகாமி எனும் புனைபெயர்களில் பல சிறுகதைகளை படைத்துள்ளார். இவரது சிறுகதைத் தொகுப்புகளாக 'பூமராங்', 'மகர காவியம்', 'றோசாப்பூ' 2017 இல் மறுமலர்ச்சி மன்ற வெளியீடாக வந்துள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் சஞ்சிகையும் தமது அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றது



# நீர்ப்பரவை

முனைவர். பெண்ணியம் செல்வகுமாரி
புதுச்சேரி

அவள் உதடுகள் உருபோட்டபடியே இருந்தன. அந்த முணுமுணுப்பைக் கேட்க தாளாத சூரியன் மரஇடுக்கின் கிளைகளில் புகுந்து அவள் முதுகை வருடியது. அவளைச் சூரியன் தொடும்போது சிலிர்த்தன இலைகள். அவளுக்கில்லை சிலிர்ப்பு.

அப்பள்ளியில் அவளுக்கு அந்த வேப்பமரந்தான் போதிமரம். அங்கே அமர்ந்துதான் எப்போதும் படிப்பாள். இப்போதும் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறாள். ஆனால் அவளைச் சுற்றி ஐந்தாறு மாணவிகள் இருப்பர். அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தபடியே படிப்பாள். இப்ப முகம் கவிழ வாய் முணுமுணுக்க அதுவும் தனியாக, கூனிக் குறுகி உட்கார்ந்திருக்கிறாள். ஆனால் அவள் உட்கார்ந்திருப்பது வேறுமாதிரியாயிருக்கிறது. சப்பணம் போட்டுப் படிப்பவள் இன்று செங் குத்தாக உட்கார்ந்து தன் இரு முட்டிகளில் முகத்தைப் புதைத்து வைத்திருக்கிறாள். வாய் உருபோட்டபடி இருக்குமவள் கவனம் புத்தகத்திலில்லை என்பதாகப்படுகிறது.

தேர்வு நேரம் நெருங்கிவிட்டது. எல்லாவற்றிலும் இவள்தான் முதல். விளையாட்டானாலும், படிப்பானாலும் புனிதாதான் முதலிடம். நம்பர் ஒன்னாக இருக்கக்கூடிய மாணவி, இன்று என்ன நேர்ந்தது அவளுக்கு? இல்லை நான் தவறாக யோசிக்கிறேனா?

அந்தப் புத்தகத்தின் பக்கங்களைக் காற்று அசைத்துவிடுகிறது. பக்கங்கள் அங்குமிங்குமாக நகர்கின்றன. அவள் கண்கள் நகராமல் வாய் முணுமுணுத்தப்படியே இருக்கிறது. மீண்டும் காற்றடித்தபோது ,ஒரு சருகு புத்தகத்தின் மீது விழுந்து லேசாக ஆடியது. அச்சருகையெடுத்து காம்பைப் பிடித்துத் திருகிப் பார்க்கிறாள். பின் அதைக் கசக்கித் தூக்கியெறிகிறாள்.

அவள் போட்டிருந்த பாவாடைதாவணி அவளைப் போல் சலனமற்று இறுகிக்கிடந்தன அல்லது அவள் உடம்புக்குள் சுருட்டிக் கிடந்தன. காற்று மெதுவாக அவள் தலையை வருடியது. 'வேணாம் போ' என்கிற பாவனையில் காற்றைத் தட்டிவிடுகிறாள்.

புனிதா ஆழ்ந்த உறக்கம் கொள்வதைப் போல கண் மூடியிருந்தாள். சொற்களை, எழுத்துகளைப் புரிந்து கொள்ளமுடியா

வண்ணம் மனக்கதவு ,அறிவுக்கதவு இரண்டும் அடைந்திருந்தது. அதை மீறிக் கடந்து படித்துத் தேர்ச்சியுற வேண்டுமென எண்ணியெண்ணித் தோற்கிறாள் .

அவள் அம்மாவுக்காகவாவது படித்துத் தேற வேண்டும். தன்னை நம்பியே அவள் வாழ்க்கை ஜீவனம். மீன் விற்று வரும் காசில்தான் இவளுக்குப் படிப்புச் செலவு, மற்றைய செலவெல்லாம். வறுமையைக் கடந்து இவள் நன்றாகப் படிப்பதினால் , எல்லா ஆசிரியர்களுக்கும் இவளை ரொம்ப பிடிக்கும். இவள் பிறருக்குத் தானாக வந்து உதவிக்கரம் நீட்டுவாள். எல்லாருடனும் கலகலப்பாக பழகுவாள் . அப்பாற்பட்டவள் தனியாக அந்த வேப்பமரத்தடியில் படிப்பது போல் என்ன செய்கிறாள்?

அவளுள் எழும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் திணறும் ஆசிரியர்களும் அப்பள்ளியில் உண்டு. அப்பேற்பட்டவளுக்கு இன்று என்னாயிற்று? எல்லோரிடத்தும் விலகி இருப்பதுபோல் இருக்கிறாள். அவள் அருகில் சென்றேன்.

"என்ன புனிதா என்னாச்சு உனக்கு"

மௌனமாக தலைக் கவிழ்ந்திருந்தாள்.

"கேக்கறேன்ல .. சொல்லு" ஓவெனக் கதறினாள், கடலில் பெருத்த அலையடிப்பதுபோல் இருந்தது. ஏதோ நடந்திருக்கு என்பதை உணர்ந்து, அவள் கையைப் பிடித்து, " எதுவானாலும் சொல்லு, அம்மா நானிருக்கேன்ல" என்றேன்.

"அம்மா... அந்த எதுத்த வீட்டு மாமா..

ராத்திரி படிச்சிட்டு அப்படியே தூங்கிட்டேன். என்னம்மா கருமாதிக்குப் போயிட்டாங்க... ஐயோ... இருள் கவிஞ்சிப் போச்சேம்மா..." கேவிக் கேவி அழுதாள். "வேற வழியில்லேம்மா.. நான் சாகனும்,. சாகனும்" கதறினாள்..

இப்போது அவளுக்கு வேண்டுவது ஆறுதல் அல்ல, நம்பிக்கை தான் என்பதை யூகித்தேன். பளீரென்று அவள் கன்னத்தில் அறைந்தேன்.

"அடச் சீ... இதுக்கா அழுவற.. "

"எழுந்து மொதல்ல, எத்தனை கொடிய இருளையும் ஓழிச்சிக்கட்டும் சிறு ஒளி... தெரியுமா... நீ ஒளி.."

"திமிர்.. துணிவுகொள்.. காறிஉமிழ்.. நிமிர்ந்து நட..."

"திருட்டுப் பூனை திரும்ப வரும்... கடித்துக் குதறு.. இல்லே, ஒரே வெட்டு... அவ்ளோதான்.. சரியா.. எல்லாம் உதறு... போய் மூஞ்சக்கழுவு.. தைரியப்படு, யார்க்கும் நிலத்தில் அஞ்சா ஞான ஒளி நீ பெண்ணே" நெஞ்சுப் புடைக்கப் பேசி, அவளை எழும்ப வைத்தேன்.

எழுந்தாள், நிமிர்ந்தாள், திரும்பிப் பார்த்து ஒரு புன்னகையை என்மீது தூவினாள்:. பின் நிமிர்ந்து நடந்து சென்றாள். சூரியன் அவளைப் பின் தொடர்ந்து ஓடுவதைக் கண்டு உள்ளம் பூரித்தேன்.

## தனிமனித சுதந்திரம்

தனிமனித சுதந்திரம் என்பது தனிமனித வாதமல்ல. அது சமூகம் என்ற கூட்டமைப்பில் சமூக நலனை அனுசரித்துத் தனிமனிதர் தம்மையும் தமது சமூகத்தையும் உய்விக்கும் நோக்குக்கு நெருக்கமானது. தனிமனித சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் முழுச்சமுதாயத்துக்கும் உள்ள சுதந்திரத்தினின்றும், பிற தனி மனிதர்களது உரிமைகளினின்றும், சுதந்திரத்தினின்றும் பிரித்துப் பார்க்க இயலாதவை.

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

பூராயம் குழுவின் 'வண்டிப் பயணம்' சிறுவர் நாடகத்தில் சில காட்சிகள்









தான் விரும்பாத் தியாகி, உறவுகள் நாடகங்களில் சில காட்சிகள்







தேசிய கலை இலக்கியப் பேரவை கவிஞர் முருகையன்
கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுவரும் சமூக விஞ்ஞான
படிப்புவட்டத்தின் கலந்துரையாடல்களின் சில பதிவுகள்



















